# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 புரட்டாசி / செப்டம்பர் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்

## பொய்மோதல் கொலைகளைப் பொய்யாக்க வேண்டும் தமிழக அரசு!



காவல் துறையினரே கொலை செய்து விட்டு மோதல்-சாவு என்று கதை கட்டுவது தமிழ்நாட்டில் (இந்தியாவிலும்) புதிய செய்தியன்று. இப்போது மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியிலும் அதே கதைதான் தொடர்கிறது.

## உள்ளே…


1. தேசத்தின் குரல் -1
2. களம் காலம் -6
3. செங்காட்டான் குறிப்புகள் -13
4. பேராசிரியர் மருதமுத்து எச்சரிக்கிறார் - 15
5. விவசாயிகளின் எதிர்வினையும் சதிச்செயல் மிக்க படுகொலையும்-20
6. தமிழரா? திராவிடரா? -29
7. குத்தகையில் பொருளாதார வளர்ச்சி? -37
8. ஐயா சுபவீயைக் கூண்டில் ஏற்றுகிறோம்! (2) -47
9. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை -60
10. போலி வறுமை குறைப்பு -76
11. தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு -85




பதிவு எண் :R.Dis. No. 1964/2014



காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் பொய்மோதல் கொலைகள் நடந்தன. மறதி வெள்ளத்தில் மூழ்கிப் போன அந்தக் கொலைநிகழ்வுகளை ஒதுக்கி விட்டால், திமுக ஆட்சிக்கும் அதிமுக ஆட்சிக்கும் வேறுபாடில்லாத தீமைகளில் இந்த பொய்மோதல் கொலைகளும் ஒன்று. முதல்வராகப் பதவி வகித்தவர்களில் கருணாநிதிக்கும் எம்ஜிஆருக்கும், பிறகு கருணாநிதிக்கும் ஜெயலிதாவுக்கும் பொய்மோதல்கொலைகள் தொடர்பாகப் பிணக்கு ஒன்றுமில்லை. சட்டப் புறம்பான பொய்மோதல் கொலைகள் இல்லாமல் ஆட்சி செய்ய முடியாது என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள் என்றே சொல்லலாம்.

முக ஸ்டாலின் பொறுப்பேற்று மக்களுக்குச் சார்பான பல திட்டங்களை அறிவித்துச் சிலவற்றைச் செயலாக்க முற்பட்ட நிலையில் பாசகவும் பாசக அடிமைக் கட்சியான அதிமுகவும் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாகக் கூக்குரலிடத் தொடங்கின.

புதிய ஆளுநர் ஆர் என் ரவி பொறுப்பேற்ற போதே பலவிதமான ஐயங்களும் எழுப்பப்பெற்றன. அவர் காவல்துறைத் தலைவர் சைலேந்திர பாபுவை அழைத்துப் பேசியது என்ன? என்ற வினாவிற்கு யாரிடமிருந்தும் விடை இல்லை. ஆளுநர் விளக்கம் தரவில்லை, தமிழக அரசும் மௌனமாகவே இருந்து விட்டது.



இந்தப் பின்னணியில் சட்டம் ஒழுங்கைக் காப்பதாகக் காட்டிக்கொள்ளவே தமிழ்நாடெங்கும் அதிரடியாக மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தளைப்படுத்தப்பட்டார்கள்.

அண்மையில் தூத்துக்குடியில் துரைமுருகன் என்ற இளைஞர் ”மோதலில்” சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வந்தன. இது பொய்மோதல் படுகொலைதான் என்பதை தற்சார்பான உண்மையறியும் குழுக்கள் கண்டறிந்துள்ளன.

அதே சூட்டில் அக்டோபர் 11ஆம் நாள் திருப்பெரும்புதூரிலும் ஒரு ‘மோதல்’ நடந்து முர்துசா சேக் என்ற வட மாநில இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தேசிய மனிதவுரிமை அமைப்புகளின் கூட்டமைப்பின் (NCHRO) தலைவர் பேராசிரியர் அ, மார்க்ஸ் அவர்களின் தலைமையில் உண்மையறியும் குழு அமைக்கப்பட்டு அவர்கள் முர்துசா சேக் கொலை பற்றி விரிவான தரவுகள் திரட்டிக் கொடுத்துள்ளனர்.

■ திருப்பெரும்புதூர் சுங்கச்சாவடியில் பணி செய்யும் இந்திரா சென்ற அக்டோபர் 10ஆம் நாள் காலை 8 மணியளவில் சென்னை செல்லும் பொருட்டு சுங்கச் சாவடி அருகில் உள்ள EB காலனி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது வடமாநிலத்தவர் இருவர் இந்திராவிடம் சென்று ஏதோ வழி கேட்பவர்கள் போலப் பேசி, அவர் அணிந்திருந்த 5 சவரன் தங்கச் சங்கிலியைத் அறுத்துக் கொண்டு ஓடி விட்டனர். இந்திரா அலறியதைக் கேட்ட அங்கிருந்த ஒரு சிலர் அவர்களை விரட்டிப் பிடிக்க முயன்ற போது, இருவரும் அங்கிருந்த காட்டுப் பகுதியுள் நுழைந்து



மறைந்துள்ளனர். இவர்களை இந்திராவின் உறவினர்களும், ஊர்க்காரர்களும் தேடியுள்ளனர்.

■ இந்நிலையில் இருங்காட்டுக் கோட்டைப் பகுதியில் காவல்துறையினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். தொடர்ந்து அன்று அந்தக் காட்டுப் பகுதியில் என்ன நடந்தது என்பது குறித்தும் முர்துசா சேக்கை 'என்கவுண்டர்' செய்து சுட்டுக் கொன்றது குறித்தும் பெரும்புதூர் காவல் ஆய்வாளர் எஸ். கிருஷ்ணகுமார் தனது முதல் தகவல் அறிக்கையில் கூறுவது எதுவும் நம்பும்படியாக இல்லை..

மொத்தத்தில் இது காவல்துறையின் வழக்கமான 'என்கவுண்டர்' படுகொலைதான் என்று தெரிகிறது.

முர்துர்சா சேக்கைக் கைது செய்து விசாரித்திருக்கலாம். நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனைகள் வாங்கித் தந்திருக்கலாம். சட்டப்புறம்பாகக் கொலை செய்ய வேண்டிய தேவையே இல்லை. அந்த ஆள் நகையைப் பறித்தபோது கூட இந்திராவையோ, தன்னைத் துரத்தியவர்களையோ துப்பாக்கியைக் காட்டி மிரட்டவுமில்லை. காட்டுக்குள் காவல்துறையினரை அரிவாளால் வெட்டினார் என்பது வெறும் புனைவு என்றே தெரிகிறது.

. முர்துசாவால் வெட்டப்பட்ட காவலர் மோகன்ராஜுக்குக் கடுமையான காயம்

பட்டுள்ளதாகவும், அவருக்கு இன்னும் தீவிரமான சிகிச்சை அளிக்க வேண்டி உள்ளது எனவும் காவல்துறை உயரதிகாரிகள் கூறிய போதிலும் காயம்பட்டவரை மருத்துவ மனையில் கூட காட்டாமல் தவிர்க்கின்றனர். உண்மையறியும் குழுவினர் எவ்வளவு முயன்றும் அவரை மருத்துவமனையில் காண முடியவில்லை. .

முர்துசா சேக்கும் மற்றொருவரும் வழிப்பறி செய்து நகையைப் பறித்துச் சென்றனர் என்பது குற்றச்சாட்டு. அவர்களைக் கைது செய்து. வழக்குத் தொடுத்து அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத்தருவதுதான் சரி. இதில் யாருக்கும் மாறுபாடு இல்லை. 300 ஆயுதப் படையினர் தேடுதல்வேட்டையில் ஈடுபட்ட நிலையில் காவல்துறையினர் அவர்களை எளிதில் உயிருடன் பிடித்திருக்க முடியும். கொன்றுதான் பிடிக்க வேண்டும் என்ற தேவை எழவே இல்லை. காவல்துறை சொல்லும் கதை சற்றும் நம்பகத் தன்மை இல்லை. நகைப் பறிப்புச் சம்பவம் நடந்தது அக் 10. அடுத்த நாள் காலையே அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டார்கள் என்றெல்லாம் செய்தி பரப்பப்பட்ட போதே ஏதோ நடக்கப்போகிறது என்கிற அச்சம் ஏற்பட்டது.

இந்திராவிடமிருந்து செயின் அறுக்கப்பட்ட சம்பவம் குறித்த முதல் தகவல் அறிக்கையைத் தரவிறக்கம் செய்து பார்க்க இயலாதவாறு வைக்கப்பட்டுள்ளதன் காரணமும் விளங்கவில்லை.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியிலும் அதிமுக ஆட்சியிலும் நடந்த பொய்மோதல் கொலைகள் இனிமேலும் தொடர்கதை ஆக விடலாகாது. வால்டர் தேவாரம், வெள்ளைச்சாமி என்ற வரிசையில் சைலேந்திர பாபு ஒரு ‘என்கவுண்டர் ஸ்பெசலிஸ்ட்’ என்பது தெரிந்த செய்திதான். ஆனால் இந்தச் சீருடைக் கொலைப்படையைக் கட்டுப்படுத்தவும் கட்டிப்போடவுமான மனத்திட்பம் அரசியல் தலைமைக்குத் தேவை. இது முக ஸ்டாலின் ஆட்சியா? சைலேந்திரபாபு ஆட்சியா? என்று கேட்கும் நிலை ஏற்பட்டு விடக் கூடாது. சைலேந்திர பாபு ஆனாலும், ஆர் என் ரவியே ஆனாலும் தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்தது அவர்களுக்கு அல்ல, முக ஸ்டாலினுக்குத்தான்!

பொய்மோதல் கொலைகளுக்கு மு.க. ஸ்டாலின் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் கோருகிறோம். இந்த வகையில் அவர் ஜெயலிதாவிடமிருந்து மட்டுமல்லாமல் கருணாநிதியிடமிருந்தும் மாறுபட்ட முறையில் ஆட்சி புரிந்து காட்ட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

## களம் காலம்

### சென்னை கேபி பூங்கா மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்




கே.பி. பார்க் குடிசை மாற்று வாரியக் கட்டடத் தரம் குறித்த ஐஐடி ஆய்வுக்குழுவின் அறிக்கையை தமிழக அரசே முழுமையாக வெளியிடு!

குடியிருப்புக்கு மக்கள் பங்களிப்புத் தொகையாக ரூ.1.5 இலட்சம் கட்ட நிர்பந்திக்கும் அரசாணையை உடனடியாக நீக்கம் செய்திடு!!

உள்ளிட்ட கேபி பூங்கா குடிசை மாற்று வாரியத் திட்டப் பகுதி மக்களின் கோரிக்களை முன்வைத்து 21.10.2021 வியாழன் காலை 10 மணிக்குச் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்




கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மக்கள் இயக்கங்கள் மற்றும் சனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களும் பல்வேறு கட்சியினரும் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் தலைமைக் குழு உறுப்பினர் மகிழன் உரையாற்றினார்.

**"தமிழ் இந்து" கருத்தரங்கம்**

தமிழ்த் தேச நடுவம் சார்பில் 17.10.2021 ஞாயிறு மாலை 4 மணிக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் "தமிழ் இந்து -- தமிழர்களைச் சாதியச் சனாதனப் படுகுழியில் தள்ளும் பார்ப்பனிய அரசியல்" என்ற பொருளில் கருத்தரங்கு நடைபெற்றது. தோழர் பொழிலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் தோழர்கள் விடுதலை இராசேந்திரன், வாலாசா வல்லவன், பேராசிரியர் த. செயராமன் கருத்துரை வழங்கினர். த தே வி இ பொதுச்செயலாளர் தோழர் தியாகு காணொலி வாயிலாக உரையாற்றினார்.

**தோழர் ஜெயநேசன் நினைவேந்தல்**

சாதி ஒழிப்பு விடுதலை முன்னணித் தோழர் ஜெயநேசன் நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னை திருமழிசையில் அவருடைய வீட்டில் 02.10.2021 அன்று நடைபெற்றது. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் மகிழன் கலந்து கொண்டு உரையாற்றினார்.


செவ்வணக்கம்
தோழர். ஜெயநேசன் { எ } மனோகரன்
தோற்றம்: 12 / 09/ 1961 | மறைவு: 18 / 9 / 2021
'தனக்காக வாழ்ந்தவர் மரணம் இறகை விட லேசானது; மக்களுக்காக மடிந்தவர் மரணம் மலையை விடக் கனமானது. '– தோழர் மாவோ
சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி
+91- 805 615 9801


பொது உரையாடல்
சித்திரவதைக் கூடமான இலங்கைத் தமிழர் சிறப்பு முகாமை இழுத்து மூடு . . .
9 அக்டோபர் 2021
சனிக்கிழமை
மாலை 5.30
ஸ்ரீ சண்முக திருமண மண்டபம்
புத்தூர், திருச்சி
தலைமை
வழக்கறிஞர் கென்னடி
தமிழ்த்தேச மக்கள் முன்னணி
கருத்துரை
தோழர் தியாகு
ஒருங்கிணைப்பாளர்-JAACT
திரு கொளத்தூர் மணி
திராவிடர் விடுதலைக் கழகம்
வழக்கறிஞர் ஹென்றி திபேன்
மக்கள் கண்காணிப்பகம்
வழக்கறிஞர் ப.பா. மோகன்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
வழக்கறிஞர் அஜிதா
சென்னை உயர்நீதிமன்றம்
திரு கண. குறிஞ்சி
தமிழ்நாடு மக்கள் உரிமைப் பேரவை
திருமிகு ஆனந்தி சசிதரன்
செயலாளர் நாயகம், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் [லண்டன்]
திரு கந்தையா
தாயகம் திரும்பியோர் பேரவை
திரு துரை நேசன்
தமிழகவாழ் ஏதலியர் மன்றம்
முனைவர் குழந்தைசாமி
சென்னை
நன்றியுரை
திருமிகு மீ.த. பாண்டியன்
செயலாளர் – JAACT
இணைய வழியில் இணைய zoom User ID: 820 5719 8702 - Passcode: JAACT
STOP TORTURE
காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் - JAACT
99943 68571 94430 79552

## சிறப்பு முகாமை இழுத்து மூடு!

காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் சார்பில் "சித்திரவதைக் கூடமான இலங்கைத் தமிழர் சிறப்பு முகாமை இழுத்து மூடு!" என்ற தலைப்பில் 09.10.2021 அன்று திருச்சியை மையமாகக் கொண்டு இணையவழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. த தே வி இ பொதுச்செயலாளர் தோழர் தியாகு கலந்து கொண்டு உரையாற்றினார்.

## ராபியா சைபிக்கு நீதி!

**குடந்தை**

-






தில்லி பாதுகாப்புப் பெண் காவலர் ராபியா சைபி கூட்டுப் பாலியல் படுகொலையை கண்டித்து, இளைஞர் அரண் சார்பில் 06.09.2021 அன்று காலை 10.30 மணிக்கு குடந்தை காந்தி பூங்காவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் சைமன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர் ஜெய பாண்டியன், தோழர்.மனோகரன் CPI (ML), தோழர்கள் ராஷித், ஹாலித் அலி (SDPI), ப்ரியா (அக்னிக் குஞ்சுகள் அறக்கட்டளை),

திருநங்கை மீரா, சமூக ஆர்வலர் தமிழினியன் ஆகியோர் கலந்து கொண்டனர்..

ஆர்ப்பாட்டத்தில் ...

பெண்ணின் பெற்றோரின் கோரிக்கையை ஏற்று வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்று!

பெண்ணின் உடலை மறு உடற்கூறாய்வுக்கு உட்படுத்து!

படுகொலைக்குப் பொறுப்பேற்று அமித்ஷாவே பதவி விலகு!

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்!

போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

-

<u>பொள்ளாச்சி</u>



ராபியா சைபி படுகொலைக்கு நீதி வேண்டி இளைஞர் அரண் சார்பில் 13.09.2021 அன்று மாலை 4 மணிக்கு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
ராபியா சைபி படுகொலை குறித்து தில்லி உயர்நீதிமன்ற வழிகாட்டுதலுடன் கூடிய புலனாய்வு நடத்திடு!
படுகொலை செய்யப்பட்டதன் முழுப் பின்னணியையும் கண்டறிந்து வெளிப்படுத்த முறையான நீதிவிசாரணைக்கு ஆணையிடு!
படுகொலைக்குப் பொறுப்பேற்று அமித்சாவே பதவி விலகு! போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பொள்ளாச்சி இளைஞர் அரண் அமைப்பாளர் தோழர் சி.இனியன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் த தே வி இ சார்பில் வழக்கறிஞர் தி. சுதா காந்தி உரையாற்றினார்.

## சமூகநீதி நாள்

தந்தை பெரியாரின் 143 ஆம் பிறந்தநாளில் ஒவ்வோராண்டும் பெரியார்ப் பிறந்த நாளை சமுகநீதி நாளாகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதையொட்டி முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம், சிங்காரவேலர் பெரியார் பேரவை, திராவிடர் விடுதலை கழகம் மற்றும் இளைஞர் அரண் சார்பில் செப்டம்பர் 17 காலை 8 மணிக்கு போரூரில் உறுதியேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்து. சிங்காரவேலர் பெரியார் பேரவைத் தோழர் செல்வம் நிகழ்வை தலைமையேற்று நடத்தி வைத்தார். தொடக்க உரையாக மழலை அஸ்வதா பெரியார் பற்றிப் பேசினார். அம்பேத்கர் பொதுவுடைமை முன்னணித் தோழர் மோகன்,உரையாற்றினார். முஎகச தோழர் சிகரம் செந்தில்நாதன் சிறப்புரை ஆற்றினார். சென்னை இளைஞர் அரண் பொறுப்பாளர் தோழர் நாசர் நன்றி கூறிக் கூட்டத்தை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகப் போராடுகிற போராட்ட நாளாக இந்த நாளை உருவாக்குவோம் என்று அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டதோடு, முழக்கங்களும் எழுப்பப்பட்டன. மேலும் பொது மக்களுக்கு இனிப்பும் "பெண் ஏன் அடிமையானாள்" என்ற புத்தகமும் வழங்கப்பட்டன.


தி சென்
1:41 pm


தி செ
1:41 pm

## செங்காட்டான் குறிப்புகள்

### என்று முடியும் இந்த நடுக்கடல் படுகொலைகள்?





சிங்களக் கடற்படையின் கொலைவெறிக்கு மேலுமொரு தமிழ் மீனவர் உயிர்ப் பலி ஆகியுள்ளார். சென்ற 2021 அக்டோபர் 18ஆம் நாள் திங்கள் கிழமை விசைப்படகில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த கோட்டைப்பட்டினம் மீனவர்கள் ராஜ்கிரண், சேவியர், சுகந்தன் ஆகியோரது படகின் மீது இலங்கைக் கடற்படையின் ரோந்துக் கப்பலை மோதச் செய்துள்ளனர். இந்த தாக்குதலில் ராஜ்கிரண் உயிரிழக்க, கடலில் தத்தளித்த மற்ற இருவரையும் சிங்களப்படையினர் சிறைப்பிடித்தனர். இலங்கை அரசு தமிழ்நாட்டு மீனவர்கள் இருவரைக் கைது செய்திருப்பதாகவும் ஒருவரைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் அறிவித்தது. இது பொய் என்பது இப்போது தெரிந்து விட்டது. ராஜ்கிரண் உடல் வந்து சேர்ந்து விட்டது. அவரைச் சித்திவதை செய்து சுட்டுக் கொன்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கோட்டைப்பட்டினம் மீனவர் படுகொலைச் செய்தி வந்தவுடன் மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன் காந்தி, தமிழக மக்கள் புரட்சிக் கழகத் தலைவர்







தோழர் அரங்க. குணசேகரன், விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் தோழர் குடந்தை அரசன் ஆகியோர் விரைந்து சென்று துயருற்ற மக்களை நேரில் சந்தித்ததோடு, மீனவர்களின் போராட்டத்திலும் பங்கேற்றனர். மே17 இயக்கத் தோழர் பிரவீன் தோழமை அமைப்புகளை ஒருங்கிணைத்துப் போராட்டம் செய்துள்ளார். பாஜகவினரும் காவல் துறையும் எல்லா வகையிலும் இடையூறு செய்துள்ளனர். மீனவர் பக்கம் நின்று போராடிய இயக்கங்களுக்கும் தலைவர்களுக்கும் பாராட்டும் வாழ்த்தும்.

அவசரமாகப் புதைக்கப்பட்ட ராஜ்கிரண் உடலைத் தோண்டியெடுத்து மீள்சடலக் கூறாய்வு செய்யவும், சிங்களக் கடற்படையினர் மீது கொலை வழக்குப் பதியவும் வேண்டும்.

தொடரும் நடுக்கடல் படுகொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் திசையில் தமிழ் மக்களின் போராட்டங்களைத் தெளிவான திசையில் முன்னெடுக்க வேண்டும்.

*பேராசிரியர் மருதமுத்து எச்சரிக்கிறார்:*

## பாதுகாப்புப் படைகளின் தலைவராக பிபின் ராவத்: ஆபத்தான திசையில் மோடியின் அடுத்த அடி!

*– மருதமுத்து -*



இந்தியாவின் முப்படைகளையும் இணைக்கும் உச்சமட்ட அமைப்பின் தலைவராக உள்ளவர் ஜெனரல் பிபின் ராவத்.

இந்தப் பதவியின் பெயர் Chief of Defence Staff (சி.டி.எஸ்)

இது பிரதமர் மோடியால் உருவாக்கப்பட்ட புதிய பதவி ஆகும்.

இப்பதவி வகிப்பவரான பிபின் ராவத் மோடியால் மிகுந்த கவனத்தோடு தேர்ந்தெடுக்கப் பட்டவர். இதற்கு முன் இந்திய தரைப்படைத் தலைவராக இருந்தவர்.

இத்தகைய மிகப் பெரிய பொறுப்பை வகித்துவரும் பிபின் ராவத் அடிக்கடி உதிர்க்கும் கருத்துகள் மிகவும் அதிர்ச்சிகரமானவையாக இருக்கும்.

அவை மோடியின் போக்கு எப்படி இருக்கப் போகிறது என்று நமக்கு ஓரளவு

உணர்த்துபவையாகவே உள்ளன. அந்தப் போக்கு ஆபத்தான திசையில் உள்ளது என்பதையும் இவரது கருத்துகள் மூலம் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இதற்கு முதலில் ஓர் எடுத்துக் காட்டு–

Thelogicalindian.காம் 29 December 2019-----

“Bipin Rawat had stirred a very serious row in 2018 when he remarked that the All India United Democratic Front (AIUDF) has been growing faster than the BJP in Assam because of the support of Muslims, with Pakistan and China pushing Bangladeshi migrants into the North-east part of the country to destabilise India. The BJP said that the army chief needs to be saluted for his comment.”

அதாவது–

2018இல் இவர் கூறினார்--

“அசாம் மாநிலத்தில் பாஜகவைக் காட்டிலும் வேகமாக அனைத்திந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி வளர்ந்து வரக் காரணம் முஸ்லிம்களே.

பாகிஸ்தானும், சீனாவும் பங்களதேசத்திலிருந்து முஸ்லிம் அகதிகளை அசாம் மாநிலத்துக்குள் நுழைத்து அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி வருகிறார்கள்.”

இவ்வாறு அன்றைய தரைப்படைத் தலைவராக இருந்த பிபின் ராவத் கூறியதைப் பாஜகவினர் வரவேற்றனர்.

இவ்வாறு, இந்திய ராணுவத்தின் தலைவர் பாஜகவுக்கு ஆதரவாகவும், இஸ்லாமியர்க்கு எதிராகவும் நேரடியாக அரசியலில் தலையிட்டுள்ளார்.

அத்துடன் இஸ்லாமியரை பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் இணைத்து அவதூறு செய்துள்ளார். இவர் இந்திய ராணுவத்தின் தலைவரா, அல்லது இந்துத்துவா ராணுவத்தின் தலைவரா? இத்தகைய மனிதரைத்தான் மோடி அடுத்து முப்படைத் தலைவராகவும் ஆக்கியுள்ளார்.

இவர் பற்றித் தெரிந்துகொள்ள மேலும் சில எடுத்துக் காட்டுகள்–

(தகவல்கள்--Hindustantimes. காம் 12 Aug 2020) --- இவர் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை எதிர்த்துப் போராடியவர்களைக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளார். இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் வன்முறையாளர்கள் என்றும், உடமைகளுக்குத் தீ வைப்பவர்கள் என்றும் ஏசினார்.

அடுத்து,

காஷ்மீரில் போராடுபவர்களை அடக்க வேண்டி ராணுவத்தினர் நடவடிக்கைகள் மேற்கொண்ட போது மேஜர் கோகோய் என்பவர் தனது ஜீப் வாகனத்தின் முகப்பில் ஒரு காஷ்மீர்க்கார

அப்பாவியைக் கட்டிவைத்துக் கொண்டு ரோந்து போனார்.

போராட்டக்காரர்கள் எறியும் கற்களுக்கு அந்த அப்பாவி மனிதக் கேடயமாக்கப்பட்டு இரையாகும் நிலையை இவர் உருவாக்கினார்.

போரில் ஈடுபடாத எவரையும் இப்படிப் பயன்படுத்துவது போர்க்குற்றமாகும் அல்லவா? இத்தனைக்கும் அது போர் கூட அல்ல. வெறும் கல்லெறியும் இளைஞர்கள்தான்.

இந்தக் கொடுஞ்செயலுக்குப் பரவலாக எதிர்ப்பு எழுந்தது.

ஆனால், ஜெனரல் ராவத் என்ன செய்தார், தெரியுமா?

அனைவர்க்கும் அதிர்ச்சியூட்டும் விதத்தில் கோகோய் என்ற அந்த அதிகாரிக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார்.

அந்த கோகோய் தொடர்ச்சியாகக் கலவரங்களை வெற்றிகரமாக ஒடுக்கிவந்துள்ளார் என்பதற்காக இந்தச் சான்றிதழாம்!

இதையும் விட அதிர்ச்சி தரும் இன்னொரு செய்தி

இதோ–

“In 2017, Rawat’s comments against stone pelters in Kashmir triggered a row. “In fact, I wish these people, instead of throwing stones at us, were firing weapons at us. Then I would have been happy. Then I could do what I (want to do),” he said.

2017இல், காஷ்மீரில் நவீன ஆயுதங்கள் தரித்த இந்திய ராணுவத்தினர்க்கு எதிர்ப்பு தெரிவித்து வெறும் கற்களை எறிந்து போராடும் மக்களைப் பற்றி இவர் கூறியது–

“இந்தக் காஷ்மீரிகள் எங்கள் (ராணுவத்தினர்) மீது கற்களை எறிவதற்கு பதில் துப்பாக்கிகளால் சுடவேண்டும் என்பது என் விருப்பம். அவ்வாறு செய்தால் நான் மகிழ்வேன். அப்படி நடந்தால்தான் நான் செய்ய விரும்புவதைச் செய்ய முடியும்.”

அதாவது, “இந்தப் போராட்டக் காரர்கள் துப்பாக்கிகளை மட்டும் பயன்படுத்தியிருந்தால் நான் என் விருப்பம்போல் சுட்டுத் தள்ளி துவம்சம் பண்ணியிருப்பேன்.”

“அடடா, கல்லை எறிவதோடு நிறுத்திக் கொள்கிறார்களே இந்தக் காஷ்மீர் இளைஞர்கள், என் வலிமையைக் காட்ட ஒரு வாய்ப்பு தரக்கூடாதா?” இவ்வாறு ஏங்குகிறார் இந்த மாபெரும் ராணுவத்தின் தலைவர்.

அடுத்து–

“He also said, “Adversaries must be afraid of you and at the same time your people must be afraid of you. We are a friendly army, but when we are called to restore law and order, people have to be afraid of us,” he said.

அதாவது–

ஜெனரல் ராவத் கூறினார்– 'எதிரிகள் மட்டுமல்ல, மக்களும் ராணுவத்திடம் அச்சம் கொள்ளவேண்டும். நம் ராணுவம் மக்களிடம் நேசம் கொண்டதுதான். ஆனால் சட்டம், ஒழுங்கை மீட்டெடுக்கும் நடவடிக்கையின் போது மக்கள் ராணுவத்திடம் அஞ்சத்தான் வேண்டும்."

நண்பர்களே,

உள்நாட்டில் பல காரணங்களால் சட்டம், ஒழுங்கு குலையும் போது இப்படிப்பட்ட வழிகாட்டுதலை ராணுவத் தலைமையே தருகிறதென்றால் என்ன விளைவுகள் ஏற்படும்?

“மக்களை எப்படி வேண்டுமானாலும் ஒடுக்குங்கள், எந்த அக்கிரமங்களையும் செய்யுங்கள், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்,” என்று முன்கூட்டியே உத்தரவாதம் தரும் அறிவிப்பல்லவா இது?

மோடி நியமித்துள்ள முப்படைத் தலைமை ஆலோசகர் கொண்டிருக்கும் மனப்பான்மை இது என்றால் மோடியின் மனப்பான்மையும் இதுவே என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

இந்த ஜெனரல் தேசத்தின் பாதுகாப்பு குறித்து (2017ல்) வெளியிட்டுள்ள நிலைப்பாடு என்ன தெரியுமா?

தகவல்– news18.காம் 10 June 2017—

“India Ready for 'Two-and-a-half Front War', Says Army Chief Bipin Rawat

“India is ready for a ‘two-and-a-half front war’, Army Chief General Bipin Rawat has said referring to Pakistan, China and the internal conflicts, ANI reported.”

அதாவது-- “இந்தியா இரண்டரை முனைகளில் வரக்கூடிய தாக்குதல்களை எதிர்கொள்ள முழு தயாரிப்போடு உள்ளது.”

இவற்றில் ஒரு முனை மேற்கில் பாகிஸ்தானை எதிர்கொள்வது. இதுவே முதன்மையானது.

இரண்டாவது முனை வடக்கே சீனாவை எதிர்கொள்வது.

இதற்கடுத்து உள்ள அரை முனை என்பது இந்தியாவின் உள்ளேயிருக்கும் தேசவிரோத சக்திகளை எதிர்கொள்வது.

பாகிஸ்தான் தூண்டுதலின் காரணமாக இந்தியாவுக்குள் சமூக ஊடகங்கள் மூலம் பொய்த் தகவல்கள் பரப்பப்பட்டுப் பல முஸ்லிம் இளைஞர்கள் பயங்கரவாதிகளாக மாற்றப் பட்டு வருகின்றனர்.

எனவே, வெளிப்பகையான பாகிஸ்தான் மற்றும் சீனாவையும், உட்பகையான பயங்கரவாத

அமைப்புகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு எதிர்கொண்டு வெல்லும் ஆற்றல் இந்தியாவுக்கு உள்ளது என்று மார் தட்டுகிறார் ஜெனரல் ராவத்.

இந்தியப் பெருநாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பான படைத்தலைவர் இந்தியாவின் வலிமை குறித்து மக்களிடம் உத்தரவாதம் அளிப்பது முற்றிலும் சரியான செயல்தான். ஆனால் ஜெனரல் ராவத் அத்தகைய பொறுப்பு மிக்க அதிகாரியா என்பதில் குழப்பம் உள்ளது.

பிரதமராக மோடியும், ஆளும் கட்சியாக பாஜகவும், ஆட்டிவைக்கும் சக்தியாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் இருக்கும் நிலையில் இப்படிப்பட்ட மனப்பாங்கு படைத்த ஒருவர் தரைப்படைக்கு மட்டுமல்ல, முப்படைக்கும் தலைவராக மோடியால் நியமிக்கப் பட்டு செயல்பட்டு வருவது அச்சமளிப்பதாக உள்ளது.

இந்திய மக்களை இவர்கள் போர்ச் சுழலுக்குள் தள்ளிவிடக் கூடாது. அதிலும் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய மூன்று நாடுகளிடமுமே அணு ஆயுதங்கள் ஏராளம் இருந்து வரும் நிலையில் நிதானமே தலையாய தேவை.

அத்துடன் உள்நாட்டில் பயங்கரவாதத்தை ஒடுக்கும் முயற்சியை அநீதியாக விரிவு படுத்தி ஒட்டுமொத்தமாக இஸ்லாமிய மக்களை ஒடுக்கும் தேசத்துரோகச் செயலையும் இவர்கள் செய்து விடக் கூடாது.

ஆனால் மோடி அரசு இந்த அழிவுப்பாதையில்தான் நடைபோட்டு வருகிறது. ஜெனரல் ராவத் குறிப்பிட்ட இரண்டரை முனைகளில் மோடியரசு முதலாவதாக பாகிஸ்தானோடுள்ள முரண்பாட்டைக் கூர்மைப் படுத்தி வருகிறது.

இரண்டாவதாக சீனாவையும் முழுமையாகப் பகைத்துக் கொள்வதில் அமெரிக்காவைப் பின்பற்றி வருகிறது.

இந்நிலையில் அபாயச் சங்கு ஒலிக்கும் இன்றைய ஆப்கானிஸ்தானில் குறைந்த பட்ச அமைதி நிலவி, கோடிக் கணக்கில் மக்கள் பட்டினியால் சாகாமலிருக்க இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் உதவ வில்லையென்றால் தாலிபான்+அல் கய்தா+ பாகிஸ்தான் ஆகிய கூட்டுச் சக்தி மீண்டும் விஸ்வரூபம் எடுத்து, பயங்கரவாதத் தீயை இந்தியா முழுதும் பரப்பும்.

இதற்கான அபாய அறிகுறிகள் தமிழகத்திலும் வெளிப்பட்டு வருகின்றன. இந்த அபாயங்களைக் காட்டி திமுக ஆட்சியை பலவீனப்படுத்தும் உள்நோக்கமும் மத்திய அரசுக்கு உள்ளது என்பதே எனது கணிப்பு. ஆளுநர் ஆர்.என். ரவியின் நியமனம்கூட இந்தத் திட்டத்துக்கேற்பவே நிகழ்ந்துள்ளது.

**லக்கிம்பூர் கெரி:**

## விவசாயிகளின் எதிர்வினையும் சதிச்செயல் மிக்க படுகொலையும்

*சிலம்புச் செல்வன்*




"விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்குவோம்! போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு இரண்டே நிமிடங்களில் பாடம் கற்பிப்போம்!"

இது ஏதோ திரைப்படங்களில் தீமைகளின் மொத்த உருவமாக இருக்கும் வில்லன் பாத்திரம் பொறி பறக்கப் பேசும் வசனம் போல அல்லவா இருக்கிறது?

இதைப் பேசியது யாரோ அல்ல, இந்திய அரசமைப்புச் சட்டத்தை செயலாக்கிச் சட்டத்தின்




ஆட்சியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பில் உள்ள ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் மிஷ்ரா ஆவார்.

'ஒவ்வொரு வினைக்கும் ஒரு எதிர்வினை உண்டு' என்பது போல இந்தப் பேச்சு கடந்த பத்து மாதங்களாக வெயில், மழை, குளிர் எதையும் பொருட்படுத்தாமல் தலைநகர் தில்லியிலும் அதன் அண்டை மாநிலங்களிலும் வேளாண் சட்டங்களை நீக்கக் கோரிப் போராடி வரும் விவசாயிகளை கோபப்படுத்தியது. எனவே அமைச்சருக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது என்று விவசாயிகள் முடிவெடுத்தனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் லக்கிம்பூர் கெரி பன்பீர்பூர்தான் அஜய் குமார் மிஷ்ராவின் சொந்த ஊராகும். இந்த லக்கிம்பூர் மாவட்டத்தில் ரூ.117 கோடி மதிப்பிலான 165 திட்டங்களைத்




தொடங்கி வைக்கும் அரசு நிகழ்வுகள் நடை பெற்றன. அவற்றில் ஒரு நிகழ்ச்சி பன்பீர்பூர் கிராமத்திலும் நடை பெற்றது. இந்த நிகழ்வில் உத்தரப் பிரதேச மாநிலத் துணை முதலமைச்சர் கேசவ பிரசாத் மௌரியா, அஜய் குமார் மிஷ்ரா ஆகிய இருவரும் கலந்து கொள்ள வந்தனர். அவர்கள் இருவரின் வருகைக்கும் எதிர்ப்பு தெரிவித்தும் ஒன்றிய அரசின் 3 வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற வலியுறுத்தியும் சென்ற அக்டோபர் 3ஆம் நாள் விவசாயிகள் கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

துணை முதல்வர் கேசவ பிரசாத் மௌரியா ஹெலிகாப்டர் மூலம் வரத் திட்டமிட்டிருந்தார். இதற்காக மகாராஜா அக்ரஸேன் விளையாட்டு திடலில் ஹெலிபேட் அமைக்கப்பட்டிருந்தது. இந்தத் திடலை ஆயிரக்கணக்கான விவசாயிகள் சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் மௌரியா ஹெலிகாப்டர் பயணத்தைக் கைவிட்டு சாலை வழியாக நிகழ்விடத்திற்கு வந்தார்.

விவசாயிகளும் தங்கள் போராட்டத் திட்டத்தை மாற்றிக் கொண்டு சாலை வழியாக ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலம் பன்பீர்பூர் - திகோனியா சாலை வழியாகச் சென்றது.

ஊர்வலத்தின் பின்புறமாக அஜய் மிஷ்ராவின் மகன் ஆஷிஷ் மிஷ்ரா பதினைந்துக்கு மேற்பட்ட நபர்களுடன் அவரது உறவினர்கள் மற்றும் அடியாட்களுடன் மூன்று ஊர்திகளில் வந்துள்ளார். வந்த வேகத்தில் திட்டமிட்டு ஊர்வலத்தின் மீது வாகனத்தை மோதினார். அத்துடன் துப்பாக்கியாலும் சுட்டுள்ளார். இதில் லவ்பிரீத் சிங் (20), குர்விந்தர் சிங் (19), தல்ஜீத் சிங் (35), நச்சட்டர் சிங் (60) ஆகிய 4 விவசாயிகள் கொல்லப்பட்டனர். 15 விவசாயிகள் காயமுற்றனர். நிகழ்வைப் பதிவு செய்து கொண்டிருந்த ஏபிபி செய்தி நிறுவன ஊடகர் ராமன் காஷ்யப்பும் இந்தக் கும்பலால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர்களுடன் சேர்த்து விவசாயிகளின் எதிர் வன்முறையில் 4 பேர் என மொத்தம் 9 பேர் கொல்லப்பட்டனர்.

**விவசாயிகள், எதிர்கட்சிகளின் போராட்டங்களும்**

**அரசின் அடக்குமுறையும்**

இந்தப் படுகொலை விவசாயிகள் நடுவில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சம்யுக்த கிசான் மோர்ச்சா, பாரதிய கிசான் யூனியன் ஆகியவை உத்தரப் பிரதேசத்திலும் இந்திய ஒன்றியம் முழுவதிலும் போராட்டங்கள் அறிவித்தன. விவசாயிகளின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த உத்தரப் பிரதேச அரசு அப்பகுதி முழுவதும் 144 தடையாணை பிறப்பித்தது. இணையத்தைத் தடை செய்தது. அமைச்சர் அஜய் குமார் மிஷ்ரா உள்துறை இணை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்படவேண்டும், அமைச்சர், அவர் மகன் ஆஷிஷ் மிஷ்ரா இருவரும் கைது செய்யப்பட வேண்டும், உச்சநீதிமன்றக் கண்காணிப்பில் அவர்கள் வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை விவசாயிகள் முன்வைத்தனர்.

அன்று இரவே விவசாய சங்கத் தலைவர் ராகேஷ் திகாயத் தலைமையில் 300க்கு மேற்பட்ட

விவசாயிகள் அணிதிரண்டு திகோனியா சென்றனர். உத்தரப் பிரதேசக் காவல்துறையினர் சாலைகளில் தடுப்புகள், வாகன சோதனைகள் உள்ளிட்ட கடுமையான தடைகளை ஏற்படுத்தி, விவசாயிகளைத் தடுக்க முயன்றனர். இந்தத் தடைகளையும் தாண்டி அவர்கள் படுகொலை நடந்த பகுதிக்கு சென்றனர். படுகொலை நடந்த மறுநாள் உத்தரப் பிரதேசத்திலும் தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய ஒன்றியத்தின் பிற பகுதிகளிலும் மாவட்ட அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து இன்றுவரை பல்வேறுவிதமான வடிவங்களில் விவசாயிகள் நீதி வேண்டித் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதே காலத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாக எதிர்கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தீவிரமான போராட்டத்தில் இறங்கினர். லக்கிம்பூர் கெரி செல்ல முயன்ற சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவையும் சமாஜ்வாதி, காங்கிரஸ், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர்கள் பலரையும் வீட்டுச் சிறையில் வைத்தது உபி அரசு. இதைக் கண்டித்து அகிலேஷ் 'தர்ணா'வில் ஈடுபட்டார்.

நிகழ்வு நடந்த மறுநாள் அக்டோபர் 4ஆம் நாள் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா லக்கிம்பூர் கெரி புறப்பட்டுச் சென்றார். அவர் செல்லும் வழியிலேயே உத்திரப் பிரதேசக் காவல் துறையால் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார். சீதாபூர் அருகே 36 மணி நேரம் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகல் உபி வந்தார் அவரை லக்னோ விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்தியது உபி காவல் துறை. இதையடுத்து அவர் விமான நிலையத்திலேயே தர்ணா போரட்டத்தில் ஈடுபட்டார். பஞ்சாப் துணை முதல்வர் சுகீந்தர் லக்கிம்பூர் செல்லும் வழியில் சஹரான் பூரில் தடுத்து நிறுத்தப்பட்டார்.

நீண்ட போராட்டத்திற்கு பிறகே; காங்கிரஸ் கட்சி ராகுல் உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட குழுவை அனுமதிக்க வேண்டும் என்று உபி அரசுக்குக் கடிதம் எழுதிய பிறகே உபி அரசானது ராகுல், பிரியங்கா உள்ளிட்டவர்கள் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரைச் சந்திக்க அனுமதி அளித்தது. ஆனால் தாங்கள் ஏற்பாடு செய்யும் ஊர்தியில்தான் செல்ல வேண்டும் என்று காவல்துறை நிபந்தனை விதித்தது. இதனால் மீண்டும் ராகுல் காந்தி, சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகல், பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் சன்னி ஆகியோர் லக்னோ விமான

நிலையத்திலேயே 'தர்ணா' போராட்டத்தில் ஈடுபட்டனர். இறுதியாக காவல்துறை அவர்கள் விருப்பத்திற்கே அனுமதித்தது. பின்னர் ராகுல், பிரியங்கா இருவரும் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இப்படி ஒரு மூர்க்கமான தொடர் அடக்குமுறையில் ஈடுபட்டது யோகி ஆதித்யநாத் அரசு. விவசாயிகள் படுகொலையைக் கண்டித்தும் அதன் பிறகான உபி அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்தும் சரத் பவார், மம்தா பானர்ஜி, மு.க.ஸ்டாலின், உத்தவ் தாக்கரே, அரவிந்த் கெஜிரிவால் உள்ளிட்ட பலரும் கடும் கண்டனம் தெரிவித்தனர். மராட்டியத்தை ஆளும் "மகா விகாஸ் அகாதி" கூட்டணி அக்டோபர் 11 அன்று மாநிலம் முழுக்கப் பொது வேலைநிறுத்தம் நடத்தியது.

**கொலைகாரர்களுக்குத் துணைபோன ஆதித்யநாத் அரசும், உச்சநீதிமன்றத்தின் கண்டிப்பும்**

ஒரு பக்கம் அடக்குமுறை நடவடிக்கைகளை ஏவிக் கொண்டே மறுபக்கம் விவசாயிகளை அமைதிப்படுத்தும் சமரச நடவடிக்கைகளையும் யோகி அரசு மேற்கொண்டது. அப்படிச் செய்து கொண்டே குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வேலைகளில் இறங்கியது. நவராத்திரி படத்தில் சிவாஜி கணேசன் ஒரே நேரத்தில் ஒன்பது வேடங்களில் நடித்தது போல யோகி அரசானது ஒரே நேரத்தில் பல முகங்களைக் காட்டியது.

கொல்லப்பட்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு 45 லட்சம் பண உதவி, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை, காயமுற்றோருக்கு 10 லட்சம் பண உதவி என அரசு அறிவித்தது. ஆஷிஷ் மிஷ்ரா உள்ளிட்ட 13 பேர் மீது 8 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தது. டிஐஜி உபேந்திர அகர்வால் தலைமையில் 9 பேர் கொண்ட சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைத்தது. பிரதீப் குமார் ஸ்ரீவஸ்தவா என்ற ஓய்வு பெற்ற நீதிபதியை ஒற்றை உறுப்பினராக கொண்டு ஒரு விசாரணை ஆணையத்தை நியமித்தது. இந்த ஆணையம் இரண்டு மாதத்தில் விசாரணையை முடிக்கும் என்று கூறியது.

இவற்றைச் செய்து கொண்டே மற்றொரு புறம் ஆஷிஷ் மிஸ்ராவைக் காப்பாற்றும் வேலையையும் யோகி செய்ய ஆரம்பித்தார். எந்த ஆதாரமும் இன்றி எதிர் கட்சியினர் மீது வழக்குப் பதிவு செய்தவர்; கைது செய்தவர்; வீட்டுக் காவலில் வைத்தவர் ஆஷிஷ் மிஷ்ரா மீது ஆதாரமின்றி நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறினார். ஆனால் இதற்கு முரண்பாடாக அவரே அக்டோபர் 4ஆம் நாள் ஆஷிஷ் மிஸ்ரா மீது வழக்குப் பதிவு செய்திருந்தார். வழக்குப்

பதிவுக்குப் பயன்பட்ட ஆதாரம் கைது செய்ய எப்படிப் பயன்படவில்லை என்பதை அவர் தான் விளக்க வேண்டும்.

இதற்கிடையில் வழக்கறிஞர்கள் சிவக்குமார் திரிபாதி, சி.எஸ்.பாண்டா ஆகியோர் உச்சநீதிமன்றத்திற்கு எழுதிய கடித்தில், லக்கிம்பூர் நிகழ்வு தொடர்பாக நீதிமன்றம் தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றும், சிபிஐ புலனாய்வுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், இந்தப் புலனாய்வை உச்ச நீதிமன்றம் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும் என்றும் கோரினர். இதை ஏற்றுக் கொண்டு உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து கடந்த 6ஆம் நாள் வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் பொருத்தமற்ற காரணங்களைக் கூறும் யோகி அரசை உச்ச நீதிமன்றம் கண்டித்தது. அதன்பிறகே அக்டோபர் 9ஆம் நாள் நள்ளிரவில் ஆசிஷ் மிஸ்ரா கைது செய்யப்பட்டார்.

**கொடுநெறியாளருக்கு கொடுநெறியாளரே பக்கத்துணை**

நாட்டில் இவ்வளவு பெரிய நிகழ்வு நடந்த பின்பும் கூட தலைமை அமைச்சரும் பாசிசக் கெடுமதியாளருமான நரேந்திர மோதி இன்று வரையிலும் வாய் திறக்கவில்லை. அவரது அமைச்சர்களில் ஒருவரான நிர்மலா சீதாராமன் மட்டும் அமெரிக்கா சென்றிருந்த நிலையில் அங்கே கேள்வி எழுப்பப்பட்ட நெருக்கடியின் காரணமாகப் பதிலளித்தார். அந்த பதிலிலும் கூட பிற மாநிலங்களில் இது போன்று நடக்கும் போது யாரும் பேசுவதில்லை எனவும், பாஜக ஆளும் மாநிலங்களில் நடக்கும் போது மட்டுமே எதிர்கட்சிகள் பேசுவதாகவும் சொல்லி நியாயப்படுத்தினார். இதன் மூலம் இது போன்ற நிகழ்வுகள் இந்தியாவில் பிற மாநிலங்களில் வழமையாக நடப்பது போன்ற பிம்பத்தையே உருவாக்குகிறார். குற்றத்தின் தன்மையை குறைத்துக் காட்டுகிறார். எதிர்கட்சிகள் அரசியல் செய்கிறார்கள் என்று திரிக்கவும் திசைதிருப்பவும் முனைகிறார்.

மோதி அரசானது நேரடியாக இது குறித்துப் பேச மறுக்கும் அதேவேளையில் அரசு நிர்வாகத்தின் மொழியில் பேச முனைகிறது. தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரின் உறவினர் வீடுகளில் வருமானவரி சோதனை நடத்தப்பட்டது. இதுகுறித்துப் பேசிய சரத் பவார் தான் உபி படுகொலையை ஜாலியன் வாலாபாக் படுகொலையுடன் ஒப்பிட்டுப் பேசியதால்தான் தன்மீது வருமான வரிச் சோதனை நடத்தப்படுவதாகக் குற்றம் சாட்டினார். இதன் மூலம் பாஜகவையும்

அரசையும் விமர்சிப்பவர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ளது மோதி அரசு.

கட்சிப் பொறுப்புகளில் உள்ள பிற பாஜக தலைவர்களும் தொண்டர்களும் நிர்மலா சீதாராமன் பேசியதைப் போன்றே திசைதிருப்பல்களையும் அவதூறுகளையும் செய்து வருகின்றனர்.

பாஜகவில் விவசாயிகள் படுகொலையை கண்டித்துப் பேசிய ஒரே தலைவர் மேனகா காந்தியின் மகன் வருண் காந்திதான். மேலும் அவர்தான் விவசாயிகள் மீது வண்டியை ஏற்றிப் படுகொலை செய்யும் காணொலி காட்சியைத் தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்டவர். இதன் காரணமாக பாஜக தேசிய செயற்குழுவிலிருந்து மேனகா காந்தியும் வருண் காந்தியும் நீக்கப்பட்டனர்.

**பாசிச ஆற்றல்களின் ஊதுகுழலாக விளங்கும் நீதிமன்றமும் ஊடகங்களும்**

இந்தக் குறிப்பிட்ட நிகழ்வில் உச்ச நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நின்று பேசினாலும் நிகழ்வு நடந்த மறுநாள் நடைபெற்ற விவசாயிகள் தொடர்பான வழக்கு ஒன்றின் விசாரணையின் போது அரசுக்குத் துணை போகும் வகையில் நீதிபதிகள் கருத்துகளை கூறினர். உச்ச நீதிமன்றம் வேளாண் சட்டங்களைப் பற்றி முடிவெடுத்த பின்பே விவசாயிகள் போராட வேண்டும் என்று போராட்ட உரிமைகளை மறுக்கும் வகையில் பேசினர். அதன் உச்சமாகப் போராட்ட உரிமை என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்றா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்று மிரட்டினர். இது ஆளும் அரசின், ஆளும் வகுப்பின் அப்பட்டமான குரலாகும்.

இதைப் போலவே ஊடகங்கள் அனைத்தும் அரசின் குரலாகவே நடத்து கொண்டன. லக்கிம்பூர் படுகொலையை விவசாயிகள் கலவரம் என்று அவதூறு செய்தன அல்லது இந்தப் படுகொலையை மூடிமறைத்துக் கள்ள மௌனம் சாதித்தன. தமது ஊடகக் கருவிகளை ஆர்யான் கான் பக்கம் திருப்பி வைத்துக்கொண்டன. இவை அனைத்தையும் மீறியே விவசாயிகள் போராடி வருகின்றனர்.

**படுகொலையின் பின் உள்ள அரசியல் நோக்கங்கள்**

விவசாயிகள் போராட்டம் என்பது நிகழ்காலத்தில் உலக அளவில் கவனத்தை ஈர்த்த, ஈர்த்துக் கொண்டிருக்கிற மிகப்பெரிய போராட்டமாகும். மோதி அரசு உலக அரங்கில் தனக்கு மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்திய போராட்டமாக இதைக் கருதுகிறது. எனவே எப்படியாவது

முடிவுக்குக் கொண்டுவர நினைக்கிறது. கடந்த பத்து மாதங்களாகக் காவல் படைகளை ஏவிவிட்டு முடிவுக்கு கொண்டு வர முயன்றது. காலிஸ்தான் தீவிரவாதிகள், நக்சல் தீவிரவாதிகள் போராட்டத்தில் உள்ளனர், சீனா சதி, பாகிஸ்தான் சதி என்றெல்லாம் வதந்தி பரப்பித் தனிமைப்படுத்த முயன்றனர். இவை எதுவுமே அரசுக்குப் பலனளிக்கவில்லை. எனவே டெல்லியில் நடைபெற்ற என்ஆர்சி, சிஏஏ போராட்டங்களைக் குண்டர் படை மூலம் முடிவுக்கு கொண்டுவந்தது போல் விவசாயிகள் போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவர நினைக்கிறது. இதற்காகவே பாஜகவானது குண்டர் படையை ஏவி விடுகிறது.


ஆர்எஸ்எஸ் - பாஜக அடிப்படையில் வன்முறையாளர்களைத் தலைவர்களாகவும் தொண்டர்களாகவும் கொண்ட இயக்கங்கள். அங்கே எவ்வளவுக்கு அதிக வன்முறை செய்கிறார்களோ அவ்வளவுக்குத் தலைவராக உயர முடியும். இன்றைய தலைமை அமைச்சர் மோதி கூட 2002இல் மதவெறிப் படுகொலை நடத்தித்தான் தலைவராக உருவெடுத்தார். தற்போது பாஜகவுக்குள்ளும் எதிர்கட்சிகளிலும் அடுத்த பாஜக தலைவராக அல்லது பிம்பமாக யோகி ஆதித்யநாத் உருவெடுத்து வருகிறார் என்ற கருத்து உருவாகி வருகிறது. இந்த நிலையில் அவரைப் போலவே அடுத்த மட்டத் தலைவர்களும் வன்முறையில் ஈடுபட்டுக் பாஜக, ஆர்எஸ்எஸ் தலைமைகளின் கவனத்தை ஈர்க்க முயல்கின்றனர். இதற்கு நல்ல எடுத்துக்காட்டு அண்மையில் அரியானா முதல்வர் மனோகர்லால் கட்டார் பேசியது ஆகும். பாஜகவினர் குழுக்களாகத் திரண்டு விவசாயிகளைப் பழிவாங்க வேண்டும். கட்டைகளைக் கையில் எடுங்கள், சிறை செல்வது குறித்தும் ஜாமீன் பற்றியும் கவலைப்படாதீர்கள், நாங்கள் பார்த்துக் கொள்வோம்; சிறையில் இருக்க நேர்ந்தால் கூட பின்னாளில் நீங்கள் பெரிய தலைவராக முடியும் என்று கூறியுள்ளார். இதுதான் பெரும்பாலான பாஜக தலைவர்களின் மனநிலை. இதைத்தான் அஜய் மிஷ்ராவும் ஆஷிஷ் மிஸ்ராவும் பின்பற்றி வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய ஒரு வன்முறைக் கும்பலுக்கு எதிராகத்தான் விவசாயிகள் போராடி வருகிறார்கள். இந்த வன்முறைக் கும்பலை விவசாயிகள் மட்டுமே தனித்து எதிர் கொண்டுவிட முடியாது. மக்கள் அனைவரும் ஒன்று திரண்டே விரட்டி அடிக்க முடியும்.

ஜெனரல் டயரால் கூட நசுக்க முடியாத மக்கள் போராட்டங்களை ‘நவீன ஜெனரல் டயர்கள் ***டயர்கள்*** மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பார்க்கிறார்கள். கொடுநெறியாளர்களின் கனவு ஒரு போதும் பலிக்காது!

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

## தமிழரா? திராவிடரா?

### ஆசான் ம. செந்தமிழனின் காலவழு




சென்ற செப்டெம்பர் 12ஆம் நாள் சென்னையில் நாம் தமிழர் கட்சி சார்பில் “தமிழரா? திராவிடரா?” என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கத்தில் “சங்கத் தமிழர் வாழ்வியல்” என்ற தலைப்பில் ஆசான் ம. செந்தமிழன் ஆற்றிய உரையை வலையொளியில் உண்மையாகவே வியந்து பார்த்தேன், கேட்டேன். கேட்கக் கேட்கத் தெவிட்டாத இன்பொழிவு!

ஆனால் அந்த உரையில் அவர் முன்வைத்த செய்திகளைத் திறனாய்வு செய்திட என் வியப்புணர்வு தடையாகலாகாது எனக் கருதுகிறேன். சங்க காலத் தமிழர் வாழ்வியலின் சிறப்புகளையும் தொல்காப்பியத்தின் மெய்யியலையும் அழகுற வண்ணித்துக் கூறிய பிறகு ஆசான் ம. செந்தமிழன் முத்தாய்ப்பாகச் சொல்கிறார்:

”இவையெல்லாம் வழக்கொழிந்து களப்பிரர்களிடமும் பல்லவர்களிடமும் தமிழர்கள் வீழ்ந்த பிறகு சங்க காலம் ஒரு முடிவுக்கு வந்தது. அது முடிவுக்கு வந்த போது தமிழர்கள் எதனை

இழந்தார்கள் என்ற ஒரு கருத்தைச் சொல்லி விட்டு உரையை நிறைவு செய்கிறேன். மூன்றாம் தமிழ்க் கழகம் வீழ்ச்சியடையவில்லை. அது வீழ்த்தப்பட்டது. மூன்றாம் தமிழ்க் கழகம் வச்சிரநந்தி என்ற ஒரு சமண முனிவனால் வீழ்த்தப்பட்டது.

“இதை என்றுமே மறக்காதீர்கள். எப்பொழுதும் இதை மன்னிக்காதீர்கள். இதை மன்னிக்கவே கூடாது. மறக்கக் கூடாது மன்னிக்கக் கூடாது. ஏனென்றால் அவன் ஒரு பெரும் பாவம் செய்தான். தமிழைத் திரமிளம் என்று அவன் எழுதினான், இதை விட ஒரு பாவத்தை இந்த இனத்திற்கு எவனும் செய்ய முடியாது. எந்தத் தமிழை? ஓரறிவதுவே உற்றறிவதுவே என்று உலகத்திற்கே உயிரினத் தோற்றத்தைப் பதிவு செய்த தமிழை அவன் திரமிளம் என்று எழுதினான். பெரியோரை வியக்க வேண்டியதில்லை, சிறியோரை இகழ வேண்டியதில்லை என்ற சமத்துவத்தைப் பாடிய தமிழை அவன் திரமிளம் என்று எழுதினான். எழுதத் தெரியாமலா எழுதினான்? இல்லை. வேண்டுமென்றே எழுதினான்.”

மதுரையில் தமிழ் வளர்த்த கடைச் சங்கத்தைத்தான் மூன்றாம் தமிழ்க் கழகம் என்று செந்தமிழன் குறிப்பிடுகிறார். அது சரி. கடைச் சங்கமாகிய மூன்றாம் தமிழ்க் கழகம் வீழ்ச்சி அடையவில்லை, அது வீழ்த்தப்பட்டது என்கிறார். யாரால் வீழ்த்தப்பட்டது? வச்சிரநந்தி என்ற சமண முனிவனால் வீழ்த்தப்பட்டதாம்! எப்படி? தமிழைத் திரமிளம் என்று எழுதியதால்! வச்சிரநந்தி தொடங்கிய திரமிளர் சங்கம்தான் வரலாற்று ஆசிரியர்களால் திராவிட சங்கம் என்று குறிக்கப்படுகிறது. ஆகவே இந்தத் திராவிடக் கேடு வச்சிரநந்தியால்தான் ஆதியில் முளைத்தது என்ற முடிவுக்கு வருகிறார் செந்தமிழன். இது பெரும் பாவம், இந்தப் பாவம் செய்தவனை மறக்கவோ மன்னிக்கவோ கூடாது என்று பொங்குகிறார்.

செந்தமிழன் சொல்வது உண்மையா? கடைச் சங்கமாகிய மூன்றாம் தமிழ்க் கழகம் எப்போது முடிவுக்கு வந்தது? வச்சிரநந்தி திரமிளர் சங்கம் அமைத்தது எப்போது? செந்தமிழன் சொல்வது உண்மையானால், திரமிள சங்கத்தின் தொடக்கம்தான் முதலில் நிகழ்ந்திருக்க வேண்டும். மூன்றாம் தமிழ்க் கழகத்தின் முடிவு பிறகுதான் வந்திருக்க வேண்டும். ஆசான் ம. செந்தமிழன் தனது உரையில் இந்த இரு நிகழ்வுகளுக்கும் எவ்விதக் காலக் குறிப்பும் தர வில்லை. இதற்கெல்லாம் நாள், மாதம், ஆண்டு சொல்ல முடியாதுதான். ஆனால் குத்து மதிப்பாக எந்த நூற்றாண்டு என்று சொல்ல முயலலாம் அல்லவா?

பூச்சியபாதர் என்னும் தேவநம்பி ஆசாரியரின் மாணாக்கர்களில் ஒருவரான வச்சிரநந்தி ஆசாரியார் மதுரையில் திரமிள சங்கம் (திராவிட சங்கம்) தொடங்கிய ஆண்டு பொ.ஊ. (கி.பி.) 470 என்பதுதான் அனைத்து (அல்லது மிகப் பெரும்பாலான) வரலாற்றாசிரியர்களின்

கணிப்புமாகும். செந்தமிழன் "ஆய்வறிஞர் மயிலையார்" என்று மதிப்போடு குறிப்பிடும் - அடியேனும் மதிக்கின்ற - வரலாற்று ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி சொல்லும் ஆண்டும் இதுவே. அறிஞர் கே.கே. பிள்ளை சொல்லும் ஆண்டும் இதே 470தான். அதாவது ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி. இந்த ஆண்டுக் குறிப்பில் மாறுபடும் ஜியோதி பிரசாத் ஜெயின் கி.பி. 604ஆம் ஆண்டு திரமிள சங்கம் அமைக்கப்பட்டதாகக் கூறுவது தவறு என்று குறிப்பிடும் மயிலையார் அந்தத் தவற்றுக்கான காரணத்தையும் சுட்டிக்காட்டுகிறார். ஆக, பொ.ஊ. 470க்கு முன் வச்சிரநந்தியின் திரமிள சங்கம் தொடங்கப்பெற வில்லை என்பதுறுதி.

ஆசான் உரையாற்றிய அதே கருத்தரங்கத்தில் மாலையில் உரையாற்றிய தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் தலைவர் தோழர் பெ.மணியரசன் திரமிள சங்கம் நான்காம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டதாகச் சொன்னது வாய்தவறிச் சொன்னதாகத்தான் இருக்க வேண்டும். 470ஆம் ஆண்டு என்றால் ஐந்தாம் நூற்றாண்டாகவே இருக்க முடியும். நான்காம் நூற்றாண்டுதான் என்றே வைத்துக் கொண்டாலும் வச்சிரநந்தியால்தான் --அவர் தொடங்கிய திரமிள சங்கத்தால்தான் -- மூன்றாம் தமிழ்க் கழகம் வீழ்த்தப்பட்டது என்பதை மெய்ப்பிக்க அது உதவாது. மூன்றாம் நூற்றாண்டில் நடந்த ஏதோ ஒன்றுக்கு ஐந்தாம் (அல்லது நான்காம்) நூற்றாண்டில் நிகழ்ந்த எந்த ஒன்றையும் எப்படிக் காரணமாகக் காட்ட முடியும்? இந்தக் குற்றம் காலவழு (anachronism) எனப்படும். தொன்மைக் கால வரலாற்றிலும் கூட சற்றொப்ப இரண்டு நூற்றாண்டுகள் நீட்சி கொண்ட காலவழுவை ஏற்பதற்கில்லை.

ஏனென்றால் வச்சிரநந்திக்கு வெகுகாலம் முன்பே - மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே -- கடைச் சங்கம் முடிந்து போயிற்று. வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் இப்படித்தான் காலங்குறித்துள்ளனர்.

கே.கே. பிள்ளை சொல்கிறார்:

"மதுரை மாநகரில் நடைபெற்று வந்த கடைச்சங்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முடிவுற்றது. பாண்டி நாட்டில் மிகக் கொடியதொரு பஞ்சம் நேர்ந்ததாகவும் பன்னிரண்டாண்டுகள் அது நீடித்திருந்து மக்களை வாட்டியதாகவும்,பாண்டிய வேந்தன் சங்கப் புலவர்களைப் பாதுகாக்க இயலாதவனாய் வெளியே பல இடங்கட்கும் சென்று வாழும்படி அவர்கட்கு விடைகொடுத்து அனுப்பி விட்டான் என்றும், அஃதுடன் தமிழ்ச் சங்கம் இறுதியான முடிவை எய்தியது எனவும் செவிவழி வரலாறுகள் கூறுகின்றன." (கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், சங்க காலத்தின் இறுதி)

சங்க காலம் முடிவுக்கு வந்தமைக்கு வேறு காரணங்களும் இருக்கலாம் என்பதை கே.கே. பிள்ளை ஏற்றுக் கொள்கிறார்:

”தமிழ்ச் சங்கம், முடிதற்கு வேறு காரணங்களும் சிலர் காட்டுவர்.அவை ஒன்றுக்கேனும் போதிய சான்றுகள் இல்லை. எனினும், சங்கம் அழிவுற்றதற்கும், தமிழரின் பண்டைய பண்பாடுகளும் கலைகளும் மறைந்து போனதற்கும் தக்க காரணங்கள் இல்லாமற் போகவில்லை. ஏற்கெனவே ஆரியப் பண்பாடுகளாலும் சமயக் கருத்துகளாலும் சமுதாயக் கொள்கைகளாலும் அரிப்புண்டிருந்த தமிழரின் சமூகம் வேறு பல புரட்சிகளுக்கும் உட்படுவதாயிற்று. தமிழகம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே களப்பிரர் என்ற ஒரு குலத்தினரின் படையெடுப்புக்குட்பட்டு அல்லலுற்றது. அவர்கள் தமிழரல்லர்.”

களப்பிரர் ஆட்சிதான் தமிழ்க் கழகத்தை அழித்தது என்று வைத்துக் கொண்டாலும், வச்சிரநந்தியின் திரமிள சங்கத்தின் மீதும் அதன் வழியாக திராவிடத்தின் மீதும் பழி போட இந்தக் கருதுகோள் உதவாது நண்பர்களே! களப்பிரர் படையெடுப்புக்கும் திரமிள சங்கத் தொடக்கத்துக்கும் அதே இருநூறாண்டு காலவழு இருக்கிறதே, என்ன செய்வது? ஆசான் ம. செந்தமிழன் விளக்கம் சொல்லட்டும்.

தமிழை வேண்டுமென்றே திரமிளம் என்று எழுதினாரா வச்சிரநந்தி? அவர் இப்படி எழுதியது ஏன்?

**கழகமும் சங்கமும்**

ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (பொ.ஊ. 470) சமண முனிவர் வச்சிரநந்தியால் நிறுவப்பெற்ற திரமிள சங்கத்தால் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்க் கழகம் வீழ்த்தப்பட்டது என்று ஆசான் ம. செந்தமிழன் பழி சுமத்துவதன் காலவழுவை எடுத்துக்காட்டினேன்.

தொன்மையில் நிகழ்ந்த இந்தக் குற்றத்தைப் ”பெரும் பாவம்” என்று சாடும் ஆசான் ம.செந்தமிழன் அதை மறக்கவோ மன்னிக்கவோ கூடாது என்று இக்காலத் தமிழர்களாகிய நம்மை உசுப்புகிறார். அவர் சாற்றிடும் குற்ற மடலைக் கேளுங்கள்:

“திரமிள சங்கம் என்று அவன் சொன்னான். எவ்வளவு இறுமாப்பு! இந்த இனத்தின் மீது எவ்வளவு இகழ்வு அவனுக்கு இருந்தால் தமிழ்க் கழகம் என்று இருந்த கழகத்தை அதே மதுரையில் இனி இது தமிழ்க் கழகம் அல்ல, திரமிள சங்கம் என்று கொச்சையாக எழுதி அதை நிறுவி நடத்தினான். யானையை அடித்துத் துன்புறுத்திப் பிச்சை எடுக்க வைப்பதைப் போன்றது தமிழர்களுடைய கழகம் அமைந்த மதுரையில் எதிரிகள் வந்து உட்கார்ந்து கொண்டு திரமிளர்

சங்கம் என்று அழைக்க வேண்டும் தமிழர் கழகம் என்று அழைக்கக் கூடாது என்று மிரட்டினார்கள்."

செந்தமிழன் சொல்கிற படி பார்த்தால் வச்சிரநந்தியார் தமிழ்க் கழகத்தைக் கலைத்து விட்டு திரமிள சங்கத்தை அமைத்திருக்க வேண்டும். தமிழ் காக்கும் தமிழ்க் கழகத்தின் இடத்துக்கு தமிழை அழிக்கும் திரமிள சங்கம் வந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டுமே மொழி சார்ந்த அமைப்புகளாகவே இருந்திருக்க வேண்டும். இருந்தனவா?

மயிலை சீனி. வேங்கடசாமி சொல்கிறார்:

"சமண சமயத்தை வளர்ப்பதற்காக வச்சிரநந்தி அமைத்த திரமிள சங்கத்தையும் சங்க காலத்தில் பாண்டியர் தமிழ் மொழியை வளர்க்க அமைத்த தமிழ்ச் சங்கத்தையும் ஒன்று என்று கருதுவது தவறு. இந்த இரண்டு சங்கங்களும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு காரணத்துக்காக அமைக்கப்பட்ட சங்கங்கள். இரண்டையும் ஒன்றாக இணைத்துக் கூறுவது வரலாறு அறியாதவரின் தவறான கூற்றாகும்."

(களப்பிரர் ஆட்சியில் தமிழகம்.)

மேலும் தெளிவாகவே சொல்கிறார்:

"மூன்று வகையான சங்கங்கள்: களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் (கி.பி. 470ஆம் ஆண்டில்) மதுரை நகரத்தில் திரமிள (திராவிட - தமிழ) சங்கத்தை வச்சிரநந்தி அமைத்தார் என்று அறிந்தோம். வச்சிரநந்தி ஏற்படுத்திய சங்கம் சைன மதத்தை வளர்ப்பதற்கான சங்கமாகும் (சங்கம்- கூட்டம்). பௌத்தப் பிக்குகளின் கூட்டத்துக்குப் பௌத்த சங்கம் என்பது பெயர். பௌத்தப் பிக்குகளின் சங்கத் தலைவர் சங்க பாலர் என்று பெயர் கூறப்பெற்றார். பௌத்தர்களுடைய மும்மணிகளில் பௌத்தப் பிக்குகளின் சங்கமும் ஒன்று. சங்கம் சரணம் கச்சாமி என்பது காண்க. இதன் பொருள் பௌத்த சங்கத்தைச் சரணம் அடைகிறேன் என்பது. சைனத் துறவிகளின் கூட்டத்துக்கும் சங்கம் என்பது பெயர். சங்கத்தைச் (கூட்டத்தை) சைனர் கணம் என்றும் கூறுவர். கணம் என்றாலும் சங்கம் என்றாலும் ஒன்றே. களப்பிரர் ஆட்சிக்கு முன்னே பாண்டியர் தமிழ் மொழியை ஆராய்வதற்குப் புலவர்களின் கூட்டத்தை ஏற்படுத்தினார்கள். அந்தக் கூட்டத்துக்குத் தமிழ்ச் சங்கம் என்பது பிற்காலத்துப் பெயர். அதன் பழைய பெயர் தமிழ்க் கழகம் என்பது. பிற்காலத்துப் பாண்டியர் அமைத்திருந்த சங்கம் மதச் சார்பான சங்கம் அன்று. அது தமிழ் மொழியை ஆராய்வதற்கு ஏற்பட்ட சங்கம்." (மயிலை சீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், இணைப்பு 2: வச்சிரநந்தியின் திரமிள சங்கம்)

நாம் இப்போது தமிழ்ச் சங்கம் என்று குறிப்பிடுவதைத் தமிழ்க் கழகம் என்பதே சரி என்று ஆசான் ம, செந்தமிழன் சுட்டுவது சரியானதே, பாண்டியர் வளர்த்த தமிழ்ச் சங்கத்துக்குக் கழகம், கூடல் என்ற பெயர்கள் விளங்கின. மதுரையைக் கூடல் மாநகரம் என்பது இதனால்தான். முன்னால் போய்விட்ட தமிழ்க் கழகத்தைப் பின்னால் வந்த சமண சங்கத்தால் எப்படித் தடை செய்ய முடியும்?

ஓடையில் நீர் பருகிக் கொண்டிருந்த மான் குட்டியிடம் ஓநாய் வம்பு செய்த கதை நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. இருபதாம் நூற்றாண்டுத் திராவிடத்தின் மீது வெறுப்புற்று ஐந்தாம் நூற்றாண்டுத் திரமிள சங்கத்தை மூன்றாம் நூற்றாண்டுத் தமிழ்க் கழகக் கலைப்புக்குக் குற்றவாளியாக்கும் செந்தமிழனின் ஏரணமற்ற முயற்சி காலவழுவின் உச்சம். பாவம், பெரும்பாவம், இறுமாப்பு, இகழ்வு என்ற கடுஞ்சொற்களால் இந்தக் காலவழுவை மறைக்க முடியாது.

அது சரி. தமிழ் ஏன் திரமிளம் என்று திரிந்தது? வச்சிரந்தியின் திட்டமிட்ட சூழ்ச்சியால் என்பது ஆசான் ம. செந்தமிழனின் புரிதல், இந்தப் புரிதலுக்கு என்ன அடிப்படை? மொழியியல் சார்ந்து அவரால் இதற்கு விளக்கம் தர முடியுமா?

**தமிழ் எவ்வாறு திரமிளம் ஆயிற்று?**

வச்சிரநந்தி எனும் சமண முனிவரால் தமிழ்க் கழகம் வீழ்த்தப்பட்டது என்று குற்றஞ்சாற்றும் ஆசான் ம. செந்தமிழன் அது எப்படி நிகழ்ந்தது என்றும் சொல்கிறார். தமிழை திரமிளம் என்று எழுதியதாலாம்! வேண்டுமென்றே எழுதியதால்! தமிழைக் கெடுக்க வேண்டுமென்றே எழுதியதால்! என்கிறார்.

இந்தக் குற்றசாற்று உண்மைதானா? தமிழரல்லாதாரின் உச்சரிப்பில் தமிழம் திரமிளம் ஆகத் திரிந்தது பற்றி அறிஞர் பலரும் எழுதியுள்ளனர். பாவாணர் பார்வையை மட்டும் எடுத்துரைத்தல் போதுமெனக் கருதுகிறேன்.

தமிழர்கள் தங்களைத் திராவிடர்கள் என்று அழைத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர். அதே போது திராவிடம் என்ற சொல் எப்படி வந்தது என்பதைப் பாவாணர் விரிவாக அலசியுள்ளார்.

"பழைய காலத்தில் நாட்டுப் பெயர்களும் மொழிப் பெயர்களும் பெரும்பாலும் அம் ஈறு பெற்றுத் தமிழில் வழங்கின. எடுத்துக்காட்டு: ஈழம், கடாரம், சீனம், யவனம், தமிழம். த்ரமிள (ம்) - த்ரமிட (ம்) - திராவிட(ம்) என்னும் முறையில் தமிழம் என்னும் சொல்லே திராவிடம் என்று திரிந்ததாகும். தமிழம் என்பது தவிள - தவிட - என்று பிராகிருதத்தில் திரிந்த பின்பு, தமிலி,

தமில என்னும் வடிவங்கள் த்ரமிள, திரவிட, த்ரவிட என்று வடமொழியிற்திரிந்ததாக, பண்டிதர் கிரையர்கள் கூறுவர். எங்ஙனம் இருப்பினும் தமிழம் என்னும் சொல்லே த்ரவிட என்று திரிந்ததென்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை....”

“திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் தமிழம் என்னும் பெயரே பொதுப் பெயராக முதலாவது வழங்கி வந்தது. த்ராவிடம் என்னும் வடிவம் தமிழம் என்னும் பொருளிலேயே முதன் முதல் வழங்கியதாகும்.”

தமிழம்தான் வச்சிரநந்தி போன்ற பிற மொழியாளரால் திரமிளம் என்று சொல்லப்பட்டது என்பதற்குப் பெரிய விளக்கம் தேவையில்லை. மெது மிருது ஆனது போல் தமிழ் திரமிள் ஆயிற்று என்பர். ழகரம் தமிழுக்கே உரியது (கூடுதலாக மலையாளத்துக்கும் உரியது எனலாம்). தமிழர்களில் பலருக்கே ழகர உச்சரிப்பு கடினமாய் இருப்பது இன்றும் மெய்! வாழைப் பழத்தை வாளைப் பளமாகத் தான் பலரும் வழங்கி வருகின்றனர். இதில் சூழ்ச்சி, சதித் திட்டம் எதுவுமில்லை!

ஒவ்வொரு மொழிக்கும் உரிய ஒலியமைதி அப்படியே வேறு மொழிக்கு வாய்ப்பதில்லை. பிரான்சு நாட்டவர் பேசும் மொழியை ஆங்கிலேயர் பிரெஞ்சு என்கிறார்கள். நாமும் ஆங்கிலேயரைப் பின்பற்றி பிரெஞ்சு என்கிறோம். ஆனால் பிரான்சு தேசத்தவர் தமது மொழியை பிரான்சுவா (Francois) என்று சொல்வர். ஜோன் ஆ்ஃப் ஆர்க் என்றும் ஆங்கிலேயரும் நாமும் சொல்வதை பிரெஞ்சியர் ழோன்தார்க் என்பர். ஆங்கிலேயர்க்கு சார்லஸ், பிரெஞ்சியருக்கு ஷார்ல்! ஆங்கிலேயருக்கு செயிண்ட் தாமஸ், பிரெஞ்சியருக்கு சாந்தோம்! ஆங்கிலேயர்க்கு இங்கிலீஷ், நமக்கு ஆங்கிலம்! இப்படிப் பல சான்றுகள் தர முடியும். இதில் சூழ்ச்சி, சதி ஒன்றுமில்லை.

தமிழ் பிற மொழியாளர் பேச்சில் திராவிடமாக மட்டும் திரியவில்லை. தமிழுக்குத்தான் எத்தனைப் பெயர்கள்! மு. வரதராசனார் சொல்வார்:

“தமுளியா என்ற திரிபை டச்சுப் பாதிரிமார்களும், தமிழிரி என்ற திரிந்த வடிவத்தை ரோமர்களும், தெஹிமோலோ என்ற திரிபை சீனரும் வழங்கியது போலவே, தமிழொலி பயிலாத ஆரியர் தமிழ் என்பதையே தமிளோ. தரமிளோ, திரமிளம், திரவிடம், திராவிடம் எனத் திரித்து வழங்கினர் எனக் கொள்வதே பொருந்தும்.”

தமிழொலி பயிலாத ஆரியர் என்று மு.வ. சொல்கிறாரே அத்தகைய ஒருவர்தான் வச்சிரநந்தியார்! தமிழொலி பயிலாதார் சூட்டிய திரிபுப் பெயரையே நாமும் சூட்டிக் கொள்ள வேண்டுமா? என்று ஆசான் ம. செந்தமிழன் கேட்டால் அதில் ஒரு ஞாயம் உண்டு! ஆனால் வச்சிரநந்தி

வேண்டுமென்றே தமிழை திரமிள என்று திரித்துப் பெரும்பாவம் செய்து தமிழ்க் கழகத்தை வீழ்த்தி விட்டார் என்பது காற்றில் கம்பு சுற்றுவதே ஆகும்.

தமிழொலி பயிலாத ஐரோப்பியர் நம் ஊர்ப் பெயர்களை எப்படியெல்லாம் சிதைத்தார்கள் என்பது கூறாது விளங்கும். தஞ்சாவூர் டாஞ்சூர் ஆனது. திருநெல்வேலி டின்னவேலி ஆனது. தூத்துக்குடி டுட்டிகோரின் ஆனது. தமிழர்களும் ஐரோப்பியர் போலவே திரிந்த உச்சரிப்பை வலிந்து வழங்குவதுதான் குற்றம்!

பிழையாக எழுத்துக் கூட்டியதால் உச்சரிப்பு பிழைத்து அதுவே நிலைத்து விடுவதும் உண்டு. புதுச்சேரி அப்படித்தான் பாண்டிச்சேரி ஆயிற்று என்பர். புதுச்சேரியை பிரெஞ்சியர் Pouducheri என்று எழுதப் போய் மூன்றாம் எழுத்து u என்பதற்கு மாறாக n என்று படிக்கப்பட்டதாம். விரைவாக எழுதும் போது ஏற்படுகிற தோற்றப் பிழைதான் காரணமாக இருக்க வேண்டும். புதுச்சேரி என்று அதிகார முறையில் மாற்றிய பிறகும், புதுவை என்ற அழகான சுருக்கப் பெயர் இருந்தும் கூட இன்றளவும் படித்த தமிழர்கள் கூட பாண்டிச்சேரி என்றும், செல்லமாகப் பாண்டி என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே? புதுவை என்றால் போதிய 'கிக்' இல்லை போலும்! புதுவையைப் பாண்டி நாட்டுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் சூழ்ச்சியோடு வேண்டுமென்றே இப்படித் திரித்துப் பெயர் சொல்கிறார்கள் என்று குற்றஞ்சொல்ல முடியாது அல்லவா?

தமிழொலி பயிலாத அயலார் செய்த பெயர்த் திரிபுகள் வேறு. திட்டமிட்ட ஆரியமயமாக்கத்தின் ஒரு பகுதியாகச் செய்த புரட்டுகள் வேறு. திருமுதுகுன்றத்தை விருதாசலம் ஆக்கியதும் திருமரைக்காட்டை வேதாரண்யம் ஆக்கியதும் மயிலாடுதுறையை மாயூரம் ஆக்கியதும் வடவரின் சூழ்ச்சித்தனமே என்பதில் ஐயமில்லை. தமிழம் திரமிளமாகத் திரிந்ததை இந்த வரிசையில் சேர்த்துக் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை.

தமிழ் என்ற சொல்லை சரியாக உச்சரிக்கத் தெரியாதது மட்டும்தான் வச்சிரநந்தியின் மீது செந்தமிழன் சீற்றம் கொள்ளக் காரணமா? அவர் சமணத்தைச் சாடுகிறார். சாடி விட்டுப் போகட்டும்! சமூக அறிவியலின் பக்கம் நின்று குற்றாய்வு செய்கின்றாரா என்றால் இல்லை. சைவத்தின் பக்கம் நின்று அதைச் செய்கிறார். சமணத்தின் மீது கண்மண் தெரியாத வெறுப்புக் கனல் உமிழ்கிறார். அந்த வெறுப்புதான் காலவழு கருதாமல் வச்சிரநந்தியைப் பழி தூற்ற அவரை நகர்த்திச் செல்கிறது என்பதற்கு நாம் தமிழர் கட்சியினர் "இறைப்பேருரை" என்று பரப்பி வரும் செந்தமிழன் உரையிலேயே அகச் சான்று உள்ளது.

# குத்தகையில் பொருளாதார வளர்ச்சி?:

**சமந்தா**

இந்தியாவில் கோவிட் தடுப்பு மருந்து செப்டம்பர் வரை இருமுறை செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 11.1 விழுக்காடாகவும். ஒரு முறை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 37 விழுக்காடாகவும் உள்ளது. இந்திய மருத்துவ ஆய்வு மன்றத்தின்(ICMR) மருத்துவர் சமிரான் பாண்டா, கோவிட் -19 தொற்றுநோயின் தீவிரமான இரண்டாவது அலையை எதிர்கொள்ளாத மாநிலங்களில் கொரோனா தாக்கம் அதிகரித்து வருகிறது என்றும் இது மூன்றாவது அலையின் ஆரம்ப அறிகுறிகளைக் காட்டுகிறது என்றும் கூறியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவானது கொரோனா வைரஸின் மூன்றாவது அலை அக்டோபரில் உச்சத்தை எட்டும் என்று கூறியுள்ளது. மூன்றாவது கோவிட் அலையை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக நிதியமைச்சர் கூறிவருகிறார்.

கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள சமூக தணிக்கை பிரிவுகளால் செய்யப்பட்ட தணிக்கைகளின் மூலமாக கடந்த 4 ஆண்டுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரகத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் 935 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளது தெரிய வந்துள்ளது. நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு தேவையைக் காட்டிலும் மிகக் குறைவாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதிலும் இந்தளவுக்கு முறைகேடுகள் நிகழ்வது பாஜக அரசின் பொறுப்பற்ற நிர்வாகத்தையே சுட்டிக்காட்டுகிறது. இத்திட்டத்தின் பயனாளிகள் நூறு நாட்களுக்கு குறைவாகவே வேலை பெறுவதுடன் அவர்களுக்கான கூலி உரிய நேரத்தில் கொடுக்கப்படாமல் பெருமளவு நிலுவையில் உள்ளது. ஜூன் மாதத்தில் இத்திட்டத்தின் கீழ் 45.2 கோடி தனியாள் நாட்களுக்கு வேலை வழங்கப்பட்ட நிலையில் ஜூலை மாதத்தில் அதை விட மிகக் குறைவாக 24.2 கோடி தனிநபர் நாட்களுக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது.கோவிட் தாக்கத்தின் காரணமாக வேலை வாய்ப்பின்மை மேலும் அதிகரித்துள்ளதால் கோடிக்கணக்கான மக்கள் அவதிப்படும் நிலையில் இத்திட்டத்தை நகர்புறங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையை பொருளாதார அறிஞர்களும், இடதுசாரி அமைப்புகளும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர். ஆனால் பாஜக அரசு அக்கறையற்ற அலட்சியப் போக்கிலே செயல்படுகிறது.

அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் நீடித்த வேலைவாய்ப்பு மையத்தின் அறிக்கை கோவிட்

இரண்டாவது அலை தாக்குவதற்கு முன் மார்ச் முதல் டிசம்பர் வரை வேலையை இழந்த பெண் தொழிலாளர்களில் 47 விழுக்காட்டினர் மீண்டும் வேலை பெற இயலாத நிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

2020 ஏப்ரல்-ஜூன் காலாண்டில் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஜனவரி-மார்ச் காலகட்டத்தின் விகிதத்துடன் ஒப்பிடுகையில் இருமடங்காக அதிகரித்துள்ளதாக பொருளாதார வல்லுநர் ஹிமான்ஷு குறிப்பிட்டுள்ளார்.15 வயதிற்கு மேற்பட்டோரில் ஐந்தில் ஒருவருக்கு வேலை இல்லாமலும், 15-29 வயதுடையவர்களில் மூன்றில் ஒரு நபரும் வேலையில்லாமல் இருந்துள்ளனர். சாதாரண தொழிலாளர்கள், சுயதொழில் செய்பவர்களின் வேலை நேரம் 2019 அக்டோபர் காலாண்டில் 47.8 மணிநேரத்தில் இருந்தது, 2020 ஜூன் காலாண்டில் 37 மணி நேரமாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முறை சாரா தொழிலாளர்கள் குறித்த தரவுகளைத் திரட்ட இ-ஷ்ரம் என்ற புதிய இணையதளத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இதில் முறைசாரா பணியாளர்களை பதிவு செய்து அவர்களுக்கென தனியாக 12 இலக்க எண் அடங்கிய அட்டை வழங்கப்படும் என்று மத்திய தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்தார். இந்தியாவில் முறை சாரா தொழிலாளர்கள் 38 கோடிக்கும் மேல் உள்ளனர்.இதில் பதிவு செய்த அனைத்து பணியாளர்களுக்கும் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தின் கீழ் விபத்து காப்பீடு வசதி ஓராண்டுக்கு கிடைக்கும் என்றும், பணியின் போது உயிரிழப்பு நேர்ந்தால் ரூ.2 லட்சமும், நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ.1 லட்சம் இழப்பீடும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முறைசாரா தொழிலாளர்களுக்கு அட்டை வழங்கி வெறும் காப்பீட்டுத் திட்டத்தை, அதுவும் ஏற்கெனவே நடைமுறையிலுள்ள ஒன்றை புதிய திட்டம் போல் அறிவிப்பதன் மூலமே அவர்களுக்கு சமூக பாதுகாப்பு கிடைத்துவிடும் என்பது கேலிக்கூத்து.

கோவிட் தாக்கத்திற்குப் பிறகு உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை சுமார் 9.7 கோடி அதிகரித்துள்ளது. ஐநாவின் உணவு, விவசாய அமைப்பு வெளியிட்ட உலக உணவு பாதுகாப்பு, ஊட்டச்சத்து நிலை குறித்த அறிக்கையின் தரவுகளின் படி (SOFI), இந்தியாவில் உணவுப் பாதுகாப்பின்மை 2018-20 இடைப்பட்ட பகுதியில் சுமார் 6.8

விழுக்காடு அதிகரித்துள்ளது. கேலப் உலக கணக்கெடுப்பின் மூலம் உணவு பாதுகாப்பின்மை அளவிடப்படுகிறது. ஆனால் பாஜக அரசு காலப் உலக கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்தியாவின் உணவு பாதுகாப்பின்மை குறித்த தகவல்களை வெளியிடுவதை அங்கீகரிக்கவில்லை. சுற்றடியான முறையில் இத்தரவுகளை வருவிக்கும் போது 2019ல் இந்தியாவில் சுமார் 43 கோடி பேர் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.கோவிட் தாக்கத்தின் விளைவாக இந்த எண்ணிக்கை 52 கோடியாக அதிகரித்துள்ளது.2019ல் 31.6 விழுக்காடாக இருந்த உணவுப் பாதுகாப்பின்மை 2021ல் 38.4 விழுக்காடாக அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை என ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக ஆய்வாளர் வைசாலி பன்சால் தெரிவித்துள்ளார். சர்வதேச அமைப்புகளால் வெளியிடப்படும் அறிக்கைகளிலும் வெளிப்படைத் தன்மையற்ற நிலையை பாஜக அரசு ஏற்படுத்தியுள்ளது வெட்கக்கேடானது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களோ மத்திய அரசின் நடவடிக்கையால் கரோனா காலத்தில் பசியுடன் யாரும் உறங்கவில்லை என்று கூறியதுடன் சமூகநீதிக்கு எதிரான புதிய கல்விக் கொள்கையை வறுமையை ஒழிப்பதற்கான வழிமுறையாகப் போற்றுகிறார்.

விவசாயக் காப்பீட்டுத் திட்டங்களுக்கு கடந்த காலங்களில் மத்திய, மாநில அரசுகள் தலா 49 விழுக்காடும், விவசாயிகள் 2 விழுக்காடும் காப்பீட்டுக்கான முன்தொகை செலுத்தி வந்தனர். இந்நிலையில், மத்திய அரசு தனது பங்களிப்பாக 33 விழுக்காடு மட்டுமே வழங்க முடியும் என பொறுப்பைத் தட்டிக் கழித்துள்ளது. அதேநேரத்தில், மாநில அரசு தனது பங்களிப்பான 49 விழுக்காட்டை விட கூடுதலாக மேலும் 16 விழுக்காட்டை ஏற்க முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், தமிழக அரசு , 2021-2022-ம் ஆண்டில் நெல் மற்றும் தட்டைப் பயறைத் தவிர்த்து இதர பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு செய்யலாம் என அறிவிப்பு வெளியிட்டுள்ளதால், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மத்திய வங்கி வருடாந்திர கூட்டு நிதி சேர்க்கை(உள்ளிணைப்புக் குறியீட்டை (FI-Index) அறிமுகப்படுத்தியது. இக்குறியீட்டின் மதிப்பு சுழியமாக (0) இருக்கும் போது அது முழு நிதிவிலக்கத்தையும், 100ஆக இருக்கும் போது முழு நிதிச் சேர்க்கையையும் குறிப்பிடுகிறது.

இந்தக் குறியீட்டை மத்திய வங்கி ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் வெளியிடும் என அறிவித்துள்ளது. உள்ளடக்கிய அணுகல், பெறப்படும் சேவைகளின் பயன்பாடு மற்றும் சேவைகளின் தரம், ஆகியவற்றை சுட்டும் 97 குறிகாட்டிகளைக் கொண்டு இந்தக் குறியீடு தயாரிக்கப்படுகிறது.மார்ச் 2021 வரை முடிவடைந்த காலத்திற்கு நிதிச் சேர்க்கைக் குறியீடு 53.9 ஆக உள்ளதாகவும், மார்ச் 2017 வரையிலான காலத்திற்கு இக்குறியீடு 43.4 ஆக உள்ளதாகவும் மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது.

இந்த நிதிக்குறியீடு நிதிச்சேவைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் காட்டியுள்ளது நடப்பு நிலையை பிரதிபலிப்பதாக இல்லை. ஏனேனில் சிறுகுறு நடுத்தர நிறுவனங்களுக்கான கடன் சேவை தொடர்ந்து சரிவு நிலையில் உள்ளது நிதி விலக்கத்தையே சுட்டுகிறது.

பொதுத் துறை வங்கிகள் திறனற்றவை என்று வங்கிகளில் தனியார்மயப் போக்கைத் துரிதப்படுத்துகிறது பாஜக அரசு. பொதுத்துறைக் காப்பீட்டு நிறுவனத்தை தனியார்மயப்படுத்துவதற்கு சமீபத்தில் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார இடையூறுகள் இருந்தபோதிலும், பொதுத்துறை வங்கிகள் 31,816 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளன.பொதுத்துறை வங்கிகள் மூலதன அடித்தளத்தை மேம்படுத்துவதற்காக கடன் மற்றும் பங்குகளின் மூலம் 2020-21ல் சந்தைகளில் இருந்து ரூ .58,700 கோடி திரட்டியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) ஏற்பாடு செய்த ஒரு மெய்நிகர் நிகழ்வில் பேசிய தலைமை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் வங்கி நொடிப்புநிலை சட்டம் (IBC) நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு நிலக்கிழாரியம் இருந்தது என்றும்,பெருநிறுவன கடனாளிகள் தங்களது கட்டுப்பாட்டு ஆளுகையை தெய்வீக உரிமையாக கொண்டிருந்தனர், அந்த நாட்கள் கடந்துவிட்டதாகவும் குறிப்பிடுகிறார்..பெருமளவில் வாராக்கடன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அவற்றிலிருந்து மீட்கப்படும் தொகையும் மிகவும் குறைவாகவே உள்ளது. மார்ச் 2020 வரை 46 சதவிகிதத்திலிருந்த வங்கி நொடிப்பு நிலை சட்டத்தின் மீட்பு விகிதம் மார்ச் 2021 லிருந்து 39.3 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. கடன் தொகையில் 95 விழுக்காடு தள்ளுபடி செய்யும் போக்கும் காணப்படுகிறது என்பது நிதியமைப்புகளில் முதலாளிகளின் ஆளுகை அதிகமாக இருப்பதையே காட்டுகிறது, அவர் கூறிய படி நிலக்கிழாரியத்தின் ஆளுகை

நேற்றையதாக மட்டும் இல்லை என்றபோதும் இன்று கள்ளக் கூட்டு முதலாளித்துவத்தின் ஆளுகையேக் காணப்படுகிறது.

ஐபிசியால் வங்கிகள் முக்கிய நிறுவன நிறுவனங்களுக்கு வழங்கிய கடன்களை மீட்க உதவ முடியவில்லை, அவர்கள் தண்டனையின்றி அந்த கடன் பொறுப்புகளில் இருந்து விடுபட்டுவிட்டனர். வங்கிகளில் இருந்து பெருவணிகர்களுக்கு செல்வத்தை மாற்றுவதற்கான ஒரு கருவியாக இது செயல்படுகிறது. இந்த வங்கிகளில் பெரும்பாலானவை குடிமக்களுக்கு சொந்தமான பொதுத்துறை வங்கிகள் என பொருளியல் பேராசிரியர்கள் சி.பி.சந்திரசேகர், ஜெயதி கோஷ் தங்களது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர்.

தொழில் வணிகங்களுக்கு வரி விதிப்பதன் மூலம் கோவிட் தொற்று நோய் நிதியளிக்கப்படவில்லை என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். கோவிட் வரிவிதிப்பு மூலம் நிதியளிக்கப்படவில்லை. தொற்றுநோயை நிர்வகிக்க எந்தவொரு தனிநபரிடமோ அல்லது தொழில்துறையிடமோ கூடுதலாக ஒரு பைசா கேட்கவில்லை, ”என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அது தானே பிரச்சினை, வரிவிதிப்பு எங்கு செய்யவேண்டுமோ அங்கு செய்யாமல் எங்கு செய்யக்கூடாதோ அங்கு செய்யப்பட்டது. செல்வந்தர்கள், பெரு நிறுவனங்களின் மீதான வரியை அதிகப்படுத்தாமல் பெட்ரோல், டீசல் மீதான கூடுதல் வரியை அதிகரித்து விலைவாசி உயர்வாலும், நிதி நெருக்கடியாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள எளிய மக்களின் துயரை மேலும் அதிகரித்துள்ளது பாஜக அரசு.

ஆகஸ்டில் சமையல் எரிவாயு (LPG) உருளையின் விலை 25 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது மாதங்களில் சமையல் எரிவாயு உருளையின் விலை 265 ரூபாய் அதிகரித்துள்ளது, இது 44 விழுக்காடு உயர்வைக் குறிப்பிடும்.

நவீன தாராளமயத்தின் ஊதுகுழலான நிட்டி ஆயோக் ஒரு புதிய பரிந்துரையை முன்வைத்துள்ளது. நிட்டி ஆயோக் ஒன்றிய அரசிற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான பிரச்சனைகளை அதிகப்படுத்தாமல், பெட்ரோல், டீசல், மின்சாரம் மூன்றையும் ஒரே நேரத்தில் சரக்கு சேவை வரி அமைப்பின் (GST) கீழ் கொண்டு வருவதற்கான ஒரு சூத்திரத்தை முன்மொழிந்துள்ளது. மின்சாரத்தின் மீதான வரி தற்போது மாநிலங்களால் வசூலிக்கப்படுகிறது.

மின்சாரத்தை சரக்கு சேவை வரிக்குள் கொண்டுவருவதால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடு செய்வதற்கான நிதி இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசு மாநிலங்களுக்கு சுமார் ஆறு ஆண்டுகளுக்கு அளிக்கும். பெட்ரோல் மற்றும் டீசல் மீது சரக்கு சேவை வரிவிதிப்புமுறையை கொண்டுவருவதன் மூலம், அதிலிருந்து கிடைக்கும் வரி வருவாயில் 50 விழுக்காட்டை மாநிலங்கள் பெற வழிவகை செய்யப்படும். தற்போது பெட்ரோல் டீசல் மீதான வரி வருவாயில் 6 விழுக்காடு மட்டுமே பகிர்ந்தளிக்கப்படுகிறது என்று நிட்டி ஆயோக் குறிப்பிட்டுள்ளது.மத்திய அரசு பெட்ரோல், டீசலின் மீது 28 விழுக்காடு சரக்கு சேவை வரியையும், 50 விழுக்காடு அல்லது அதற்கும் அதிகமாக கூடுதல் கட்டணங்களை விதிப்பதன் மூலம், மாநிலங்களுக்கு மின்சாரத்திற்கான சரக்கு சேவை வரி இழப்பீட்டுத் தொகையை வழங்கமுடியும். மாநிலங்களுக்கான மின் கட்டண வருவாய் இழப்புகளை ஈடுகட்டுவதற்கான மாநிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு குறைக்கப்படலாம். இழப்பீட்டை படிப்படியாக குறைப்பதன் மூலம் கூடுதல் கட்டண வருவாயில் அதிக விகிதத்தை மத்திய அரசு பெற்றுக்கொள்ள முடியும் என நிட்டி ஆயோக் குறிப்பிட்டுள்ளது.

சரக்கு சேவை அமைப்பில் மாநிலங்கள் இணைவதன் மூலம் அவற்றின் வரி வருவாயில் 14 விழுக்காடு வளர்ச்சிக்கு நிதி இழப்பீடுகள் மூலம் உத்தரவாதம் அளிக்கப்படும் என பாஜக அரசு வாக்குறுதி அளித்தது. அதை நம்பி சரக்கு சேவை அமைப்பை ஏற்றுக்கொண்ட மாநிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் சரியாக வழங்கப்படவில்லை. அவற்றின் வரி வருவாய் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் குறைந்துள்ளது. சரக்கு சேவை வரியால் நிதி இறையாண்மையை முற்றிலும் இழந்த மாநிலங்களுக்கு எஞ்சியுள்ள மின்சாரத்தின் மீதான வரியுரிமையையும் பறிக்கும் விதமாக, கூட்டுறவுக் கூட்டாண்மைத் தத்துவத்திற்குப் புறம்பான பரிந்துரையையே நிட்டி ஆயோக் அளித்துள்ளது.

2021ல் ஹுருன் குளோபல் 500 எனப்படும் உலகின் மிகவும் மதிப்புமிக்க 500 தனியார் நிறுவனங்களின் பட்டியலில் 12 இந்திய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. இந்திய நிறுவனங்களின் பட்டியலில் 18800 கோடி அமெரிக்க டாலர் சந்தை மூலதனத்துடன் ரிலையன்ஸ் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது.

பங்குச் சந்தையின் தற்போதைய ஏற்றத்திற்கும் உண்மையான பொருளாதாரத்திற்கும் இடையே

இணைப்பில்லாத தன்மை காணப்படுகிறது என்று மத்திய வங்கி ஆளுநர் உட்பட பெரும்பாலானோர் கருத்து தெரிவித்துள்ளனர். ராஜ்ய சபாவில் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது தான் அத்தகையக் கருத்துடன் உடன்படவில்லை. இந்த உயர்வு 2020 ஆண்டிலும் இரண்டாவது அலையிலும் நீடித்தது என்பதால் தற்காலிகமானது அல்ல என்றும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். மார்ச் 2020 முதல் சந்தை ஏற்ற இறக்கம் அதிகரித்துள்ளது ஆனால் நிதியமைச்சர் அதைத் தலைகீழாக்கி மார்ச் 2020 முதல் சந்தை ஏற்ற இறக்கம் குறைந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். பங்குச் சந்தைகள் இந்திய பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளை பிரதிபலிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். அரசின் தூண்டுதல் நடவடிக்கைகளால் ஏற்படவுள்ள பொருளாதார மறுமலர்ச்சியை முன்னோக்கி இந்தியாவின் பங்குச் சந்தைகள் உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். மலிவு பணக் கொள்கையால் நிதியளிக்கப்பட்டு பெருகியுள்ள ஊகமுதலீடுகளால் இயக்கப்படும் பங்குச் சந்தையின் ஏற்றத்தை பொருளாதார வளர்ச்சியாகப் பார்ப்பது பொருளாதார அறிவின்மையையே வெளிப்படுத்தப்படுகிறது.

அந்நியச் செலாவணிக் கையிருப்புத் தொகையானது நடப்புக் கணக்கு உபரியல்ல. இன்னமும் நாம் நடப்புக் கணக்கு பற்றாக்குறை நிலையில்தான் உள்ளோம் என்று தலைமை வங்கி ஆளுநர் சக்திக் காந்த தாஸ் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நிதியமைச்சரோ 620 பில்லியன் டாலர் அந்நிய செலாவணி இருப்பு பொருளாதார வளர்ச்சியின் ஒரு நல்ல குறிகாட்டி எனக் கூறியுள்ளார்.

<u>பணவீக்கம்:</u>

மொத்த விலை பணவீக்கம் ஜூலை மாதத்தில் 11.16 விழுக்காடாக உயர்ந்துள்ளது, எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 26.02 விழுக்காடு உயர்ந்துள்ளது. ஜூன் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 6.73 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 9.27 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 7.75 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 8.91 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 9.04 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை. 20.82 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 32.53 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன்,இறைச்சியின் விலைவாசி 8.33 விழுக்காடு உயர்ந்துள்ளது.

ஜூன் மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி ஜூன் மாதத்தில் உற்பத்தி 13.6 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 23.1, 13.0, 8.3 விழுக்காடு உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் பொதுமுடக்கத்தின் தாக்கத்தால் உற்பத்தி சரிவடைந்ததன் அடிப்படையில் இந்த உயர்வை புரிந்துகொள்ளவேண்டியது அவசியம். முதன்மை பொருட்கள், மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், உற்பத்தி அளவுகள் முறையே 12.0, 25.7, 22.6, 19.1 விழுக்காடு உயர்ந்துள்ளன. உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 30.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 4.5 விழுக்காடு குறைந்துள்ளது.

ஜூலையில் தொழில்துறை வளர்ச்சி:

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு ஜூலையில் 9.4 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு ஜூலை மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 18.7 விழுக்காடு அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 3.2 விழுக்காடு குறைந்துள்ளது, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்களின் உற்பத்தி 6.7 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 0.5 விழுக்காடு அதிகரித்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 18.9 விழுக்காடும், எஃகு உற்பத்தி 9.3 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 21.8 விழுக்காடும், மின்சார உற்பத்தி 9.0 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

2021-22 (ஏப்ரல்-ஜூன்) முதல் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு பொருளாக்க மதிப்பீடு:

2021-2022 நிதியாண்டின் முதல் காலாண்டில்(ஏப்ரல்-ஜூன்) இந்தியாவின் மொத்த பொருளாக்க மதிப்பு 332.38 லட்சம் கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது, 2020-21 முதல் காலாண்டில் பொதுமுடக்கத்தால் மொத்த பொருளாக்க மதிப்பு 26.95 லட்சம் கோடி ரூபாயாக சரிவடைந்து வளர்ச்சிவிகிதம் 24.4 விழுக்காடு குறுக்கமடைந்தது. அதனுடன் ஒப்பிடும்போது, இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் வளர்ச்சி 20.1 விழுக்காடாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது

உண்மையான வளர்ச்சியைக் குறிப்பிடவில்லை. பொருளாதாரம் கொரோனா தாக்கத்திற்கு முந்தைய நிலையை அடையவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது.முதல் காலாண்டில் மதிப்புக் கூட்டலின் மதிப்பு 18.8 விழுக்காடு உயர்ந்துள்ளது. விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி 4.5 விழுக்காடும், சுரங்கத் தொழில்களின் வளர்ச்சி விகிதம் 18.6 விழுக்காடாகவும், உற்பத்தித் துறையின் வளர்ச்சி 49.6 விழுக்காடாகவும், மின்சாரம்,நீர் வழங்கல், பிற சேவைகளின் வளர்ச்சியானது 14.3 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளன. வர்த்தகம், போக்குவரத்து, ஹோட்டல், தகவல் தொடர்புதுறைகளின் வளர்ச்சி 34.3 விழுக்காடாகவும், நிதி, வீட்டுமனை, தொழில் சேவைத் துறைகளின் வளர்ச்சி 3.7 விழுக்காடாகவும், பொது நிர்வாகம், பாதுகாப்புத் துறையின் வளர்ச்சி 5.8 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளன.தனியார் நுகர்வு செலவினம் 55.1 விழுக்காடும், அரசு நுகர்வு செலவினம் 13 விழுக்காடும், மொத்த நிலை மூலதன உருவாக்கத்தின் மதிப்பு 31.6 விழுக்காடும் அதிகரித்துள்ளது.


உள்கட்டமைப்பு சொத்துக்களை பணமாக்கி உள்கட்டமைப்பை மேம்படுத்துவோம் என்று கூறுவதில் ஏதேனும் தர்க்கப் பொருத்தம் உள்ளதா. சாலைகள், ரயில்வே தடங்கள் போன்ற உள்கட்டமைப்புகளை பணமாக்கி புதிய சாலைகள், ரயில்வே தடங்கள் அமைக்கப்படுமாம். இத்திட்டம் பொருளாதார மீட்சிக்கு தேவையான ஊக்கத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம். தேசிய உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான நிதித்திட்டம் 100 லட்சம் கோடிக்கு மேலான முதலீட்டின் மூலம் அரசு-தனியார் கூட்டாண்மை அடிப்படையில் செயல்படுத்தப்படும் என பிரதமரும், நிதியமைச்சரும் அறிவித்திருந்தனர். இதன் கீழ் ரூ.6லட்சம் கோடி சொத்து பணமாக்குதல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் அரசு சொத்துக்கள் தனியார்மயமாக்கப்படாது,

விற்கப்படாது என்றும் அரசு தற்போதுள்ள உள்கட்டமைப்பு சொத்துக்களை தனியார் துறையுடனான ஒப்பந்தக் கூட்டாண்மை மூலம் வருவாய் பகிர்வு மாதிரியின் கீழ் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுவதன் மூலம் பணமாக்க உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசின் வரியல்லா வருவாய் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது. நான்கு ஆண்டுகளின் முடிவில் ஏட்டளவில் வேண்டுமானால் சொத்துக்களுக்கு அரசு உரிமைதாரராக இருக்கலாம். அரசே தனியாருக்கு விலை போனபின் அரசின் சொத்துக்கள் தனியார்வசமாகாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இத்தகைய திட்டம் ஆஸ்திரேலியாவில் செயல்படுத்தப்பட்டு தோல்வியடைந்துள்ளது எனும் போது எவ்வாறு இத்திட்டத்தால் பொருளாதார மீட்சிக்கு உதவமுடியும்?. ஆஸ்திரேலியாவிடமிருந்து பாடம் பெறாமல் கண்மூடித்தனமாக இத்திட்டத்தை செயல்படுத்துவது பாஜக அரசின் பிடிவாதமான நவீன தாராளமயப் போக்கையும், பொறுப்பின்மையையுமே சுட்டிக் காட்டுகிறது. 6 லட்சம் கோடி நிதித் திரட்டவே இந்த கதி என்றால், எந்த அடிப்படையில் 100 லட்சம் கோடி ரூபாயில் செயல்படுத்தப்படும் என வாய்ச் சவடால் அடிக்கிறது பாஜக அரசு?. தனியார் துறையிடம் அரசு சொத்துக்களை ஒப்படைப்பது முற்றிலும் ஜனநாயகத்துக்கு புறம்பானது. இந்தியாவில் 2016ல் சொத்து வரிவிதிப்பு நீக்கப்பட்டது. உலக வங்கி மதிப்பீடுகள் இந்தியாவில் அமெரிக்காவை விட வருவாய் சமமின்மை அதிகமாக உள்ளதாகக் குறிப்பிடுகிறது.2019ல் பெருநிறுவனங்களின் மீதான வரியும் குறைக்கப்பட்டது. இத்தகைய கேடுகெட்ட பணமாக்கல் திட்டத்திற்கு பதிலாக பெருநிறுவனங்களின் மீதான வரியை அதிகரித்து, சொத்துவரியை மீண்டும் கொண்டுவருவதன் மூலம் பெறப்படும் நிதியை பொதுத்துறை முதலீடுகளுக்காகவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் பயன்படுத்தமுடியும்.அதற்காக அனைத்து அமைப்புகளும் குரல் கொடுக்கவேண்டும்.

ஐயா சுபவீயைக் கூண்டில் ஏற்றுகிறோம்! (2)


# விட்டுப் போகும் விடுதலைக் குறிக்கோள்!

--- வே. பாரதி ----



திராவிட வல்லுநர் மன்றம் நடத்திய இணைய வழிக் கருத்தரங்கில் சுபவீ அவர்கள் ஆற்றிய உரை 21.05.2021 நாளிட்ட முரசொலியில் கட்டுரையாக வெளியிடப்பட்டுள்ளது. அதில்தான் தோழர் தியாகு குறித்துப் பேசினார் சுபவீ அவர்கள். அதற்குத் தோழர் தியாகு மறுவினையாற்றினார். அதற்குப் பிறகே வலையொளி நேர்காணலில் தோழர் தியாகு குறித்த அந்தச் சொற்களைப் பேசியிருந்தார் சுபவீ. அச்சொற்களுக்குரிய மறுப்பைக் கடந்து கோட்பாட்டு மறுப்பையும் மாறுபாட்டையும் முன்வைக்கிறேன்.

திராவிட வல்லுநர் மன்றக் கருத்தரங்கில், திராவிடம் இனமோ நாடோ அல்ல திராவிடம் ஒரு



கருத்தியல் என்பதை நிறுவ முற்படுகிறார் சுபவீ. கருத்தியலுக்குரிய வரையறையையும் முன்வைத்துள்ளார். அவை குறித்துக் கருத்தாடுவதற்கு முன் சுபவீ அவர்களின் வரலாற்று மறைப்பு குறித்த நமது மறுப்பை முதலில் முன்வைத்திட வேண்டும். சுபவீ அவர்கள் போகிற போக்கில் பெரியாரும் திராவிடத்தைக் கருத்தியலாகவே முன்வைத்ததான தோற்றத்தை ஏற்படுத்துகிறார். அதற்காகவே அண்ணாவின் மாநிலங்களவைக் கன்னிப் பேச்சில் அண்ணா திராவிடத்தைக் கருத்தியலாகவே கையாண்டார் என நிறுவ மேற்கோள் காட்டுகிறார். திராவிடம் ஒரு கருத்தியல் என சுபவீ கருதுவதில் மாறுபாடு இல்லை. ஆனால் பெரியாரும் அண்ணாவும் திராவிடத்தை இனமென்றும் நாடென்றும் பேசிவந்த வரலாற்றை மறைக்காது முன்வைக்க சுபவீ அவர்களை எது தடுக்கிறது?

பெரியார் திராவிடத்தை நாடாகவும் திராவிட இனத்தவராகவும் குறிப்பிட்டு வந்ததை யாரும் மறுக்க முடியாது. திராவிட நாடு திராவிடருக்கே என்கிற முழக்கம் திராவிடக் கருத்தியலுக்கான நேரடி முழக்கமன்று. நாடு இனம் தொடர்பான முழக்கமே அது. பெரியாரின் இரண்டு கட்டுரைகளில் உள்ளவற்றை மட்டும் எடுத்துக்காட்டினால் போதும் :



"தமிழ்நாடு ஒரு தனி நேஷனாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் திராவிடம்"

"இங்கிலாந்து ஸ்காட்லாந்து அயர்லாந்து ஆகிய மாகாணங்கள் பெரிதும் மொழிவாரியாக இருப்பது போலும் மற்றும் பல மேல்நாடுகளில் இருக்கும் உள்மாகாணப் பிரிவுகள் போலும் திராவிடம் என்ற தலைத்தேசத்தில் மொழிவாரி மாகாணங்கள் இருக்கும்"

"திராவிடர் அல்லாத வெளிநாட்டார் திராவிடத்தில் அரசியல் சமுதாயம் பொருளாதாரம் முதலியவற்றில் ஆதிக்கம் செலுத்தாமலும் திராவிடச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போகாமலும் பார்த்துக் கொண்டு நேசதேசமாய் இருந்து வரும்."

"தமிழர் அல்லது திராவிடர்கள் பிறவியில் உயர்வு தாழ்வு கொள்கை இல்லாதவர்களாயிருப்பதும் திராவிடத்தில் புகுந்து குடியேறி ஆதிக்கம் கொண்ட ஆரியர் பிறவியில் உயர்வு தாழ்வு என்பதையே அடிப்படையான கொள்கையாகக் கொண்ட சமய சமூகத்தவராயிருப்பதும் ஆகும்."



இவ்விரு கட்டுரைகளின் தலைப்பு : இந்தியா ஒரு நேஷனா? சுதந்திரத் தமிழ்நாடு, தமிழ்நாடு விடுதலைக்காக எழுதுகிற போது கூட திராவிடத்தை இனம் நாடு எனக் கையாள்கிறார் பெரியார். சுதந்திரத் தமிழ்நாடு என்ற பிறகு திராவிட நாடு தேசம் எனத் தமிழ்நாட்டை அழைப்பது ஏற்கத்தக்கதல்ல. அது திறனாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆனால் பெரியார் இந்தியாவிலிருந்து தமிழ்நாடு விடுதலை பெற வேண்டும் என்ற அடிப்படையில் நின்றே இவற்றைப் பேசுகிறார் எழுதுகிறார். தோழர் தியாகு திராவிடத்தின் உள்ளடக்கம் தமிழ்த் தேசியம் என நேர்நிறையாகக் காண்பதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

மேற்சொன்ன சுபவீ அவர்களது கட்டுரையில் அண்ணாவின் மாநிலங்களவைப் பேச்சிலிருந்து மேற்கோள் காட்டி அந்த மேற்கோளைக் கொண்டு அண்ணாவும் திராவிடத்தைக் கருத்தியலென்றே குறித்திருப்பதாக வாதிடுகிறார். அந்த மேற்கோள் :
"உலகத்தவர்க்குக் கொடுப்பதற்கு மிக உறுதியான மிகத் தெளிவான மிக வேறுபட்டவை திராவிடரிடம் இருப்பதாலேயே நான் அப்படி அழைத்துக் கொள்கிறேன்."
எப்படி அழைத்துக் கொள்கிறார்? "நான் திராவிடக் கூட்டத்தை அல்லது இனத்தைச் சார்ந்தவன்." இதைக் குறிப்பிட்டு ஐயா சுபவீ திராவிடத்தைக் கருத்தியலாகவே அண்ணா காண்கிறார் என்கிறார்.

அண்ணா மிக உறுதியான மிகத் தெளிவான மிக வேறுபட்டவை திராவிடரிடம் இருப்பதாலேயே என்கிறாரே தவிர இருப்பவர்கள் திராவிடர்கள் என்று குறிப்பிடவில்லை. மிக உறுதியான மிகத் தெளிவான மிக வேறுபட்டவை திராவிடரிடம் இருப்பதாலேயே நான் திராவிடக் கூட்டத்தை அல்லது இனத்தைச் சார்ந்தவன் எனச் சேர்த்துப் புரிந்து கொண்டால் அண்ணா திராவிடர் என்பதை இனத்தின் பேராலேயே குறிப்பிடுகிறார் என எளிதில் புரிந்து கொள்ளலாம். இதைக் கூட அவரவர் கருத்துக்கேற்ப பொருள் புரிந்து கொள்வதில் உள்ள மாறுபாடு எனலாம்.

அண்ணாவின் அதே உரையின் முற்பகுதியில் உள்ளதைத் தோழர் தியாகு தனது மறுப்பில் எடுத்துக்காட்டியதை இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டும் :

"நான் ஒரு நாட்டிலிருந்து வருகிறேன். அது இப்போது இந்தியாவின் பகுதியாக உள்ளது. ஆனால் அது வேறு கூட்டத்துக்குரிய நாடெனக் கருதுகிறேன், அது பகைமை கொண்டதாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. நான் திராவிடக் கூட்டத்தைச் சேர்ந்தவன். என்னைத் திராவிடன் என அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்."

சுபவீ அவர்களே எடுத்துக்காட்டும் இன்னொரு பகுதி: "நாங்கள் குறுகிய எண்ணம் கொண்டவர்கள் இல்லை. ஒரே உலகம், ஒரே அரசு என்பதைக் கூட நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அதற்காக எங்கள் தேசிய இன வரையறைகளை மறந்துவிட முடியாது."

இவையெல்லாம் அண்ணா திராவிடத்தைக் கருத்தியலாக அல்ல, இனம் நாடென்றே குறித்ததற்கான சான்றுகள். இதனையும் கூட தோழர் தியாகு அறிஞர் அண்ணா திராவிடம் எனச் சொன்னதை மட்டும் விட்டுவிட்டு அண்ணா தமிழினத்தையும் தமிழ்நாட்டையுமே குறித்ததாகப் போற்றுவேன் என்றே சுபவீக்கான மறுப்பில் சொல்லியிருந்தார். எல்லாவற்றையும் விட மாநிலங்களவையின் கன்னிப்பேச்சில் அண்ணா திராவிட இனத்தின் தன்தீர்வு அல்லது சுயநிர்ணயத்தை வலியுறுத்துகிறார்.

எல்லாம் இருக்கட்டும். தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் திராவிடத்தை இனமென்றும் நாடென்றும் குறித்தவர்களே. நாங்கள் சொல்லும் திராவிடர் என்பது யாது எனக் குறிக்க வரும்போது வெளிப்படும் விளக்கத்தை மறுக்கவில்லை. அதிலும் சுபவீ அவர்களின் பங்களிப்பும் அவர் தரும் அழுத்தமும் கூடுதலானது. சுபவீ திராவிடம் என்பது கருத்தியல் என வழங்குவதில் நமக்கு மாறுபாடில்லை. ஆனால் பெரியாரையும், குறிப்பாக அண்ணாவையும் தனது நிலைப்பாட்டுக்குத் துணைக்கழைத்து அவர்கள் திராவிடத்தை இனமென நாடெனக் குறித்ததில்லை (அல்லது குறித்ததாக ஒருவரி கூடக் குறிப்பிடவில்லை) எனக் கடப்பது நியாயமில்லையே!

திராவிடத்தை இனமில்லை, நாடில்லை எனக் குறித்து அதனை இறுதியில் கருத்தியலாக சுபவீ

முன்வைக்க முற்படுகிறார். திராவிடக் கருத்தியலை ஏற்றுக் கொண்டுள்ள தமிழர் திராவிடத் தமிழர் ஆகிறார். அதாவது திராவிடர் ஆகிறார். திராவிடர் என்பதை சுபவீ இப்படி நிலைப்படுத்தினாலும் திராவிட இயக்கத்தின் இருபெரும் தூண்களான பெரியாரும் அண்ணாவும் திராவிடத்தை இனம் நாடெனக் குறித்து வந்ததை வரலாற்றில் அவ்வளவு எளிதாக அழித்து விட முடியாது. சுபவீயே அழுத்தமாகக் குறிப்பிடுகிறார்:

"தமிழ் என்பது நம் மொழியின் பெயர். தமிழர் என்பது நம் இனத்தின் பெயர். தமிழ்நாடு என்பது நிலத்தின் பெயர். நூற்றுக்கு நூறு உண்மை."

தமிழ்நாடு என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் நமது இலக்கியங்களே குறித்து நிற்க, தமிழர் நம் இன அடையாளத்தைத் திராவிடர் என்றும், தமிழ்நாடு எனும் நம் நிலத்தின் அடையாளத்தை திராவிடநாடு என்றும் குறித்தது பிழையானதே. ஒரு தேசிய இனத்தின் முதன்மை அடையாளங்களை --- மாற்ற முடியா அடையாளங்களை --- மாற்றுவதுக் குறித்து கேள்வி எழுப்பித்தான் ஆக வேண்டும். பெரியார் அண்ணா மீது உள்ள பெருமதிப்பைக் குறைக்காமலேயே இந்தக் கேள்வியை முன்வைக்கத்தான் வேண்டும். சுபவீ அவர்கள் திராவிடம் கருத்தியலே எனக் குறிப்பது ஒருவகையில் நன்று. ஆனால் நமது வரலாற்றின் பின்புலத்திலிருந்து பார்க்கும் போது நமது தமிழின அடையாளம் திராவிட இன அடையாளமென்றே நிலைப்படுத்தப்படுமோ எனக் கவலையோடு எண்ண வேண்டியுள்ளது. நல்வாய்ப்பாக சுபவீ அவர்கள் திராவிடம் கருத்தியல்தான் என நிறுவும் முன்னேற்றத்துக்குரிய அரும்பணியைச் செய்கிறார். என்றாலும் திராவிடம் இனமல்ல, நாடல்ல என்ற முடிவுக்கு வந்த பிறகும் கருத்தியலென திராவிடத்தை நிறுவிக்காட்ட முற்படுகிறார். அதுவும் இருக்கட்டும்! திராவிடக் கருத்தியல் என்கிற சுபவீயின் வரையறுப்பில் ஒன்றுமட்டும் எப்போதும் விடுபட்டுப் போகிறதே! விடுபட்டுப் போவது எது?

தந்தை பெரியார் அடிப்படையில் இந்தியாவைத் தேசம் எனக் கோட்பாட்டளவில் ஏற்றதில்லை. திராவிடம் திராவிட இனம் எனப் பேசிய போதும் மொத்தத்தில் பெரியார் தமிழரை தமிழினத்தையே குறித்தார். தமிழ்நாடு இந்தியாவுக்குரியதல்ல என முன்வைக்கும் தெளிவும் துணிவும் பெரியார் ஒருவருக்கே இருந்தது. இந்தியா நமது தேசமல்ல என்பதை பெரியார் ஒருசேர இரண்டு நிலைப்பாடுகளில் நின்று அறிவுறுத்தினார். ஒன்று சாதியம் அதாவது

பார்ப்பனீயம்! மற்றது வடவர் சுரண்டல் அதாவது பனியாக்களின் முற்றுரிமை! அதனால்தான் பெரியார் இந்தியக் கட்டமைப்பு பார்ப்பன பனியாக் கட்டமைப்பு என வரையறுத்தார். இப்படி ஒரு வரையறுப்பைச் செய்தது அன்று பெரியார் ஒருவரே! பறையன் பட்டம் ஒழியாமல் சூத்திரப் பட்டம் ஒழியாது என்ற பெரியார்தான் இந்தியா ஒழியாமல் சாதி ஒழியாது என்று அறுதியிட்டுரைத்தார். தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கம் சாதியத்திற்கெதிரான முழக்கம். வடவர் ஆதிக்கத்திற்கெதிரான முழக்கம். அது தமிழர்களின் விடுதலை முழக்கம்!

சுபவீ அவர்கள் குறிப்பிடுகிற அண்ணாவின் மாநிலங்களவை உரையில் சுபவீயே எடுத்துக்காட்டுகிறார். அதில் அண்ணா இப்படிக் கேள்வி எழுப்புகிறார் : "கன்னியாகுமரியிலிருந்து இமாலயம் வரையில் இங்கே ராமரையும் கிருஷ்ணரையும் வணங்குவதால் இதனை ஒரே தேசம் என்று சிலர் கூறுகின்றனர். அப்படிப் பார்க்க முடியாது. அவ்வாறாயின் ஐரோப்பா முழுவதும் யேசுநாதரை வணங்குகின்றனர். அதனால் அது ஒரு தேசம் ஆகிவிடுமா?"அண்ணா அதே உரையில் எங்கள் தேசிய இன வரையறைகளை மறந்து விட முடியாது என்கிறார். தேசிய இனத் தன்தீர்வுரிமையை (சுயநிர்ணய உரிமையை) வலியுறுத்துகிறார். இது எல்லாம் அண்ணாவின் மாநிலங்களவைப் பேச்சுகளில் மட்டுமல்ல, வேறுபல பேச்சுகளிலும் எழுத்துகளிலும் தமிழ்த் தேசியமாக மிளிர்ந்து வெளிப்படக் காணலாம். இந்திய வல்லாதிக்கத்தைத் தோலுரித்ததில் அண்ணாவின் பங்கு எண்ணத்தக்கது. விரிவஞ்சிச் சான்றுகளை விடுவோம்.

திராவிடம் எனும் கருத்தியலுக்கு சுபவீ குறிப்பிடும் வரையறைகளில் விடுபடுவது எது என இப்போது விளங்கியிருக்கும். நான் இந்தியனல்ல... இந்தியா எனது தேசமல்ல... தமிழ்நாடு விடுதலை என்கிற கருத்துகளும் அடங்கியதே திராவிடம் என முன்வைப்பதற்கு எது சுபவீ அவர்களைத் தடுக்கிறது? ஏன் அதனை மட்டும் விட்டுவிடுகிறார்? அவரே விடை சொல்லட்டும்.

அண்ணா அவர் காலத்திலேயே திராவிட விடுதலையைக் காரணங்கள் அப்படியே இருந்தும் கைவிட்டார். மாநில சுயாட்சி என்றார். இன்று இந்தியக் கொடி ஏற்றும் 'உரிமை' பெற்றும் இந்திய விடுதலையை ஏற்ற அண்ணா வழியில் இந்தியக் குடியரசுக்குச் சலாம் போடும் கட்சியாகியுள்ளது திராவிட முன்னேற்ற கழகம். இந்திய மறுப்பு தமிழ்நாடு விடுதலை மரபைத் தவறியும் திராவிடத்துள் சேர்க்காமல் விடுவது திமுக ஆதரவுக்காகத்தானே! அல்லது திமுகவை ஆதரிக்க வேண்டும் என்பதற்காக அம்மரபைக் கைவிடுவதாகப் பொருள்.

விடுதலைச் சிந்தையை மறைப்பதும் ஒழிப்பதும்தான் உங்கள் திராவிடம் என்றால், விடுதலை அரசியலை ஒழிப்பதுதான் இந்தியம் என்றால், இரண்டுமே ஒரே நேர்கோட்டில் நிற்கின்றன. இந்தத் திராவிடத்தை முன்னிறுத்தத்தான் திராவிடம் ஒரு கருத்தியல் என்று திராவிடத்தைச் சுபவீ உயர்த்திப் பிடிக்கிறாரோ?

திராவிடம் ஒரு கருத்தியல் என்பதற்குரிய குறிப்பான இரு வரையறைகளை இனி எடுத்துக் கொள்வோம். சாதிபேதமற்ற பாலின சமத்துவத்தை ஏற்றவர்கள் திராவிடர்கள். பார்ப்பனரல்லாத தமிழர்கள் திராவிடர்கள்.

சாதி, பாலின பேதத்தை விட்டொழித்து சமத்துவத்தை ஏற்ற பார்ப்பனர்களை என்னவென்று வரையறுப்பது? அவர்கள் தமிழர்களா திராவிடர்களா? சுபவீ அவர்களின் கூற்றுப்படி அவர்கள் திராவிடர்கள். தமிழர் என்றால் பார்ப்பனர்களும் தம்மைத் தமிழர்கள் எனச் சொல்லிக் கொள்வர். திராவிடர் என்றால் அவர்கள் வர மாட்டார்கள் என்பதைக் கொண்டே திராவிடர் என்பதை திராவிட இயக்கத்தினர் முன்வைத்து வருவதை அறிவோம். அதாவது திராவிடர் என்றால் ஒரு பார்ப்பனக் குஞ்சுகூட நுழைய முடியாது என்பர். நமது கேள்வி : சாதி ஒழிப்பையும் பாலின சமத்துவத்தையும் கொள்கையாக ஏற்ற பார்ப்பனர்களை நாம் எற்கிறோமா மறுக்கிறோமா?

பூணூல் அறுத்தெறிந்து சாதி மறுப்பு மணம் புரிந்து சாதி ஒழிப்பு இலட்சியமேந்தி தம் சாதியினருக்கு எதிரான கலகக் குரல் எழுப்பும் பார்ப்பனர்கள் இங்கே உண்டு. ஒரே ஒரு சான்றைப் பேசினால் போதும். நமக்குச் சின்னக்கூத்தூசியாரைத் தெரியும். பிறப்பால் பார்ப்பனர் எனினும் சாதி ஒழிப்புக்காரர்! பெரியாரையும் அண்ணல் அம்பேத்கரையும் கோட்பாட்டளவில் நிறுவுவதை தன் பெருங்கடமையெனக் கருதிச் செயல்பட்டவர். திராவிட இயக்கத்தைத் தன் இறுதி மூச்சுவரை ஆதரித்து நின்றவர். ஏன் திராவிட இயக்கத்தின் மீதான பிடிப்பு திமுக ஆதரவாகத் தொடர்ந்து கலைஞரைத் தம் தலைவரெனக் கருதியவர். பெரியாரின் பேருழைப்பாலும் சமத்துவ அரசியல் ஏற்படுத்திய தாக்கத்தாலும் பார்ப்பனராய் பிறந்தோர் சிலர் பெரியாரியர்களாக இருந்து வருவதை நாம் காண்கிறோம்.

பார்ப்பனராகப் பிறந்தவர்களில் சாதி ஒழிப்பையும் பாலின சமத்துவத்தையும் கொள்கையாகக் கொண்டோர் நம்மிடையே உண்டு. அது குறைந்த எண்ணிக்கையாகக் கூட இருக்கட்டும். ஏன் ஒரே ஒருவராகக் கூட இருக்கட்டும். அது பார்ப்பனராய்ப் பிறந்தாலே அவர் பார்ப்பனியத்தின்

பக்கமே நிற்பார் என்ற நிலைப்பாடு பிழையானது என்பதை எடுத்துக்காட்டப் போதுமானது. பார்ப்பனர்களும் பார்ப்பனியத்திலிருந்து விடுபடுவதே சமூகநீதியின் மெய்யான வெற்றியாகும். மாறாகப் பார்ப்பனர்கள் எல்லோரையும் கட்டம்கட்டி இன ஓர்மையிலிருந்து விலக்கி வைப்பது அந்தச் சமூகத்திலிருந்து வெளிவரும் சமூகநீதிக் கொள்கையாளர்களை நாமே அணைகட்டித் தடுப்பதாகும். அது சமூகநீதியின் இறுதி வெற்றியை நாமே தடுப்பதாகும். இவ்வகையில் அது சமூக அநீதியாகும்.

பார்ப்பனரில் நமது கொள்கையாளர்கள் வெளிவரமாட்டார்கள் எனக் கருதுவதற்கு எது அடிப்படை? அவர் பார்ப்பனராய் பிறந்திருப்பதே அடிப்படை? அப்படியானால் பிறப்பைக் கொண்டு ஒரு மனிதரைத் தீர்மானிக்கிறோம் என்று பொருள். பார்ப்பன மேலாண்மையை நிலைப்படுத்த பார்ப்பனர்கள் வகுத்த கருத்தியலையே பார்ப்பனியம் என்கிறோம். பார்ப்பனியம் என்பது சாதியமே! அதன்படி பிறப்பின் அடிப்படையில் ஒருவரைத் தீர்மானிப்பதே பார்ப்பனியம். திராவிடத்துள்ளும் பார்ப்பனியம் நிலைபெறுவதும் திராவிடமே பார்ப்பனியத்தைக் கைக்கொள்வதும் தகுமா?

பார்ப்பனர்களில் பலர் புரட்சிகர இயக்கங்களில் இருந்து செயல்படுகின்றனர். பெரியாரின் தொண்டர்களாக இருந்து சமூகநீதிக் களத்தில் நிற்கின்றனர். தமது பிள்ளைகளைச் சாதியற்றோராக வளர்க்கின்றனர். பெரும்பான்மையாக இல்லையெனினும் இப்படி ஒரு மாற்றமும் நிகழ்ந்திருக்கிறது, நிகழ்ந்து கொண்டுமிருக்கிறது என்பதைப் பார்க்கத் தவறுவது இயங்கியல் மறுப்பாகும். பிறப்பைக் கொண்டு மொத்தமாகவே ஒரு மக்கள் சமூகத்தையே புறக்கணித்தல் ஒருவகைப் பாசிசமே ஆகும். நாம் பார்ப்பனியத்தை எதிர்ப்போம். பார்ப்பனியத்தின் ஆளுருவமான பார்ப்பனர்களையும் எதிர்ப்போமே தவிர, பார்ப்பனியத்தை எதிர்க்கும் பார்ப்பனர்களை அல்ல.

தந்தை பெரியார் பார்ப்பனியத்தை எதிர்த்தார். பார்ப்பனர்களையும் எதிர்த்தார். ஆனால் பார்ப்பனிரிடையே மாற்றம் வரும் என்கிற நம்பிக்கையை அவர் இழந்து விடவில்லை. பகவத் கீதையை விட்டுவிட்டுத் திருக்குறளை ஏற்கும் பார்ப்பனர்கள் ---- சமற்கிருதத்தை விட்டுவிட்டுத் தமிழை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனர்கள் --- நம் எதிரிகள் அல்ல. அவர்களை ஏற்பதில் எனக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்று பெரியார் குறிப்பிட்டதை அண்மையில்

உடுமலையில் நடைபெற்ற பெரியார்-143 நிகழ்வில் அண்ணன் கொளத்தூர் மணி அவர்கள் சுட்டிக்காட்டினார். பார்ப்பனத் தோழர்களுக்கு... என்றே பெரியார் எழுதியதை நாம் அறிவோம்.

"பார்ப்பனத் தோழர்களே! நான் மனிதத்தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லன். தமிழ்நாட்டிலேயே அநேக பார்ப்பனப் பிரமுகர்கள் - பெரியோர்கள் ஆகியோர்களுக்கு அன்பனாகவும் மதிப்புக்குரியவனாகவும் நண்பனாகவும் கூட இருந்து வருகிறேன். சிலர் என்னிடத்தில் அதிக நம்பிக்கையும் வைத்துள்ளார்கள்.

”சமுதாயத் துறையில் பார்ப்பனர்கள் அனுஷ்டிக்கிற உயர்வு அவர்கள் அனுபவிக்கிற அளவுக்கு மேற்பட்ட விகிதம் ஆகியவைகளில்தான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இது பார்ப்பனர்களிடம் மாத்திரமல்ல, இந்த நிலையில் உள்ள எல்லோரிடத்திலுமே நான் வெறுப்புக் கொள்கிறேன்."

"ஆகவே உள்ள பேதங்கள் மாறி நாம் ஒருவருக்கொருவர் சமமாகவும் சகோதர உரிமையுடனும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் பாடுபடுகிறேன். நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக் கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு.” (விடுதலை, 8.1.1953)

இவை எல்லாம் தந்தை பெரியாரின் வரிகள். பெரியாரில் தேங்கிப் போகாமல் பெரியாரை வளர்த்தெடுத்தலே நமது பொறுப்பும் கடமையும் ஆகும். பார்ப்பனர்களில் உள்ள சமூகநீதி ஆற்றல்களைத் தள்ளி நிறுத்துதல் குடியாட்சிய மறுப்பாகும். பார்ப்பனர்களில் சாதி ஒழிப்பாளர் இருக்க முடியுமெனில் பார்ப்பனர்களை விலக்கி வைக்கவென்றே நமது இன அடையாளத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. திராவிடம் ஒரு மக்கள் கூட்டத்தையே பிறப்பினடிப்படையில் புறக்கணிக்கும் என்றால், தமிழம் அவர்களில் உள்ள சமூகநீதியர்களை ஏற்கும் என்றால், தமிழர் எனும் அடையாளமே சாதி ஒழிக்கும் என்பது எங்கள் நிலைப்பாடு.

திராவிடத்துக்கு வரலாற்று வழி நின்று ஒரு வரையறையை முடிவு செய்து விட்டால் இன்னும்

திறனாய்வைத் துல்லியமாக்கலாம். சென்ற மறுப்பிலேயே குறிப்பட்டதுதான். இங்கே அது இன்னும் அழுத்தம் பெறத்தக்கது என்பதால் மீண்டும் ஒருமுறை முன்வைக்கிறேன். சாதி ஒழிப்பு, பார்ப்பனிய ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பெண் விடுதலை, இந்துமத ஒழிப்பு, இந்தியத் தேசிய மறுப்பு, தமிழ்நாடு தமிழருக்கே இவைதான் திராவிடத்துக்குரிய வரையறை! தமிழ்நாடு தமிழருக்கே திராவிட நாடு திராவிடருக்கே என மாறியது. மீண்டும் தமிழ்நாடு தமிழருக்கே என 1956க்குப் பிறகு மாறியது. அதன்பின் பெரியார் தனது இறுதிக் காலம் வரை அந்த முழக்கத்தை கைவிடவே இல்லை.

இந்த வரையறையில் ஒன்றிரண்டு இல்லாத இயக்கத்தையோ கட்சியையோ திராவிட இயக்கம் என்றோ திராவிடக் கருத்தியல் கொண்டது என்றோ கருத இடமில்லை. இந்த வரையறையில் உள்ளதில் எது இடம்பெறத்தக்கதல்ல என சுபவீ அவர்களே குறிப்பிடலாம். இயக்கங்களில் தாய்க் கழகமாக உள்ள திராவிடர் கழகம் தப்பித் தவறியும் இந்தியத் தேசியத்தை மறுத்தோ தமிழ்நாடு விடுதலையை முன்வைத்தோ செயல்படுவதில்லை. திமுகவுக்கு வாய்ப்பே இல்லை.

திராவிடத்தின் வரையறையில் உள்ள மற்ற நோக்கங்கள், குறிப்பாக சமூகநீதியும் பெண் விடுதலையும் வெல்லத் தேவையான அரசியல் என்பதே தமிழ்நாடு தமிழருக்கேதான். இதில் மையம் கொள்ளாது போனால் மற்ற நோக்கங்கள் பெயரளவிலேயே நின்று போகும். பெயரளவில் என ஆகும் போது அதன் நோக்கத்தில் அது முழுமையடைவதில்லை. முழுமையடையாது எனில் எதிரிக்கு (இந்திய ஆளும் வர்க்கத்துக்கு) துணை போவது தவிர்க்க முடியாததாகும்.

திராவிடத்தை உயர்த்திப் பிடிப்போர் முன்வைக்கும், செயல்படுத்தும் பல கருத்துகள் திராவிடக் கருத்துகள்தான். ஆனால் இந்தியத் தேசிய மறுப்பைக் கைவிட்டு அதனோடு கூடிக் குலாவுவது எப்படி முழுப்பொருளில் திராவிடமாகும் எனக் கேட்கிறோம். தமிழ்நாடு தமிழருக்கே எனும் அரசியல் முழக்கத்தை உயிர்ப்போடு கொண்டு செல்லாதது எப்படி திராவிடமாகும் எனக் கேட்கிறோம். இந்த முரண்பாட்டைத்தான் எங்கள் இயக்கம் குற்றாய்வு செய்கிறது, இந்த

முரண்பாட்டை நாங்கள் திறந்த மனதுடன் பேச மாட்டோம், முரண்பாட்டை நீக்கிக் கொள்ள மாட்டோம், முரண்பாட்டை மூடிமறைப்போம், முரண்பாட்டுக்குப் பழகி விட்டோம் அல்லது அது இன்று எங்கள் நிலைப்பாடே அன்று என்றால்... இதுதான் இன்று திராவிடம் என்றால் அதன் மண்டை மீது சம்மட்டி கொண்டு அடிப்போம். இந்த முரண்பாட்டை நீக்க முற்பட்டால் அதன் பெயர் பிறகு திராவிடமாக இருக்காது. அதுதான் தமிழ்த் தேசியம்.

சுபவீ அவ்வப்போது சொல்வதுண்டு. நாங்கள் தமிழ்த் தேசியத்தை எதிரே நிறுத்தவில்லை. உண்மையில் திராவிடம்தான் அதற்கு இணக்கமானது. திராவிடம் தமிழ்த் தேசியம் வளருவதையே விரும்புகிறது என்று. அப்படியானால் தமிழ்த்தேசியம் காலத்தின் தேவை என்பதை சுபவீ அவர்கள் மறுக்கவில்லை. தமிழ்த் தேசியம் என்பது தமிழ்த் தேச விடுதலையை அரசியல் கொள்கையாகக் கொண்டிருப்பதாகும். கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிடுகிற வாலாசா வல்லவன் அவர்களின் உரைக்குத் தந்திருக்கிற தலைப்பு திராவிடத் தமிழ்த் தேசியம். தலைப்பாக மட்டும் இல்லாமல் திராவிடத் தமிழ்த் தேசியம் என்பதை சுபவீ அவர்கள் கருத்தியலாகச் சொல்லிப் பறைசாற்றிக் கொள்ளலாமே! திராவிட இயக்கத் தமிழர் பேரவை இருக்கும் போது திராவிடத் தமிழ்த் தேசியம் என்பதை கொள்கை நிலைப்பாடாக அறிவிக்கக் கூடாதா என்ன! இப்படி ஒரு நிலைப்பாட்டுக்கு சுபவீ நேர்மையோடு வருவாரா?

நாம் தமிழர் கட்சி நடத்திய திராவிடரா? தமிழரா? கருத்தரங்கு குறித்தும் அதனை எதிர்த்தும் பேசும் போது திராவிடம் என்பது கருத்தியல் என நிறுவுகிறார் சுபவீ. திராவிடத்துக்கு தனது விளக்கத்தையும் தருகிறார். அந்தக் கருத்தரங்கின் முதன்மைத் தலைப்பான திராவிடரா? தமிழரா? என்பதனை எடுத்து வைத்துப் பேசும் சுபவீ அவர்கள் அந்தத் தலைப்புக்கு இரண்டடி கீழே விடுதலை அரசியல் கருத்தரங்கம் எனக் குறித்திருந்தது குறித்து ஏன் ஒருநாளும் விமர்சித்ததில்லை. நாம் தமிழர் கட்சி தமிழ்நாடு விடுதலையை முன்னெடுக்கும் கட்சியல்ல எனத் தோலுரிக்க என்ன தயக்கம்! இந்திய அரசமைப்பை ஆரத் தழுவிக் கொண்டு இந்திய இறையாண்மையைக் காப்பேன் என சத்தியம் செய்து விட்டு செய்வதெதுவும் விடுதலை

அரசியல் ஆகாது. சீமான் பேசுவது தமிழ்த் தேசியமே அன்று என சுபவீ அவர்கள் சீமானை அம்பலப்படுத்தலாமே! அப்படி ஒருநாளும் விரல்நீட்டிக் கேள்வி கேட்டதில்லை சுபவீ. கேட்டால் அந்த விரல் அவர் கண்ணையே குத்தும். திராவிடம் தமிழ்த் தேசியம் வளருவதை விரும்புகிறது என்றால் விரும்புகிற ஒன்றை வளர்க்க என்ன தடை! அதுவாக வளர்ந்தால் ஆதரிப்பீர்கள், நீங்கள் வளர்க்க மாட்டீர்கள் என்பது கொள்கை நேர்மையாகாது.

தந்தை பெரியார் தமிழ்த் தேசியத்தை வளர்க்கும் இடத்தில் மட்டும் இல்லை. தமிழ்நாடு தமிழருக்கே என்பதை இலட்சிய முழக்கமாகக் கொண்டு இறுதி வரை பாடாற்றினார். தந்தை பெரியாரைத் தவிர்த்து விட்டு திராவிடம் இருக்க முடியாது என்றால் திராவிடம் தமிழ்நாடு தமிழருக்கே என்றல்லவா முழங்க வேண்டும். அதை நோக்கி அல்லவா செயற்பாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும்? அப்படி அல்லாமல் முதல்வர் பதவியில் மு.க.ஸ்டாலின் அவர்களை அமர்த்துவதும் இந்தியத்துக்குக் கங்காணியைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதுமே திராவிடமாகும் என்றால் அப்படிச் செய்யாதவரெல்லாம் பார்ப்பனக் கைக்கூலிகள் என்று இலக்கணம் வகுப்பது திராவிடமாகும் என்றால், அந்தத் திராவிடம் எதிர்க்கத்தக்கதே!

எல்லாப் பட்டறிவுகளையும் கொண்டுதான் நாங்கள் தமிழர், தமிழர் மட்டுமே என்கிறோம். சாதி ஒழிப்பும் தமிழ்நாடு விடுதலையும் எமதிரு கண்கள் என்கிறோம். தமிழ்நாடு தமிழருக்கே எனும் தந்தை பெரியார் கொள்கையை உயர்த்திப் பிடிக்கிறோம். தமிழ் மரபையும் திராவிட இயக்கத்தின் பங்கேற்பையும் உள்வாங்கிக் கிளைத்ததே எமது தமிழ்த்தேசியம். திராவிடத்திடம் கழிவன கழித்து கொள்வன கொண்ட விடுதலை அரசியலே தமிழ்த் தேசியம். எமது இயக்கத்தின் அரசியல் முழக்கத்தோடு நிறைவு செய்வது பொருந்தும்.

"தமிழர் விடுதலைப் போர் முழக்கம் சமூகநீதித் தமிழ்த் தேசம்"

**வறுமை ஒழிப்பு:**

# கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை:

**சமந்தா**

வறுமை என்றால் என்ன? ஒரு தனி நபரோ அல்லது ஒரு குடும்பமோ தனக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்ய இயலாத நிலையை வறுமை எனக் குறிப்பிடலாம். எவையெல்லாம் மனிதர்களுக்கான அத்தியாவசியத் தேவைகளாக உள்ளன. சரிவிகித உணவு, உடை, குடியிருக்க சுகாதாரமான வீடு, தூயக்குடிநீர், தூயக்காற்று, கல்வி, மருத்துவ வசதி, இவற்றை நிறைவு செய்யத் தேவையான வருவாய் தரும் வேலை ஆகியவற்றை அத்தியாவசியத் தேவைகளாகக் குறிப்பிடலாம்.

வறுமை எவ்வாறு அளவிடப்படுகிறது. அத்தியாவசியத் தேவைகளில் உணவு நுகர்வே குறைந்தபட்சத் தேவையாக உள்ளதால் உணவு நுகர்வை அடிப்படையாகக் கொண்ட அளவீட்டுமுறையில் வளரும் நாடுகளில் வறுமை கணக்கிடப்படுகிறது. வளர்ந்த நாடுகளில் வருவாயின் அடிப்படையில் வறுமை கணக்கிடப்படுகிறது.

2020ல், அமெரிக்காவில், 65 வயதிற்குட்பட்ட தனிநபரின் ஆண்டு வருமானம் 12,760 அமெரிக்க டாலர் அல்லது ஒரு நாளைக்கு சுமார் 35 டாலருக்கு குறைவாக இருக்குமானால் அவர் வறுமையானவர் என வரையறுக்கப்பட்டுள்ளது. இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு பேர் கொண்ட குடும்பத்தின் வருவாய் ஆண்டுக்கு 26,200 அமெரிக்க டாலருக்குக் குறைவாகவோ அல்லது ஒரு நாளைக்கு சுமார் 72 டாலருக்குக் குறைவாகவோ இருந்தால் அது வறுமையான குடும்பமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில், சராசரி நிகர வருவாயில் 60 விழுக்காட்டிற்கும் குறைவான வருவாய் கொண்ட ஒரு குடும்பம் ஏழைக் குடும்பமாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில் வறுமை எவ்வாறு அளவிடப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

இந்தியாவின் திட்டக் குழு வறுமைக் கோடு மற்றும் வறுமை விகிதங்களை அவ்வப்போது மதிப்பீடு செய்து வெளியிட்டுவந்தது, இதற்கான தரவுகள் புள்ளியியல், திட்ட அமலாக்க

அமைச்சகத்தின் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO) நடத்தும் குடும்ப நுகர்வோர் செலவினங்களுக்கான மாதிரி கணக்கெடுப்பிலிருந்து பெறப்படுகிறது. இந்த கணக்கெடுப்பு ஐந்தாண்டுக்கு ஒரு முறை செய்யப்படுகின்றன.

சரி, வறுமைக்கோட்டிற்கான அடிப்படை வரையறையை யார் உருவாக்கினர்?.வறுமை குறித்து பேராசிரியர் வி எம் தண்டேகர், பேராசிரியர் நீலகந்த ராத் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டு 1971ல் ஆய்வுக் கட்டுரை வெளியிடப்பட்டது. அவர்களின் பரிந்துரையை திட்டக்குழு வறுமைக் குறியீட்டிற்கான வரையறையாக ஏற்றுக்கொண்டது. இதற்கான குறைந்தபட்சத் தேவைகளை தீர்மானிப்பதற்கான பணிக்குழு 1979ல் நியமிக்கப்பட்டது.இந்திய மருத்துவ கவுன்சில் உணவு ஆராய்ச்சி அட்டவணை அடிப்படையிலான அதன் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.சராசரியாக நாள் ஒன்றுக்கு தேவையான உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட ஆற்றல் நுகர்வு கிராமப்புறத்தில் உள்ள நபர்களுக்கு 2400 கலோரிகளாகவும், நகர்ப்புறத்தில் உள்ள நபர்களுக்கு 2100 கலோரிகளாகவும் நிர்ணயிக்கப்பட்டது. கிராமப்புறங்களில் தினசரி 2400 கலோரி உணவையும், நகர்ப்புறங்களில் தினசரி 2100 கலோரி உணவைப் பெற இயலாத நபர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் என வரையறுக்கப்பட்டது. இது வறுமையின் குறைந்தபட்ச வரையறை மட்டுமே ஏனெனில் உணவு அல்லாத அத்தியாவசிய பொருட்களுக்கான செலவினங்கள் உறைவிடம்,மருத்துவப் பராமரிப்பு, கல்வி,போக்குவரத்து செலவின்ங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. இந்த வரையறையின் அடிப்படையில் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள நபர்கள் பிற உணவல்லாத பொருட்கள், சேவைகளை பெற இயலாமல் பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம். ஆனால் இதே வரையறை தான் இன்றும் இந்தியாவில் வறுமையை அளவிடப் பயன்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை.

டிசம்பர், 2005 இல், திட்டக் குழு, வறுமையை மதிப்பிடுவதற்கான முறையை ஆய்வு செய்ய பேராசிரியர் சுரேஷ் டி. டெண்டுல்கர் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை உருவாக்கியது. சுரேஷ் டெண்டுல்கர் கமிட்டி உணவு, கல்வி, சுகாதாரம், மின்சாரம் மற்றும் போக்குவரத்துக்கான மாதாந்திர செலவினங்களின் அடிப்படையில் வறுமைக் கோட்டை வரையறுத்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

டெண்டுல்கர் முறையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்குத் தேவையான உணவு

மற்றும் பரிந்துரைக்கப்பட்ட ஆற்றல் நுகர்வு அதற்கு முன் இருந்த 2400 கலோரியிலிருந்து 1800 கலோரியாக குறைக்கப்பட்டது. தனிநபர் உணவு நுகர்வில் 600 கலோரிகள் நான்கில் ஒரு பகுதி வெட்டப்பட்டது. டெண்டுல்கர் முறையில் கணக்கிடும் போது அரைப் பட்டினி நிலையிலுள்ளவர்களும் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ளவர்களாகவேக் கணக்கிடப்படுவர்.

2011-12 க்கு, கிராமப்புறங்களில் டெண்டுல்கர் முறையைப் பயன்படுத்தி தேசிய வறுமைக் கோட்டுக்கான தனிநபர் சராசரி மாதாந்திர செலவினம் ரூ. 816 ஆகவும், நகர்ப்புறங்களில் தனிநபர் சராசரி மாதாந்திர செலவினம் ரூ1,000 ஆகவும் மதிப்பிடப்பட்டது. ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு, நுகர்வு செலவினம் கிராமப்புறங்களில் மாதம் ரூ 4,080 ஆகவும் நகர்ப்புறங்களில் மாதத்திற்கு ரூ. 5,000 ஆகவும் மதிப்பிடப்பட்டது.

டெண்டுல்கர் வறுமைக் கோடு மிகக் குறைவாக இருப்பதாக பரவலாக விமர்சனம் செய்யப்பட்ட பின், திட்டக் குழு, ஜூன் 2012 ல், டாக்டர் சி.ரங்கராஜன் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை உருவாக்கி, வறுமையை அளவிடுவதற்கான முறையை மறுபரிசீலனை செய்தது.

வறுமையை அளவிடும் முறையை ரங்கராஜன் தலைமையிலான நிபுணர் குழு மறுபரிசீலனை செய்து 2014ல் திட்டக்குழு ஒரு அறிக்கையை வெளியிட்டது. ரங்கராஜன் குழு அகில இந்திய அளவில் கிராமப்புறங்களில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு தேவையான குறைந்தபட்ச உணவு நுகர்வை 2,155 கலோரிகளாகவும், நகர்ப்புறங்களில் ஒரு நபருக்கான குறைந்தபட்ச உணவு நுகர்வை 2,090 கலோரிகளாகவும் நிர்ணயித்துள்ளது. இது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வறுமைக்கோட்டு வரையறையை மேலும் நீர்த்துப் போகச் செய்துள்ளது என்ற போதும் டெண்டுல்கர் குழு பரிந்துரைக்கும் 1800 கலோரிகளை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ரங்கராஜன் குழு வறுமைக் கோட்டிற்கான தினசரி தனியாள் நுகர்வு செலவினத்தை கிராமப்புறங்களுக்கு ரூ .27 (டெண்டுல்கர் முறை-2009-10)லிருந்து ரூ .32 ஆக 18.5% உயர்த்தியது, நகர்ப்புறங்களுக்கான நுகர்வு செலவினத்தை ரூ .33 லிருந்து ரூ .47 ஆக 42% உயர்த்தியது.

ரங்கராஜன் குழு அகில இந்திய அளவில் வறுமைக்கோட்டிற்கான தனிநபர் நுகர்வு செலவு கிராமப்புறங்களில் 972 ரூபாயாகவும், நகர்ப்புறங்களில் 1407 ரூபாயாகவும் நிர்ணயித்தது. ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கான மாதாந்திர நுகர்வு செலவு கிராமப்புறங்களில் 4860 ரூபாயாகவும்,

நகர்ப்புறங்களில் ரூ. 7035ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டது. உணவல்லாத பிற அடிப்படைச் செலவுகளான வாடகை, உடை, போக்குவரத்து ஆகியவற்றுக்கான செலவு கிராமபுறங்களில் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 277 ரூபாயாகவும், நகர்புறங்களில் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 344 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் குறைவான மதிப்பீடு என்றே கூறவேண்டும்.

ரங்கராஜன் முறையில், 2011-12 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய அளவிலான வறுமை விகிதம் 29.5 விழுக்காடாகவும் 2009-2010 ஆம் ஆண்டிற்கான வறுமை விகிதம் 38.2 விழுக்காடாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இது டெண்டுல்கர் முறையில் கணக்கிடப்பட்ட வறுமைவீதத்திலிருந்து பெரிதும் மாறுபடுகிறது. 2011-12 க்கான வறுமைவீதம் டெண்டுல்கர் முறையால் 21.9 விழுக்காடாகவும், 2009-10ஆம் ஆண்டுக்கான வறுமைவீதம் 29.8 விழுக்காடாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ரங்கராஜன் முறையில் 38.2 விழுக்காடாக உள்ள 2009-10க்கான வறுமை விகிதம் டெண்டுல்கர் முறையில் 29.8 விழுக்காடாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.இரண்டிற்கிடையிலான வேறுபாடு 8.4 விழுக்காடாக உள்ளது.2011-12க்கான வேறுபாடு 7.6 விழுக்காடாக உள்ளது. ரங்கராஜன் முறையை விட டெண்டுல்கர் முறையில் வறுமை குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ரங்கராஜன் குழு 2011-12 ஆம் ஆண்டில் 30.9% கிராமப்புற மக்களும் 26.4% நகர்ப்புற மக்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்ததாகவும், அகில இந்திய வறுமை விகிதத்தை 29.5% எனவும் மதிப்பிட்டுள்ளது. இந்தியாவில், கிராமப்புறங்களில் 26.05 கோடி மக்களும், நகர்ப்புறங்களில் 10.25 கோடி மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்துள்ளனர் என்றும் மொத்தமாக, 2011-12ல் 36.3 கோடி மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருந்தனர் என்றும் மதிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் கிராமப்புறங்களில் 2009-10 ல் 39.6% லிருந்து வறுமை விகிதம் 2011-12ல் 30.9% ஆகக் குறைந்துள்ளதாகவும், நகர்ப்புற இந்தியாவில் 35.1% லிருந்து 26.4% ஆக குறைந்துள்ளது. இரண்டு ஆண்டுகளில் கிராமப்புறங்களிலும், நகர்புறங்களிலும் வறுமைவிகிதம் 8.7 விழுக்காடு குறைந்துள்ளது!. அகில இந்திய வறுமை விகிதம் 38.2% லிருந்து 29.5% ஆக குறைந்துள்ளது. இந்த காலகட்டத்தில், 9.16 கோடி மக்கள் வறுமையிலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கணக்கிட்டுள்ளது.

டெண்டுல்கர் முறையின் படி 2011ல் இந்தியாவில் 26.93 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக்

கீழே உள்ளனர்.இதில் நகர்புறத்தில் உள்ள ஏழைகளின் எண்ணிக்கை 5.28 கோடி, கிராமப்புறத்தில் உள்ள ஏழைகளின் எண்ணிக்கை 26.93 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. 2004-05ல் 40.7 கோடியாக இருந்த வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை 7 ஆண்டுகளில் 26.93 கோடியாகக் குறைந்துள்ளது. 13.7 கோடி மக்கள் வறுமைக் கோட்டிலிருந்து விடுவிக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ரங்கராஜன் குழு இந்தியாவில் 36.3 கோடி மக்கள் அல்லது 29.6 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளதாக மதிப்பிட்டுள்ளது. சுரேஷ் டெண்டுல்கர் குழு 26.98 கோடி மக்கள் அல்லது 21.9 சதவிகிதம் விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளதாக மதிப்பிட்டுள்ளது.ரங்கராஜன் முறையுடன் ஒப்பிடும் போது டெண்டுல்கர் முறையில் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் எண்ணிக்கை 6.7 கோடி குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் 2011-12ல் சுரேஷ் டெண்டுல்கர் முறையின் படி கிராமப்புறங்களில் 59.23 லட்சம் நபர்களும், நகர்புறங்களில் 23.40 லட்சம் நபர்களும் மொத்த்த்தில் 82.63 லட்சம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளதாகவும், கிராமப்புறங்களில் வறுமைவீதம் 15.83 விழுக்காடாகவும், நகர்ப்புறங்களில் 6.54 விழுக்காடாகவும் மொத்தத்தில் தமிழ் நாட்டளவில் வறுமை விகிதம் 11.28 விழுக்காடாகவும் கணக்கிடபட்டுள்ளது.

ரங்கராஜன் முறையில் 2011-12ல் தமிழ் நாட்டில் கிராமப்புறங்களில் 91.1 லட்சம் பேர், நகர்ப்புறங்களில், 72.8 லட்சம் பேரும், தமிழ்நாடு முழுவதிலும் 163.9 லட்சம் பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழிருப்பதாகவும், கிராமப்புறங்களில் வறுமை விகிதம் 24.3 விழுக்காடாகவும், நகர்ப்புறங்களில் 20.3 விழுக்காட்டினரும் தமிழ்நாடு முழுவதற்குமான வறுமை விகிதம் 22.4 விழுக்காடாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

கௌரவ் சவுத்ரி ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேட்டிற்கு எழுதியக் கட்டுரையில் இந்தியாவின் வறுமைக் கோடு மிகக் குறைவாக இருப்பதை ஒரு ஒப்பீடு காட்டுகிறது என்கிறார். உதாரணமாக, தென்னாப்பிரிக்காவில் மூன்று வறுமைக் கோடுகள் உள்ளன - 1.உணவு, 2.நடுத்தரம் மற்றும் 3.மேல்நிலை - இவை மூன்றுமே இந்தியாவை விட உயர்ந்தவை. தென்னாப்பிரிக்காவில் உணவு வறுமைக் கோடு 2010 இல் மாதந்தோறும் 1,841 ரூபாயாகவும், நடுத்தர வறுமைக் கோடு 2,445 ரூபாயாகவும், மேல் வறுமைக் கோடு 3,484 ரூபாயாகவும் உள்ளது. ஒரு கிராமப்புற

ருவாண்டியனின் தனிநபர் வறுமைக் கோடு மாதத்திற்கு 892 ரூபாயாகும் இது கிராமப்புற வறுமைக்கோட்டிற்கான இந்திய அளவுகோலான 816 ரூபாயை (டெண்டுல்கர் முறை) விட அதிகம். மேலும் ருவாண்டாவில் உணவுப் பொருட்களின் விலைகள் இந்தியாவை விட குறைவாக இருப்பதை மறந்துவிடக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஒரு கேள்வி எழக்கூடும் டெண்டுல்கர் முறையில் வறுமைக்கோடு தவறாக மதிப்பிடப்பட்டுள்ளது அதற்கு முன்னர் எவ்வாறு அளவிடப்பட்டது? டெண்டுல்கர் முறைக்கு முன் வறுமைக்கோடு சரியான முறையில் தான் அளவிடப்பட்டிருக்கும் என்று கருதுவோமானால் அதுவும் தவறு. பொருளியலாளர் உத்சா பட்நாயக் இது குறித்து 2006ல் இந்தியாவில் 2006இல்இந்தியாவில் “வறுமையும் புதுத்தாராளியமும்” என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக்கட்டுரையை வெளியிட்டுள்ளார்.

1990களில் நவீன தாராளமயக் கொள்கைகளின் அடிப்படையில் பொருளாதாரச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பிறகு வறுமை பெருமளவில் குறைக்கப்பட்டது போல் பெரும்பாலானோரால் பரப்புரை செய்யப்படுகிறது.1993-4ல் 37.3 விழுக்காடாக இருந்த வறுமை வீதம் 1999-2000ல் 27.3 விழுக்காடாகக் குறைந்ததாக திட்டக்குழு தெரிவித்துள்ளது.நவீன தாராளமயக் கொள்கைகளை மேலும் தொடர்வதற்கு வசதியாகவே வறுமையின் அளவு குறைத்து மதிப்பிடப்படுகிறது என்கிறார் உத்சா பட்நாயக்.

1980களுடன் ஒப்பிடும்போது 1990 களில் பயிர் வளர்ச்சிவிகிதங்கள் பாதியாக குறைந்துவிட்டன, கிராமப்புற வளர்ச்சி செலவினங்களும் குறைக்கப்பட்டன. கிராமப்புற வேலைவாய்ப்பு வளர்ச்சி கடுமையாக வீழ்ச்சியடைந்தது. விவசாயிகளுக்கு வங்கிக் கடன் நிராகரிக்கப்பட்டது. விவசாயிகள் கந்து வட்டிக்கே கடன் பெறும் நிலை பெறுமளவில் காணப்பட்டது. விலைச் சரிவும் ஏற்பட்டது.கடனை திரும்ப செலுத்த இயலாததால் நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.ஆயிரக் கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். விவசாயத் துறையில் ஏற்பட்ட நெருக்கடிகளை வெளிக்காட்டும் இக்குறியீடுகள் கிராமப்புறங்களில் அதிகரித்துள்ள வறுமையையே குறிப்பிடுகின்றன ஆனால் அதற்கு முற்றிலும் முரணுள்ள விதத்தில் வறுமைக் குறைந்துவிட்டது என்று திட்டக்குழு அறிவித்துள்ளதாகக் கூறுகிறார்.

இது ஒரு பெரும் கேள்வியை எழுப்புகிறது வறுமையை மதிப்பிடுவதற்கான அலுவலக முறை தவறானதா, அது வறுமையின் உண்மையான போக்குகளை கண்டறிய தவறியதா? 1997 முதல் பொது விநியோகமுறை குறுக்கப்பட்டு (targetedPDS) 'வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டுமே மலிவு விலை உணவுப் பொருட்கள் அளிக்கப்படுகிறது.வறுமை தவறான முறையில் கணக்கிடப்படுவது லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுவதற்குக் காரணமாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறு வறுமை தவறாக அளவிடப்படுகிறது எனப் பார்த்தோமானால் திட்டக் குழு நுகர்வு செலவினம் அடிப்படையிலான வரையறையைப் பயன்படுத்தி 1973-74ஆம் ஆண்டுக்கு மட்டுமே வறுமைக் கோட்டை அளவிட்டுள்ளது. அதற்கடுத்துள்ள அனைத்து ஆண்டுகளுக்கும் அதே தரவுகளின் முடிவுகளை விலைக் குறியீட்டின் அடிப்படையில் முன்னொக்கி மதிப்பிடுவதன் மூலம் அளவிட்டுள்ளது. அதாவது வறுமைக்கோடு எந்த ஆண்டிற்கு அளவிடப்படவேண்டுமோ அந்த ஆண்டின் விலையில் 1973-74ஆம் ஆண்டிற்கான நுகர்வு கணக்கிடப்பட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் நுகர்வுச் செலவுத் தரவுகள் பெறப்பட்ட போதும் அவை ஒரு போதும் பயன்படுத்தப்படவில்லை என்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.ஒவ்வொரு ஆண்டும் நுகர்வுச் செலவினங்களிலும், நுகர்வுப் பொருள்களிலும் மாற்றம் ஏற்படலாம், ஆனால் நுகர்வில் ஏற்பட்ட மாற்றம் அளவிடப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. 1973-74ஆம் ஆண்டில் என்ன நுகர்வு செய்யப்பட்டதோ அந்த அடிப்படையிலே சமீபகாலம் வரை வறுமையானது அளவிடப்பட்டுள்ளது. நுகர்வு ஒரு மாறிலியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் விலைவாசி உயர்வால் நுகர்வில் ஏற்பட்ட மாற்றங்கள் அளவிடப்படாமலே புறக்கணிக்கப்பட்டுள்ளன என்கிறார் உத்சா பட்நாயக்.

1999-2000 க்கான அகில இந்திய கிராமப்புற வறுமைக்கோட்டிற்கான நுகர்வு செலவினம் ரூ.327.6 என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதைக் கொண்டு 1890 கலோரிகளை மட்டுமே பெற முடியும். 2400 கலோரிகளை பெறுவதற்கு நுகர்வு செலவினம் 565 ரூபாய் ஆகும். அகில இந்திய நகர்ப்புற வறுமைக் கோட்டிற்கான நுகர்வு செலவினம் ரூ .454 என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ரூ.454ஐக் கொண்டு 1875 கலோரிகளை மட்டுமே பெறமுடியும். 2100 கலோரிகளை பெறுவதற்கான நுகர்வு செலவினம் ரூ.625 ஆகும். 1999-2000 ஆண்டில் வறுமை வீதம் 27.4 விழுக்காடாக

இருந்ததாகத் திட்டக்குழு மதிப்பிட்டுள்ளது. ஆனால் சரியான முறையில் அளவிடும் போது வறுமை வீதம் 74.5 விழுக்காடாக இருந்ததாக உத்சா கணக்கிட்டுள்ளார். கிராமப்புற மக்களில் கிட்டத்தட்ட பாதிபேர் - 47.1 விழுக்காடு அல்லது 37.0 கோடி மக்கள் - உண்மையில் ஏழைகளாக இருந்தும் கூட தவறான கணக்கீட்டால், அதிகாரப்பூர்வமாக வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர் (உத்சா பட்நாயக், 2006).

நகர்ப்புறங்களில் உண்மையான வறுமையின் அளவு 45 விழுக்காடாக இருந்துள்ளது ஆனால் திட்டக் குழுவின் கணக்கீட்டின் படி வறுமையின் அளவு 23.5 விழுக்காடாகக் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.நேரடியாக நுகர்வுத் தரவுகளின் அடிப்படையில் வறுமை வீதத்தைக் கண்டறியாமல் மாறாத நுகர்வுக் கூடையைக் கொண்டு விலைக் குறியீட்டின் மூலம் சுற்றடியாகக் கணக்கிடப்படும் இம்முறையின் மூலம் உண்மையான வறுமையின் அளவு சரியாக மதிப்பீடு செய்யப்படவில்லை.வறுமைக் கோட்டிற்கான நுகர்வு செலவின மதிப்பீட்டிற்கும், பரிந்துரைக்கப்பட்ட கலோரிகளை பெறுவதற்கான நுகர்வு செலவினம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு ஆரம்பத்தில் குறைவாக இருந்த போதும் ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. (உத்சா பட்நாயக், 2006)

வறுமைக் கோட்டிற்கான அலுவலக நுகர்வு செலவின மதிப்பீட்டின் படி 1977-8ல் 2170 கலோரிகள் மட்டுமே பெறமுடியும் (230 கலோரிகள் குறைவு), 1983ல் 2060 கலோரிகளையே பெற முடியும் (340 கலோரிகள் குறைவு), 1993-44ல் 1990 கலோரிகள் மட்டுமே பெற முடியும் (410 கலோரிகள் குறைவு) மற்றும் 1999-00ல் 1890 கலோரிகள் மட்டுமே பெற முடியும் (510 கலோரிகள் குறைவு).
இவ்வாறு மறைமுகமான கணக்கீட்டு முறையின் மூலம் வறுமைக் கோட்டிற்கான தரம் காலப் போக்கில் மேலும் மேலும் குறைக்கப்படுவதன் மூலம் பெரும்பாலான மக்கள் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்ற தவறான முடிவை அடைய வழிவகுத்துள்ளது.

திட்டக்குழு வெளியிட்டத் தரவுகளின் படி 1973 முதல் 1983 வரையிலான பத்தாண்டுகளில் வறுமை வீதம் 56 விழுக்காட்டிலிருந்து 46 விழுக்காடாக 10 புள்ளிகள் குறைந்துள்ளது.1983லிருந்து 1993-4 வரையிலான 10 ஆண்டுகளில் வறுமை வீதம் குறைந்து 46 விழுக்காட்டிலிருந்து 37 விழுக்காடாக 9 புள்ளிகள் குறைந்தது.ஆனால் 1993-4 முதல் 1999-00

வரையிலான ஆறு வருடங்களுக்குள் வறுமை வீதம் 37 விழுக்காட்டிலிருந்து 27 விழுக்காடாக 10 புள்ளிகள் குறைந்துள்ளது.

1983ல் வறுமைக் கோட்டிற்கான சரியான நுகர்வு செலவினம் ரூ .120ஆகவும், 1993-4ல் நுகர்வு செலவினம் ரூ .325ஆகவும்,1999-00ல் நுகர்வு செலவினம் ரூ .565ஆகவும் கணக்கிட்டிருக்கவேண்டும். உண்மையான வறுமை வீதம் 1983ல் 40 விழுக்காடாகவும், 1993ல் 58 விழுக்காடாகவும்,1999-00ல் 72 விழுக்காடாகவும் இருந்துள்ளது.

1999-2000ல் தமிழ்நாட்டில் கிராமப்புற நுகர்வோரின் வறுமைக்கோட்டிற்கான செலவினம் 308 ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 308 ரூபாயின் மூலம் 1510 கலோரிகளை மட்டுமே பெறமுடியும், இது பரிந்துரைக்கப்பட்ட 2400 கலோரி மதிப்பை விட 900 கலோரி குறைவானது.

சரி 1973-74ஆம் ஆண்டிலாவது வறுமைக்கோடு சரியாக அளவிடப்பட்டதா என்றால் அதுவும் இல்லை.1973-74ஆம் ஆண்டு கலோரி நுகர்வுத் தரவுகள் வெளியிடப்படவில்லை மேலும் இது வெறும் 9 மாத தேசிய மாதிரி கணக்காய்வையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது ஆரம்பத் தரவுகளிலேயே வெளிப்படைத் தன்மை இல்லாத நிலையையே குறிப்பிடுகிறது. 1970-71 தேசிய மாதிரி கணக்காய்வுத் தரவினை ஆய்வு செய்தபோது கிராமப்புறங்களில் 72 விழுக்காட்டினரால் 2400 கலோரிகளுக்கு குறைவாகவும், நகர்ப்புறங்களில் 54 விழுக்காட்டினரால் 2200 கலோரிகளுக்கு குறைவாகவும் ஆற்றல் நுகர்வைப் பெறமுடிந்தது. அதாவது கிராமப்புறங்களில் 72 விழுக்காட்டினரும், நகர்ப்புறங்களில் 54 விழுக்காட்டினரும் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்துள்ளனர்.இது 1973-74 ஆம் ஆண்டுக்கு அதிகாரப்பூர்வமாக மதிப்பிடப்பட்ட 56.4 விழுக்காடு வறுமைவீதம் சரியானதல்ல என்பதையே குறிப்பிடுகிறது.அந்த ஆண்டுகளில் உணவுப்பொருட்களின் விலைவாசி கடுமையாக உயர்ந்திருந்தது, ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலைமையில் விலை எதிர்ப்பு இயக்கம் ஏற்பட்டிருந்தது ஆகையால் மூன்று ஆண்டுகளில் வறுமைவீதம் 72 விழுக்காட்டிலிருந்து 56.4 விழுக்காடாகக் குறைவதற்கு சாத்தியமேயில்லை. வறுமைவீதம் மிக அதிகமாக 72 விழுக்காடு இருந்ததால், இந்தத் தரவுகள் வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டிருக்கலாம்.1973-74ல் 56.4 விழுக்காட்டினரால் 2200 கலோரிகளுக்கு குறைவாகவே பெறமுடிந்தது. ஆக முதன்முதலில் அளவிடப்பட்ட வறுமைவீதமும் 2400 கலோரி நெறிமுறையை பின்பற்றி மதிப்பிடப்படவில்லை என்பது தெளிவு.இவ்வாறு 2400 கலோரி

நெறிமுறையை நீர்த்துப் போகச்செய்வதன் மூலமே வறுமையின் அளவு குறைவாக காட்டப்பட்டுள்ளது.

1973-4 முதல் இந்தியாவின் திட்டக்குழுவால் இந்தத் தவறு இழைக்கப்பட்டது. 1993 நிபுணர் குழவும் அதே தவறான முறையையே பரிந்துரைத்துள்ளது.இதை விமர்சனமற்ற முறையில் பல பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். (உத்சா பட்நாயக், 2006)

இந்தியாவில் வறுமையின் அளவு கடைசியாக அதிகாரப்பூர்வமாக திட்டக்குழுவால் மதிப்பிடப்பட்டு 2011-12ல் 21.92 விழுக்காடாக அறிவிக்கப்பட்டது. இது டெண்டுல்கர் குழுவின் அணுகுமுறையைப் பின்பற்றி மதிப்பிடப்பட்டது. இன்றும் அரசு தரப்பில் இந்தியாவின் வறுமைவிகிதம் 21.92 விழுக்காடாகவே குறிப்பிடப்படுகிறதே தவிர ரங்கராஜன் குழு மதிப்பிட்ட 29.5 விழுக்காடு குறிப்பிடப்படுவதில்லை.

பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 2015ல் திட்டக்குழுவிற்கு மூடுவிழா நடத்தப்பட்டது. அதற்கு பதிலாக நவீன தாராளமய ஊதுகுழலான நிட்டி ஆயோக் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. வறுமையை அளவிடும் பணி தற்போது நிட்டி ஆயோக்கையே சார்ந்துள்ளது.

2015ல், நிட்டி ஆயோக் அதன் அப்போதைய துணைத் தலைவர் பேராசிரியர் அரவிந்த் பனகாரியாவின் தலைமையில் வறுமைக்கான ஒரு பணிக்குழுவை அமைத்தது.வறுமை கோடு அவசியமா என்பது குறித்து அக்குழு விவாதித்ததாம்!.

வறுமைக் கோடு மற்றும் வறுமை விகிதம் மூன்று சாத்தியமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளன என்று நிதி-அயோக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1. ஏழைகளை அடையாளம் காணுதல்; 2. மாநிலங்கள் முழுவதும் வறுமை எதிர்ப்பு திட்டங்களுக்கான செலவின ஒதுக்கீடு செய்தல் 3. காலப்போக்கில் வெவ்வேறு பகுதிகளில், பிராந்தியங்களில் வறுமையைக் கண்காணித்தல் ஆகியவையே அதன் மூன்று பயன்பாடுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வறுமையிலிருந்து மக்களை வெளியே கொண்டுவரப்படவேண்டும் என்பதே நோக்கமாக இருந்தால் தினம் இரண்டு வேளை மட்டுமே உணவு பெறும் கடும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களை கண்டறியும் வகையில் வறுமைக்கோட்டின் வரையறையை மேலும் கீழே குறைக்கவேண்டும் என்ற கருத்தும் நிட்டி ஆயோக்கால் முன்வைக்கப்படுகிறது.

வறுமைக்கோட்டை உயர்மட்டத்தில் நிர்ணயித்தால் குறிப்பிடத்தக்க வாழ்வாதாரத்தை அடைந்த அரசு திட்டங்களின் பயனாளிகளை மட்டுமே அடையாளம் காணமுடியுமே தவிர தீவிர வறுமையைக் குறைக்க உதவாது என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.கடும் வறுமையில் உள்ள குடும்பங்களை கண்டறிந்து கண்காணிக்க வேண்டும் எனில் வறுமைக்கோட்டிற்கான வரையறையை குறைக்கவேண்டும் என்பது உண்மையில் வறுமையைப் போக்கப் பயன்படாது, வறுமையின் அளவை செயற்கையாகக் குறைத்துக் காட்டுவதற்கு மட்டுமே பயன்படும்.

இந்திய அரசின் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம் (NSSO) ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளும் தேசிய மாதிரி கணக்கெடுப்பு சுற்றுகளின் நுகர்வோர் செலவின தரவுகளிலிருந்து வறுமை கணக்கிடப்படுகிறது. இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களின் நுகர்வு செலவு முறைகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படுகிறது.இதில் உணவு மற்றும் உணவு அல்லாதவை) மற்றும் சேவைகளுக்கான சராசரி செலவினங்களை அறியப்பெறலாம்.நுகர்வு செலவு கணக்கெடுப்புகளின் மூலம் மக்களின் நுகர்வுமுறை, வாழ்நிலை, குடும்பங்களின் நல்வாழ்வு குறித்து அறிவதற்கும், அரசு அமைப்புகளின் திட்டமிடல் மற்றும் கொள்கை உருவாக்கத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. வறுமைக் கோட்டு நுகர்வுசெலவினத்தை விடக் குறைவான நுகர்வு செலவினத்தைக் கொண்டிருக்கும் குடும்பம் ஏழைக் குடும்பம் என வரையறுக்கப்படுகிறது.

இந்தியாவில் தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பின் 2017-18ஆம் ஆண்டிற்கான 75ஆம் சுற்றின் தரவுகள் வெளியிடப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. 2019 நவம்பரில் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (Mospi) தேசிய புள்ளியியல் அலுவலக நுகர்வோர் செலவு கணக்கெடுப்பின் 75 வது சுற்றின் தரவு மற்றும் அறிக்கைகள் வெளியிடப்படாது என்று அறிவித்தது.

"நுகர்வு முறையின் அளவுகளில் மட்டுமல்லாது, அதன் போக்கிலும் நிர்வாக தரவு ஆதாரங்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் அதிகரித்துள்ளதால் அவற்றை வெளியிடவில்லை என அமைச்சகம் அதிகாரப்பூர்வ விளக்கம் அளித்துள்ளது. 2023 க்குள் திருத்தப்பட்ட அறிக்கையை வெளியிடுவதாகக் கூறி, கணக்கெடுப்பின் முடிவுகளை வெளியிடாமல் வைத்துள்ளது.

ஆனால் இதற்குப் பின் ஒழிந்துள்ள உண்மையான காரணம் என்ன?, இந்த அறிக்கை தரவுகளின் உண்மையால் பாஜக அரசின் மீதான மக்களின் நம்பிக்கை பாதிக்கப்படக்கூடும் என்று அஞ்சியதாலே இந்த அறிக்கையை வெளியிடவிடாமல் தடுத்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள 200 க்கும் மேற்பட்ட அறிஞர்கள் 75வது சுற்றின் தரவுகளை வெளியிடுமாறு கோரிக்கை விடுத்த பின்பும் நுகர்வோர் செலவின கணக்கெடுப்பு தரவுகள் வெளியிடப்படவில்லை.

2011-12க்கும் 2017-18 க்கு இடைப்பட்ட காலத்தில் மக்களின் உண்மையான நுகர்வு செலவினம் குறைந்துள்ளது. இது பாஜக ஆட்சியில் இருந்த காலம். கசிந்த அறிக்கையின்படி, இந்திய மக்களின் உண்மையான மாதாந்திர தனி நபர் நுகர்வு செலவினம் 2011-2012ல் 1,501 ரூபாயிலிருந்தது 2017-2018ல் 1,446 ரூபாயாக 3.7% சரிந்துள்ளது. கிராமப்புறங்களில் நுகர்வு செலவினம் 8.8% குறைந்துள்ளது, நகர்ப்புற குடும்பங்களில் நுகர்வு செலவினம் 2% அதிகரித்துள்ளது. 2011-12 மற்றும் 2017-18 க்கு இடையில் வறுமையின் அளவு அதிகரித்திருத்திருப்பதையே இது குறிப்பிடுகிறது.

இதற்கு முன்னர் நுகர்வு செலவினம் 1960-66க்கு இடைப்பட்ட உணவு நெருக்கடியின் போதும், 1973-74ன் போதும் குறைந்துள்ளது என்று பொருளியலாளர் ஹிமான்சு குறிப்பிடுகிறார். 2011-12 முதல் 2017-18 காலகட்டத்தில் பொருளாதார வளர்ச்சி ஆறு விழுக்காட்டிற்கு மேல் இருந்துள்ள போது நுகர்வு செலவினம் குறைந்துள்ளதற்கு பாஜகவின் மக்களுக்கு அநீதியான கொள்கை நடைமுறைகளே காரணம் எனக் குறிப்பிடமுடியும்.

தாங்கள் ஆட்சியில் இருக்கும் போது வறுமைவீதம் அதிகரித்துள்ள உண்மையை வெளியிட பாஜக அரசு விரும்பவில்லை என்பதாலே புள்ளியியல் அறிக்கையை வெளியிடாமல் தடுக்கும் அளவிற்கு கேடுகெட்ட நிலைக்குச் சென்றுள்ளது பாஜக அரசு.இதனால் இந்தியாவின் வறுமைவிகிதமும், வறுமைக்கோடும் புதுப்பிக்கப்படாமல் 2011ஆம் ஆண்டின் தவறான டெண்டுல்கர் முறை வறுமைவீதமே இன்றும் இந்தியாவின் வறுமைவீதமாக குறிப்பிடப்படும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் வறுமையை அளவிடுவதற்காக பல பரிமாண வறுமை குறியீடு (MPI)

பயன்படுத்தப்பட்டுவருகிறது. 2010ல் ஆக்ஸ்போர்ட் வறுமை, மனித மேம்பாட்டு முன்னெடுப்பு, ஐநா வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக இக்குறியீடு உருவாக்கப்பட்டது. 2018லிருந்து எல்லா வடிவங்களிலும் எல்லா இடங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற வளங்குன்றா வளர்ச்சிக்கான முதல் குறிக்கோளை (SDG1) நடைமுறைபடுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் இந்த பல பரிமாண வறுமைக் குறியீடே பயன்படுத்தப்பட்டு வருகிறது. மக்கள் சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரத்தில் எவ்விதமான குறைபாடுகளைக் கொண்டுள்ளனர் என்பதை மதிப்பிடும் 10 குறிகாட்டிகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் இக்குறியீடு, எத்தனை பேர் வறுமையில் உள்ளனர் என்பதையும், அவர்களின் வறுமையின் தீவிரம் என்ன என்பதையும் உள்ளடக்கியவாறு கணக்கிடப்படுகிறது.

இந்தியாவில் உலகளாவிய பல பரிமாண வறுமைக் குறியீட்டை கணக்கிடும் பொறுப்பு நிதி அயோக்கிற்கு அளிக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் முன்னேற்றத்தை கண்காணித்தல், மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் தரவரிசை மற்றும் செயல்திறனை மதிப்பாய்வு செய்தல், சீர்திருத்த செயல் திட்டங்களை தயாரித்தல் ஒரு உள்நாட்டு தேசிய பல பரிமாண வறுமைக் குறியீடை உருவாக்குவது ஆகியவற்றை செய்ய நிட்டி ஆயோக் பணிக்கப்பட்டுள்ளது.

நிட்டி ஆயோக் பல பரிமாண வறுமைக் குறியீட்டு ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்துள்ளது.பல பரிமாண வறுமைக்குறியீட்டின் அடிப்படையில் மாநிலங்களை தரவரிசைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநிலங்கள் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தவேண்டும் என்ற அடிப்படையிலேயே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள பல பரிமாண வறுமையின் சவால்களை எதிர்கொண்டு சீர்திருத்த செயல்பாட்டுத் திட்டங்களை உருவாக்கும் நோக்கத்திற்காக நிட்டி ஆயோக் அமைச்சகங்களுக்கிடையேயான பல பரிமாண வறுமைக் குறியீட்டு ஒருங்கிணைப்புக் குழுவை (MPICC) அமைத்துள்ளது. தேசிய பல பரிமாண வறுமைக் குறியீட்டை அளவிடுவதற்கான குறிகாட்டிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் இக்குழுவிடமே உள்ளது.

நிட்டி ஆயோக்கின் வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள்களுக்கான 2019 அறிக்கையில் இந்தியாவின் வறுமையின் அளவு 21.92 விழுக்காடாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. உலகளவில்

பலபரிமாண வறுமைக் குறியீட்டின் 2019,2020ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்தியாவின் வறுமையின் அளவு 27.91 விழுக்காடாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டிற்கான தேசியக் குடும்பநலக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இது மதிப்பிடப்பட்டுள்ளது.பல பரிமாண வறுமைக் குறியீட்டின் தரவரிசைப்பட்டியலில் இந்தியா 2018ல் 105 நாடுகளில் 53 வது இடத்திலும், 2019ல் 101 நாடுகளில் 53 வது இடத்திலும், 2020 ல் 107 நாடுகளில் 62 வது இடத்திலும் உள்ளது.

நிட்டி ஆயோக்கை சார்ந்த மேம்பாட்டு கண்காணிப்பு, மதிப்பீட்டு அலுவலகத்தைச் சேர்ந்த வேணுகோபால் மோத்கூர், நினா பட்கையன் ஆகியோர் தேசிய மாதிரி கணக்கீட்டு அலுவலகத்தின் -71 மற்றும் -75 சுற்றின் தரவுகளைப் பயன்படுத்தி இந்தியாவின் பல பரிமாண வறுமைக் குறியீட்டை மதிப்பிட்டுள்ளனர். இவர்களது ஆய்வுக் கட்டுரை ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம்- உலக பொருளாதார மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் 2021 ஜனவரியில் வேலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.ஆனால் இந்த அளவீட்டில் உணவு நுகர்வு விலக்கப்பட்டுள்ளது, அதாவது உணவு நுகர்வு வறுமைக்கான அளவீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

இந்த பல பரிமாண வறுமைக் குறியீட்டில் வருவாய், சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவை ஒவ்வொன்றும் ¼ பங்களிக்கின்றன. இந்தக் குறியீட்டில் நான்கில் ஒரு பகுதி வருவாயை அடிப்படையாகக் கொண்டது. இதில் வருவாய் டெண்டுல்கர் முறையின் வறுமைக் கோட்டின் மாதாந்திர செலவினத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சுகாதார மேம்பாடு ஏற்பட்டதன் விளைவாக நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 2014-15ல் 17.68 விழுக்காடாக இருந்தது 2017-18ல் 12.85 விழுக்காடாகக் குறைந்துள்ளதாகவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.2014லிருந்து 2018 வரை மூன்று ஆண்டுகளில் அகில இந்திய அளவில் 14.40 கோடி மக்கள் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் பல பரிமாண வறுமைவீதம் 26.9 விழுக்காட்டிலிருந்து 13.75 விழுக்காடாகக் குறைந்துள்ளதாகவும் இந்த அறிக்கையில் மதிப்பிடப்பட்டுள்ளது.கோவிட் -19 தாக்கத்தால் இந்தப் பலன்களில் தலைகீழ் மாற்றத்திற்கு வழிவகுக்கலாம், வறுமை 2014-15-க்கு முந்தைய நிலைக்கு உயரும் நிலையும், கிராமப்புறங்களில் வறுமை மிகவும் அதிகமாக உயரும் நிலை ஏற்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே நடைமுறையிலுள்ள வறுமைக்கோட்டுக்கான வரைமுறையை நீர்த்துப் போக செய்யும் விதத்தில் பல பரிமாண வறுமைக்குறியீட்டை பயன்படுத்தும் போக்கு காணப்படுகிறது.உணவு நுகர்வுசெலவினம் அடிப்படையிலான வறுமைக்கோட்டை கணக்கிட்டு அதனுடன் கூடுதலாக பல பரிமாண வறுமைக் குறியீட்டை அளவிடுவதே வறுமையின் அளவை சரியாக மதிப்பிடுவதற்கும், அதைக் குறைப்பதற்கான கொள்கை, செயல்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் உதவுமே தவிர வறுமைக்கோட்டை, பல பரிமாண வறுமைக் குறியீட்டால் பதிலீடு செய்வது வறுமையைக் குறைத்து மதிப்பிடவே பயன்படும். பட்டினி கிடந்து கல்வி பெறுவதையும், பட்டினி கிடந்து வாடகை கட்டுவதையும், பட்டினி கிடந்து அத்தியாவசியப் பொருட்களையும்,சேவைகளையும் பெறுவதையும் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதற்கான குறியீடுகளாக ஒரு போதும் கருத முடியாது.

ஆரம்பத்தில் திட்டக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வறுமைக்கோட்டிற்கான் 2400 கலோரி நுகர்வு நெறி 1974ல் 2200 கலோரி அளவுக்கே மதிப்பிடப்பட்டது.பின்னர் காலப்போக்கில் 1890 கலோரி அளவுக்குக் குறைக்கப்பட்டது, அதன் பிறகு டெண்டுல்கர் முறையில் அது 1800 கலோரியாகக் குறுக்கப்பட்டது.இப்பொழுது கணக்கிடப்படும் பல பரிமாண வறுமைக் குறியீட்டை அளவிடுவதற்கு உணவு நுகர்வு தரவுகள் அறவே பயன்படுத்தப்படவில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்று ஒரு பழமொழி உண்டு அதற்கு மிகப் பொருத்தமான வரையறையாக இந்தியாவின் வறுமைக்கோட்டிற்கான அளவுகோல் உள்ளது.

இந்தியா மொத்த உள் நாட்டுப் பொருளாக்க மதிப்பில் 5வது இடத்தில் உள்ளது. உலகின் ஐந்தாவது மிகப்பெறும் பொருளாதாரமாக இந்தியா கருதப்படுகிறது. வளரும் நாடுகளின் பட்டியலில் உள்ள இந்தியா தனி நபர் வருவாய் அடிப்படையில் 128வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் வறுமையைக் குறைப்பது அரசின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது.ஆனால் இந்திய அரசு எவ்வாறு வறுமையைக் குறைத்துள்ளது என்றால் வறுமைக்கான அளவீட்டைக் அடிமட்டமாகக் குறைப்பதன் மூலம் கோடிக்கணக்கான வறிய ஏழை மக்களையும் அரசு திட்டங்களுக்கு பயனாளர்களாகத் தொடராத வண்ணம் வறுமைக் கோட்டிற்கு மேலே தள்ளியுள்ளது.இது வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கை அல்ல, இந்திய

அமைப்புமுறையில் வறுமையை நீடிக்கச் செய்வதற்கான நடவடிக்கையே.

இந்தியாவில் பொருளாதாரத்தை வேகமாக வளரச் செய்தல், வறுமையைப் போக்குவதற்கான சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துவதே வறுமையை போக்குவதற்கான இரட்டை உத்தியாகக் கருதப்படுகிறது. ஆனால் நவீனதாராளமய கொள்கைகளின் அடிப்படையில் சமூகத்திட்டங்களுக்கும், பொதுத்துறைகளுக்குமான அரசு செலவினங்களை இந்திய அரசு மேலும் மேலும் குறைத்துக்கொண்டே உள்ளது. இதனால் இந்தியாவில் வறுமையின் அளவு குறையவில்லை மாறாக அதிகரித்தே உள்ளது. பொருளாதாரச் சமமின்மையின் அதீத உயர்வும் வறுமை அதிகரிக்கும் போக்கையே சுட்டிக் காட்டுகிறது. ஆனால் வறுமையின் அளவு அரசு தரப்பு அளவீடுகளால் பெருமளவு குறைத்தேக் காட்டப்படுகிறது. அரசின் அடிமட்ட வறுமைக் கோட்டு வரையறை பல கோடிகணக்கான மக்களை வறுமையிலிருந்து வெளியேற்றியதாகக் காட்ட ஆளுங்கட்சிகளின் ஊழல் அரசியலுக்கே உதவியுள்ளது.

கோவிட்-19 தொற்றுநோய் தாக்குதலுக்குப் பின் பொருளாதார முடக்கத்தினாலும், வேலையின்மை, வருவாய் இழப்பு, சுகாதாரச் செலவுகள், விலைவாசி உயர்வினால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கோவிட் தாக்கத்தால் அதிகரித்துள்ள பொருளாதார நெருக்கடியால் மேலும் பல கோடிக் கணக்கான மக்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களைக் கண்டறியவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சரியான வறுமைக்கோட்டு அளவுகோலை பயன்படுத்துவது அவசியம். பல பரிமாண வறுமைக் குறியீடு உணவு நுகர்வின் அடிப்படையில் செய்யப்படாதது பெருங்குறைபாடாக உள்ளது. உணவு நுகர்வு செலவினம் மற்றும் உணவல்லாத கல்வி, உறைவிடம்,போக்குவரத்து, சுகாதாரம் ஆகிய அனைத்து அத்தியாவசிய பொருட்கள், சேவைகளுக்கான செலவினங்களை இன்றைய விலைவாசிக்குத் தக்கவாறு மதிப்பிட்டு வறுமைக்கோட்டை மறுவரையறை செய்வது மிகவும் அவசியம். இதில் சரிவிகித உணவின் அடிப்படையில் உணவு நுகர்வு செலவினம் கணக்கிடப்படவேண்டும், சரிவிகித உணவு என்பது வெறும் கலோரி, புரதம்,கொழுப்பு மட்டுமல்ல, அதில் விட்டமின்கள், தாதுஉப்புக்கள் ஆகிய அனைத்து நுண்ணூட்டச்சத்துக்களும் அடங்கும். ஆகவே உணவு நுகர்வு செலவினக் கணக்கீட்டில் விட்டமின், தாதூப்புக்கள் ஆகிய அனைத்து நுண்ணூட்டச் சத்துக்களையும் உள்ளடக்க வேண்டியது மிகவும் அவசியம். தற்போதுள்ள

குறுக்கப்பட்ட பொது விநியோக முறையை தளர்த்தி தேவை அடிப்படையில் அனைவருக்கும் இலவச உணவுப் பொருட்கள் வழங்கும் விதத்தில் பொது விநியோக முறையை செயல்படுத்த வேண்டியது மிக மிக அவசியம். அனைவருக்கும் உணவு பாதுகாப்பையும், வேலைவாய்ப்பையும் வழங்குவதன் மூலமே வறுமையின் அளவைக் குறைக்கமுடியும்.

---

## போலி வறுமை குறைப்பு:

**சமந்தா**

1980களில் உலக வங்கி வறுமைக்கு ஒரு புது வரையறை அளித்தது. வறுமையை ஒழிப்பதே இலக்கு என்ற பெயரில் வறுமைக்கு ஒரு அடிமட்ட அளவுகோலை நிர்ணயித்தது. இது ஒரு நபருக்கான குறைந்த பட்ச தேவைகளையும், அடிப்படையான வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்யும் அடிப்படையில் கூட ஏற்படுத்தப்படவில்லை. உலகின் ஏழை நாடுகளின் தரங்களைப் பயன்படுத்தி உலகின் வறுமைவீதத்தை அளவிட உலகவங்கி முடிவுசெய்தது. உலகின் ஏழ்மையான நாடுகளில் இருந்து தேசிய வறுமைக் கோடுகளை ஆராய்ந்து, வாங்கும் திறன் சமநிலையை (PPP) சர்வதேச அளவில் ஒரு பொதுவான வாங்கும் திறனின் அளவீடாக மாற்றியது. ஆறு ஏழை நாடுகளில் தேசிய வறுமைக் கோட்டின் மதிப்பு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு சுமார் 1 டாலர் மதிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் ஒரு நாளுக்கு ஒரு டாலர் வாங்கும் திறன் சமநிலை என்ற சர்வதேச வறுமைக் கோடு நிர்ணயிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு உலக வளர்ச்சி அறிக்கையில் ஒரு நாளுக்கு ஒரு டாலர் என்ற சர்வதேச வறுமைக்கோடு(WDR) அறிமுகப்படுத்தப்பட்டது. ஒரு நாளைக்கு ஒரு அமெரிக்க டாலர் வாங்கும் திறன் கொண்ட (ppp) வருவாயை பெறுவோர் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர் என்றும் ஒரு டாலருக்கும் குறைவான வாங்கும் திறன் கொண்டோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர் என்றும் வரையறுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் உலகவங்கி 1990ல் உலகின் வறுமை விகிதத்தை 42 விழுக்காடாக கணக்கிட்டது.அதாவது உலகளவில் 40 விழுக்காட்டினர் இந்த வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்துள்ளனர். 2008 முதல், சர்வதேச வறுமைக்கோடு 1.25 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. 2015ல் 1.90 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. இது உயர்வு அல்ல, டாலரில் ஏற்பட்ட மதிப்பிழப்பினால் ஏற்பட்ட அதிகரிப்பே. இது 1990ன் ஒரு டாலர் மதிப்புக்கு நிகரானதே தவிர அதை விட அதிகமானதல்ல. 2011 விலைகளில் 1.90 டாலரின் உண்மையான

மதிப்பு 1990ன் ஒரு டாலர் மதிப்புக்கு நிகரானதே தவிர அதை விட அதிகமானதல்ல.

ரூபாயின் வாங்கும் திறன் சமநிலை என்றால் என்ன. ஒரு நாணயத்தின் மதிப்பீட்டிற்கு இரண்டு அளவுகோல்கள் உள்ளன. ஒன்று அந்த நாணயத்தின் சந்தைப் பரிவர்த்தனை மதிப்பு (MER), ஒரு அமெரிக்க டாலருக்கு சமமான ரூபாயின் பரிவர்த்தனை-மதிப்பு 2021ல் 73.60 ரூபாய். இன்னொரு அளவுகோலான நாணயத்தின் வாங்கும் திறன் சமநிலை அதன் உள்நாட்டு வாங்கும் திறனின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது (purchasing power parity-ppp). அதாவது ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் வாங்கும் திறனின் மதிப்பு. அமெரிக்காவில் ஒரு டாலரில் வாங்கப்படும் பொருட்களை இந்தியாவில் எத்தனை ரூபாயில் வாங்க முடியும் என்பதன் மதிப்பைக் குறிக்கிறது.2020ஆம் ஆண்டில் ஒரு டாலருக்கு இணையான ரூபாயின் வாங்கும் திறன் சமநிலை 21.990 ஆகும்.இது போல் உலகின் ஒவ்வொரு நாட்டு நாணயத்திற்கும் டாலருடனான வாங்கும் திறன் சமநிலை கணக்கிடப்படுகிறது. உலகவங்கி ஆண்டுதோறும் உலக நாணயங்களின் வாங்கும் திறன் சமநிலை குறித்த தரவுகளை வெளியிடுகிறது.

பொதுவாக அதிக வருவாய் பெறும் வளர்ந்த நாடுகளுடைய நாணயங்களின் பரிவர்த்தனை மதிப்பும், வாங்கும் திறனும் ஏறத்தாழ சமமாகக் காணப்படுகின்றன. ஆனால் வளரும் நாடுகள் மற்றும் ஏழை நாடுகளுடைய நாணயங்களின் பரிவர்த்தனை மதிப்புக்கும், வாங்கும் திறனுக்கும், இடையே அதிக வேறுபாடு காணப்படுகிறது. வளரும் நாடுகள், ஏழை நாடுகள் / குறைந்த வருவாயுடைய நாடுகளில் உழைப்பிற்குக் குறைந்த கூலியே வழங்கப்படும் நிலை உள்ளதால் அங்கே பல பொருட்களையும், சேவைகளையும் மலிவாகப் பெற முடிவதே இதற்கு முக்கியக் காரணமாக அமைகிறது. சர்வதேச அமைப்புகள் நாடுகளுக்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒப்பிடுவதற்கு அவற்றின் தேசிய நாணயங்களின் வாங்கும் திறனைப் பயன்படுத்துகின்றன.

சர்வதேச ஒப்பீட்டு அமைப்பு மூலமாக 3,000 முக்கியமான நுகர்வுப் பொருட்கள், சேவைகள், 30 தொழில்கள், 200 வகையான உபகரணப் பொருட்கள், 15 கட்டுமானத் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு நாணயங்களின் வாங்கும் திறன் மதிப்பு கணக்கிடப்படுகிறது. (விலைக் குறியீட்டின் தலைகீழியே வாங்கும் திறன் ஆகும்). நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான பணவீக்கமும் இதையொத்த முறையிலேயே கணக்கிடப்படுகிறது.

உலக வங்கியின் சர்வதேச வறுமைக்கோடானது வாங்கும் திறன் சமநிலையின் அடிப்படையிலே கணக்கிடப்படுகிறது. 1.9 டாலர் வாங்கும் திறன் சமநிலை என்ற சர்வதேச வறுமைக்கோடு, 1.9 டாலருக்கான ரூபாயின் சந்தை பரிவர்த்தனை மதிப்பான 139.84 ரூபாயைக்(1.9 X 73.6 = 139.84) குறிப்பிடவில்லை (2021ல் ஒரு டாலரின் பரிவர்த்தனை மதிப்பு 73.6 ரூபாய்), 41.781 ரூபாயையே (1.9 X 21.990 = 41.781) குறிக்கிறது. உலகவங்கியின் கணக்கீட்டின் படி தினசரி 42 ரூபாயை மட்டுமே ஈட்டக்கூடிய இந்தியர் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளார் இந்த சர்வதேச வறுமைக்கோட்டை உலகின் மிக வளர்ந்த நாடாகக் கருதப்படும் அமெரிக்காவின் வறுமைக்கோட்டுடன் ஒப்பிட்டால் ஏணி வைத்துக் கூட எட்ட முடியாத அளவுக்கு அதீதமான வேறுபாடு காணப்படுகிறது.சர்வதேச வறுமைக் கோட்டுடன் அமெரிக்காவின் வறுமைக்கோட்டை ஒப்பிட்டுப் பார்ப்போம். அமெரிக்காவில் ஒரு நாளுக்கு,ஒரு நபருக்கான வறுமைக்கோட்டு வறுவாய் 35 டாலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் வறுமைக்கோட்டு வருவாய் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 25 முதல் 38 டாலர் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 35 டாலருக்கான சந்தை பரிவர்த்தனை மதிப்பு 2576 ரூபாய் (35 X 73.6 = 2576). தினசரி 42 ரூபாய் மட்டுமே வருவாய் பெறும் இந்தியர் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளார். தினம் 2500 ரூபாய் வருவாய் பெறும் அமெரிக்கர் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளார். இதை எவ்விதத்தில் நியாயப்படுத்த முடியும்?. ஒரு நாளைக்கு 42 ரூபாயை வைத்துக் கொண்டு என்ன செய்யமுடியும். குறைந்தபட்சம் இருவேளை உணவு பெறுவதற்குக் கூட அது போதாது,முக்கால் பட்டினி, முழு பட்டினி நிலையை குறிப்பிடுவதாகத் தான் சர்வதேச வறுமைக் கோடு உள்ளது. உலகவங்கி இத்தகைய தரந்தாழ்ந்த வறுமைக்கோட்டினை பயன்படுத்துவன் மூலம் வறுமையினைக் மிகவும் குறைத்து மதிப்பிடுகிறது. பல கோடி மக்களை வறுமையிலிருந்து ரட்சித்ததாக பொய்யான பரப்புரையைச் செய்து வருகிறது.

1800ல் 80 விழுக்காடாக இருந்த வறுமைவிகிதத்தை, 1981ல் 42.7 விழுக்காடாகவும், 2017ல் 9.3 விழுக்காடாகக் குறைந்துள்ளதாக உலகவங்கி வெற்றிப் பெருமிதம் கொள்கிறது. நவீனதாராளமய பொருளாதார முன்னேற்றத்தால் உலகின் பெருமளவு வறுமை நீக்கப்பட்டுள்ளதாகவே உலகவங்கி பரப்புரை செய்துவருகிறது. உலகவங்கியின் முடிவுகளையே ஐநாவும் ஒத்துப் பாடி வருகிறது

2000 ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையால் பிரகடனப்படுத்தப்பட்ட எட்டு சர்வதேச வளர்ச்சி இலக்குகள் மில்லினியம் மேம்பாட்டு இலக்குகள் என அழைக்கப்படுகின்றன. செப்டம்பர்

2000த்தில் ஐநாவின் உறுப்பு நாடுகளால் கையெழுத்திடப்பட்ட ஐக்கிய நாடுகளின் மில்லினியம் பிரகடனம், 2015க்குள் வறுமை, பசி, நோய், கல்வியறிவின்மை, சுற்றுச்சூழல் சீரழிவு, பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை கணிசமாகக் குறைக்கும் விதத்தில் எட்டு சர்வதேச இலக்குகளை அடைய உறுதியேற்குமாறு உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தது. 2015க்குள் உலகின் வறுமையில் பாதிக்கு மேல் குறைக்கவேண்டும் என்பதே அதன் முதல் இலக்கு. ஆனால் மில்லினிய இலக்குகள் அடையப்படவேயில்லை. 2015ல் ஐக்கிய நாடுகள் 2030க்குள் 17 வளங்குன்றா மேம்பாட்டு இலக்குகளின் மூலம் வறுமையை ஒழித்து, புவிக்கோளத்தின் அமைதியையும், பாதுகாப்பையும் உறுதிசெய்யவேண்டும் என பிரகடனப்படுத்தியது. எல்லா வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே இதன் முதல் இலக்கு. உலக வங்கியும் 2030 ஆம் ஆண்டிற்குள் தீவிர வறுமையை 3 விழுக்காடு (அல்லது அதற்கும் குறைவாக) குறைக்கவேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்தது.

உலகவங்கியின் 2015ஆம் ஆண்டு கணக்கீட்டின் படி 1.90 டாலர் வாங்கும் திறன் சமநிலை சர்வதேச வறுமைக்கோட்டுக்கு கீழ் 13.4 விழுக்காட்டினர் அல்லது 17.58 கோடி மக்கள் உள்ளனர். உலக வங்கி மூன்று வறுமைக் கோடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. 1.90 டாலர் ஏழை நாடுகளுக்கான வறுமைக்கோடு. கீழ் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கான வறுமைக் கோடு 3.20 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. உலகளவில் இந்த வறுமைக் கோட்டின் கீழ் 50.4 விழுக்காட்டினர் அல்லது 65.98 கோடி மக்கள் உள்ளனர்.மேல் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளுக்கான வறுமைக் கோடு 5.50 அமெரிக்க டாலராக நிர்ணயிக்கப்பட்டது.உலகளவில் 82.3 விழுக்காட்டினர் 1,07.79 கோடி இந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளனர்.

ஆனால் உலக வங்கி வறுமையை பெருமளவு குறைத்து சாதனை செய்ததாகக் காட்டிக் கொள்வதற்கு ஏழை நாடுகளுக்கான வறுமைக் கோட்டினையே பயன்படுத்துகிறது.உலகவங்கியின் 5.50 டாலர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உலகின் 82.3 விழுக்காடு மக்கள் உள்ளனர் என்ற போதும் உலகவங்கி வறுமையை பெறுமளவு குறைத்துவிட்டதாகவே குறிப்பிட்டு வருகிறது.

உலக வங்கி இந்தியாவை கீழ் நடுத்தர வருவாய் (lower middle income) கொண்ட நாடாக வகைப்படுத்தியுள்ளது. கீழ் நடுத்தர வருவாய் கொண்ட நாட்டிற்கான வறுமைக் கோடு 3.2 டாலர்

வாங்கும் திறன் சமநிலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்திய ரூபாயில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு சுமார் 70 ரூபாய் நுகர்வு செலவு என்பதே வறுமைக்கோடாக வரையறுக்கப்பட்டுள்ளது. உலகவங்கியின் ஒரு தனிநபருக்கு ஒரு நாளுக்கான நுகர்வு செலவினமான 70 ரூபாயும் போதாக்குறையானதே. ஒரு நாளைக்கு 75 ரூபாயைக் கொண்டு, உணவு, குடிநீர்,வாடகை,போக்குவரத்து மின்சாரம் ஆகிய அனைத்து செலவுகளையும் நிறைவு செய்ய எப்படிப் போதுமானதாக இருக்கும்?.

2020 ஏப்ரலில் உலகவங்கி வறுமை குறித்து வெளியிட்ட அறிக்கையில் 2000த்தில் இருந்து இந்தியா அறுதி வறுமையைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக உலக வங்கி குறிப்பிடுகிறது.2011-2015 க்கு இடையில், 1.9 சர்வதேச வறுமைக் கோட்டு அளவுகோலின் அடிப்படையில் இந்தியாவின் வறுமை 21.6 விழுக்காட்டிலிருந்து 13.4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டதாகவும், 9 கோடி பேர் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. 2015ல் 17.6 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாகவும் உலகவங்கி குறிப்பிட்டுள்ளது.

உலக மக்கள்தொகையில் 85 விழுக்காட்டினர்(650 கோடி மக்கள்) ஒரு நாளைக்கு 30 டாலருக்கும் குறைவான வருவாயில் வாழ்கிறார்கள் என்று சமீபத்திய உலகளாவிய தகவல்கள் கூறுகின்றன. ஒரு நாளைக்கு 45 டாலர் என்ற உயர் வறுமைக் கோட்டிற்கு கீழ் 92 விழுக்காட்டினர் உள்ளனர். தினமும் 20 டாலர் என்ற கீழ் வறுமைக் கோட்டிற்கும் கீழ் 78 விழுக்காட்டினர் உள்ளனர். இந்த மூன்றில் எந்த அளவுகோலை தேர்வு செய்தாலும் உலகின் முக்கால்வாசி மக்கள் வறுமையில் தான் வாழ்கிறார்கள் என்றும் இவை அனைத்தும் கோவிட் பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன் பெறப்பட்டத் தரவுகள்.கோவிட் தாக்கத்திற்குப் பின் வறுமையின் அளவு மேலும் அதிகரித்துள்ளது. (https://ourworldindata.org)

கோவிட் தொற்றுநோயின் விளைவாக சுமார் 12.0 கோடி மக்கள் வறுமையில் தள்ளப்பட்டனர் என்றும், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இது 15.0 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக உலகவங்கியே குறிப்பிட்டுள்ளது.2030 ஆம் ஆண்டுக்குள் காலநிலை மாற்றத்தால் 6.8 முதல்13.2 கோடி நபர்கள் வறுமைக்கு தள்ளப்படுவர் என்று ஒரு புதிய ஆய்வு மதிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

செத் டோனெல்லி எழுதிய உலகளாவிய வளர்ச்சி பொய். வறுமையையும், சுரண்டலையும் மறைக்க புதியதாராளவாதிகள் எவ்வாறு தரவை திரிக்கின்றனர் என்ற நூலில் உலகவங்கி எவ்வாறு வாங்கும் திறன் சமநிலை தரவுகளை பயன்படுத்தி உண்மையான வறுமையையும், பொருளாதார சமமின்மையையும் மறைத்துவருகிறது என்பதை விவரித்துள்ளார்.

அந்த நூலில் அவர் வெளிப்படுத்தியுள்ள முக்கியமான தகவல்களின் குறிப்புகள் பின்வருமாறு:

வாங்கும் திறன் சமநிலையானது(ppp) சமூக நலனை அளவிடும் குறிகாட்டியாகக் கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் வாங்கும் திறன் சமநிலை உண்மையான பொருளாதார நடவடிக்கையையும் குறிப்பிடவில்லை, சமூக நலனையும் குறிப்பிடவில்லை என்ற போதிலும் கடந்த 25 ஆண்டுகளாக இவற்றை பிரதிபலிக்கும் குறிகாட்டியாகக் கருதப்படுகிறது. இதனால் வறுமையும், பொருளாதார சமமின்மையும் குறைத்து மதிப்பிடப்படுகிறது. இது நவீனதாராளாமயத்தின் கோரங்களை சாதனைகளாகத் திருத்திக் காட்டவே பயன்படுத்தப்படுகிறது. உலகமயமாதலின் வெற்றிப் பெருமிதங்களை பறைசாற்றும் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது (செத் டோனெல்லி).

ஒரு பகுப்பாய்வு கருவியாக வாங்கும் திறன் சமநிலை என்ன செய்துள்ளது? எதை வெளிப்படுத்த வேண்டுமோ அதை மறைத்துள்ளது.மேம்படுத்தவேண்டிய சமூகப் பொருளாதார நிலைகளை மேலும் மோசமாக்கியுள்ளது.வறுமையையும், வளர்ச்சியையும் தவறாக மதிப்பிடுவதற்கே துணைபுரிகிறது.உலகமயமாக்கத்தின் 'சாதனைகள்' வளர்ச்சியின் மூலம் அடையப்படவில்லை. வளர்ச்சியைத் தடுப்பதன் மூலமே பெறப்பட்டுள்ளன(செத் டோனெல்லி).

உண்மையில் நிதி,வர்த்தக தாராளமயத்தின் விளைவாக மூன்றாம் உலகில் நுகர்வோர் பொருள்களின் விலை குறைந்ததன் விளைவாகவே வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான புள்ளிவிவரங்களில் வறுமை குறைந்ததாக வெளியிடப்பட்டு உள்ளது.இந்த விலைக்குறைவு உற்பத்தித் திறனில் அதிகரித்ததால் ஏற்படவில்லை.இவை முதல் உலகத்துடன் ஒப்பிடும் போது மூன்றாம் உலக நாடுகளின் குறைந்த ஜிடிபியுடன் குறைந்த பொருளாக்கத்துடன் தொடர்புடையதாகவே உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1981 முதல் மூன்றாம் உலக நாடுகளின் விலைகளுக்கும், முதல் உலக நாடுகளின் விலைகளுக்கும் இடையில் பெரும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.1980 முதல் மூன்றாம் உலகில் நுகர்வுப் பொருட்களின் விலை வீழ்ச்சியின் போக்கே சமத்துவமின்மை அல்லது வறுமையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு முற்றிலும் காரணமாக உள்ளது என்கிறார் செத் டோனெல்லி. இந்தக் காலகட்டத்தில் உண்மையான வளர்ச்சியோ, நீடித்த மற்றும் நிலையான வறுமைக்குறைவோ அடையப்படவில்லை. மூன்றாம் உலக நாடுகளின் நுகர்வோர் பொருட்களின் விலை வீழ்ச்சியே தோல்வியை மறைத்தது. (செத் டோனெல்லி).

முதல் உலக நாடுகளை விட மூன்றாம் உலக நாடுகளில் நுகர்வு பொருட்களுடன் ஒப்பிடும்போது மூலதனம் மற்றும் இடைநிலை பொருட்கள் மிகவும் விலை உயர்ந்தவையாக உள்ளன. நுகர்வோர் பொருட்கள் விலை சரிவு, உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பு உண்மையான வளர்ச்சிக்கான குறிகாட்டி அல்ல. அவை வளர்ச்சியின் தடைக் கற்களாகவே வரலாற்றில் இருந்து வந்துள்ளன.

1981ல், ஒரு நாளைக்கு ஒரு டாலர்,ஒரு மாதத்திற்கு 32.74 டாலர் என்ற அளவீட்டைப் பயன்படுத்தி, உலகளவில் வறுமையின் அளவு 40 விழுக்காடாக மதிப்பிடப்பட்டது. அதே அளவு விலைகள்(விலைவாசி) நீடித்திருக்குமானால் 2004ல் அதே வாழ்நிலையை பராமரிக்க ஒரு நாளைக்கு 2.4 டாலர் வருவாய் தேவைப்பட்டிருக்கும், அதன் விளைவாக உலகின் வறுமை 54 விழுக்காடாக அதிகரித்திருக்கும்.

உண்மையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், நிரந்தரமாக வறுமையைக் குறைப்பதற்கும், உணவுப் பொருட்களின் மலிவு விலையையோ, நுகர்வோர் பொருட்களின் விலைவாசியை மட்டுமே சார்ந்தது அல்ல.அவற்றின் உற்பத்தி சாதனங்களின் விலை குறைவு, குறிப்பாக மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்களின் விலைக் குறைவைப் /விலை நிலையைப் சார்ந்தததாகவே அமையும் என்கிறார் செத் டோனெல்லி.

உண்மையான மற்றும் நீடித்த வறுமை குறைப்பு என்பது இதன் காரணமாக
ஒரு மேம்பட்ட தொழில்நுட்பத்தையும், திறன் மிக்க உழைப்புச் சக்தியைப் பெறுவதையும் முன் நிபந்தனையாகக் கொண்டுள்ளது. மூன்றாம் உலகின் பெரும்பகுதிகளில் வளர்ச்சியின் மையப் பிரச்சினைக்கு – தீர்வுகாண்பதற்கு மூலதனப்பொருட்களையும், இடைநிலைப் பொருட்களையும்

மலிவாகப் பெறச்செய்வது மிகவும் அவசியம் (செத் டோனெல்லி).

மூலதனப்பொருட்களின் அதிக விலையை வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான புள்ளிவிவரங்கள் குறைத்து மதிப்பிடுகின்றன. இடைநிலை பொருட்கள் அதன் மதிப்பீட்டிலிருந்து முற்றிலும் தவிர்க்கப்படுகின்றன. வாங்கும் திறன் சமநிலை கணக்கீட்டில் முதலீட்டுப் பொருட்கள் உள்ளடக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார முன்னேற்றத்திற்கான முன் நிபந்தனை மூலதனம் மற்றும் இடைநிலைப் பொருட்களை வாங்கும் திறனின் அடிப்படையிலானது, அது நுகர்வுப் பொருட்களை மட்டும் சார்ந்தது அல்ல. மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்களின் விலை வளர்ந்த நாடுகளால் நிர்ணயிக்கப்படுகிறது, இவற்றின் விலை மூன்றாம் உலக நாடுகளில் மிக அதிகமாக உள்ளது. ஆனால் இந்த எதார்த்த நிலையை வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான தரவுகள் வெளிக்கொணரத் தவறிவிட்டன. வாங்கும் திறன் சமநிலை அளவிடப்படும் போது நுகர்வு செலவினங்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டன, உற்பத்தி செலவினங்கள் கணக்கில் கொள்ளப்படுவதில்லை என்பதையும் செத் டோனெல்லி சுட்டிகாட்டியுள்ளார்.

மூன்றாம் உலக நாடுகளின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் இடைநிலை மூலதன பொருட்கள் 50 விழுக்காட்டிற்கு மேல் பங்குவகித்த போதிலும் வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான கணக்கீடுகளில் அவை முற்றிலுமாகத் தவிர்க்கப்படுகிறது இவற்றின் அதிக விலைகள் மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடையாக உள்ளன. மூலதனப் பொருட்கள், நுகர்வுப் பொருட்களுக்கு இடையேயான விலை வேறுபாடு புதிய தாராளமய திறந்த வர்த்தகக் காலத்தில் மிகவும் அதிகரித்துள்ளன. இதனால் பல தென்நாடுகள், வட நாடுகளை சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு புதியக் காலனியாதிக்கம் ஏற்பட்டுள்ளது.

தற்போது மூலதனப் பொருட்கள் மட்டும் அல்லாது நுகர்வு பொருட்களின் விலையும் அதிகரித்து வருவதால் கோடிக் கணக்கான மக்கள் ஆபத்தில் உள்ளனர். அதை எந்தப் புள்ளியியல் கருவி கொண்டும் மறைக்கமுடியாது என்கிறார் செத் டோனெல்லி.

வாங்கும் திறன் சமநிலையால் குறைந்த வருவாய் கொண்ட நாணயங்களின் வாங்கும் திறனை மிகைப்படுத்தப்படுகிறது. வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான அளவீடுகள் வறுமையை பற்றி மட்டுமல்ல, உலக வளர்ச்சியையும் தவறாக மதிப்பிடுவதற்கு வழிநடத்துகின்றன. உலகமயமாதலின் 'சாதனைகள்' தாராளமயத்தால் தூண்டப்பட்ட எந்த புதிய வளர்ச்சியிலிருந்தும்

ஏற்படவில்லை, ஆனால் அவற்றைத் தடுத்ததன் விளைவாகவே ஏற்பட்டுள்ளது. நுகர்வோர் விலைகளின் ஒப்பீட்டளவிலான மலிவு நிலையே ஒரு குறிகாட்டியாகப் பயன்படுத்தி அளவிடப்படுவதால் மட்டுமே இது முன்னேற்றமாகத் தோன்றுகிறது.மூன்றாம் உலக நாடுகளின் நாணயங்களின் அதிக வாங்கும் திறன் சமநிலையின் 'நன்மைகளை மூன்றில் இருபங்கை மூலதனப் பொருள்களுக்கும், நுகர்வுப் பொருள்களுக்கும் இடையிலான விலை வேறுபாடு நீக்கிவிடும் என்கிறார் செத் டோனெல்லி.

இதன் மூலம் வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான புள்ளியியல் தரவுகள் உலக நாடுகளின் வறுமையை குறைத்துக் காட்டுவதற்கும் அவற்றிற்கிடையே காணப்படும் சமூகப் பொருளாதாரச் சமமின்மையை மறைக்கும் திரையாகவும் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிந்தேற்கமுடியும்.

உலகமயமாக்கம், வர்த்தக தாராளமயமாக்கம், ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கும் உலகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவை ஏழைகளின் வாழ்வை மேம்படுத்தி வறுமையை ஒழித்துள்ளது என்றும், இவை ஏழைகளுக்கு நன்மையே செய்துள்ளது என்பதால் தொடர்ந்து ஆதரிக்கப்படவேண்டும் என்று நம்பவைக்கவும், இத்தகையக் கொள்கைகளை இன்று போல் என்றென்றும் உலகளவில் பேராதாரவுடன் கடைபிடிக்கப்படவேண்டும் என்று பரப்புரை செய்தற்காகவுமே இத்தகைய கீழ்த்தரமான வறுமைக்கோட்டை உலகவங்கி நிர்ணயித்துள்ளது.வாங்கும் திறன் சமநிலை அடிப்படையிலான கணக்கீடுகளின் மூலம் வறுமையையும், பொருளாதார சமமின்மையும் மறைத்துவருகிறது.

உண்மையில் வறுமையை ஒழிப்பதற்கு நடப்பில் உள்ள உண்மையான வறுமைவீதத்தை ஒழிவு மறைவில்லாமல் அங்கீகரிப்பதே தொடக்கப் புள்ளியாக அமையும். தவறான மதிப்பீடுகள் புரையோடிப் போயுள்ள உலகின் வறுமையை மேலும் பெருக்கவும், நீடித்திருக்கச் செய்வதற்குமே வழிவகுக்கும். போப் ஃபிரான்சிஸ் முதல் பொருளாதார நிபுணர்கள் வரை நவீனதாராளமயம், உலகமயமாக்கத்தால் ஏற்பட்ட வளர்ச்சியியால் கோடிக்கணக்கான மக்கள் விலக்கப்பட்டு வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர் என்பதில் ஒருமித்தக் கருத்து கொண்டுள்ளனர். ஆனால் உலகவங்கி போன்ற நவீனதாராளமய அமைப்புகளின் ஏய்க்கும் அறிக்கைகளும், போலி அக்கறையும், பாசாங்கும் அதிகரித்துள்ளதே ஒழிய குறைந்தபாடில்லை.

## தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு

பெருந்தொற்றுக்காலம் விரைவில் முடிந்துவிடும் எனக்கொண்டு இயல்பான இயக்கச் செயல்பாடுகளுக்குத் திட்டமிட வேண்டியுள்ளது எனத் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு கருதுகிறது.

பெருந்தொற்றுக் காலத்தை இயன்ற வரை பயனுள்ளதாக்கிக் கொண்டோம். முகில்களின் மேல் அறிவு கொளுத்திய காலமாகவே அதைக் கருதலாம். இணைய வழியில் தோழர் சமந்தாவின் சூழலியல், பொருளியல் வகுப்புகளும், தோழர் தியாகுவின் அரசியல் வகுப்புகளும், நாம் நடத்திய பல்வேறு கருத்தரங்குகளும் அவற்றில் கலந்து கொண்டவர்களின் அறிதலையும் புரிதலையும் வளர்த்துக் கொள்ள உதவின.

அவ்வாறே உரிமைத்தமிழ்த்தேசம் இதழையும் தொடர்ந்து இணையவழியில் வெளியிட்டுஅரசியல், பொருளியல், சூழலியல், வரலாற்றியல் கல்வி புகட்டிவந்தோம்.

என்றாலும் இந்தப்பணிகள் ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே சுருங்கி நின்றதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். பெரும்பாலார் இன்றளவும் இணையத்துக்கும் சமூக ஊடகங்களுக்கும் புறத்தே தான் நிற்கின்றனர். இவர்களைச் சென்றடைய நம் செய்திகளை விரைவில் அச்சுவடிவாக்க வேண்டும். தோழர் சமந்தாவின் சூழலியல் கட்டுரைகளையும், தோழர் தியாகுவின் தமிழ்நாடு இனி பாடக்குறிப்புகளையும், ஈழம் மெய்ப்படும் இடுகைத் தொடரையும் விரைவில் அச்சிலேற்றி நூல் வடிவாக்க வேண்டும். அடுத்தடுத்து மற்றப் பல படைப்புகளுக்கும் நூல்வடிவம் கொடுக்கவேண்டும். நம் பழைய வெளியீடுகளையும் மீள்பதிப்புச் செய்ய வேண்டிய தேவை உள்ளது.

எல்லாவற்றையும் எல்லாரிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் எளியமக்கள்-பதிப்புகளாக வெளியிட வேண்டும். இந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்திட தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது:

தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழுவில் நான்கு உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். மதுரை வழக்கறிஞர் தோழர் நா. கதிர்வேல்அமைப்பாளராகவும், தோழர்கள் பால்ராஜ், அருண்மாசிலாமணி, சுந்தர் ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும், தோழர் தியாகு பதிப்பாசிரியராகவும் பொறுப்பு வகிப்பார்கள்.

**தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு எளியமக்கள்-பதிப்புகள் வெளியிட இயன்றவரை எளிய மக்கள் தரும் நன்கொடைகளையே நம்பியுள்ளது. பணம் அனுப்ப அல்லது**

**வைப்பகக்கணக்கில் செலுத்த:**


**நா. கதிர்வேல், வழக்கறிஞர்,**

**மகராஜன்நகர், 5/242, ஆசிரியர்குடியிருப்பு,**

**விரகனூர், மதுரை 625 009.**

**பேச: 9894913820மின்னஞ்சல்: vel.kathir325@gmail.com**


**Bank Details:**

**N. Kathirvel,**

**Tamilnadu Mercantile Bank,**

**Iravathanallur Branch,**

**Madurai. Account No. 343100050300634 I**

**FSC Code: TMBL0000343**



தமிழ்நாடு தமிழருக்கே உயிர்ப்புள்ள உரிமை முழக்கம்!
கருத்தரங்கம்
அக்டோபர்
31
2021
மாலை 4 மணி,
அண்ணாமலை அரங்கம், தொடர்வண்டி நிலையம் எதிரில் - கோவை
தலைமை
தோழர் வே.பாரதி
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
தொடக்கவுரை
தோழர் காசு.நாகராசன்
தமிழ்நாடு திராவிடர் கழகம்
கருத்துரை
தோழர் தியாகு
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
பேராசிரியர் த.செயராமன்
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்
தோழர் வாலாசா வல்லவன்
மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
98651 07107 - 75503 22018